

# புது சிருஷ்டி 2022

## *New Creation 2022*

### *23rd Nov 7 pm to 26th Nov 1 pm*

| **நாள் 1 –27 நவம்பர் – புதன் கிழமை** | |
|---|---|
| **நேரம்** | **பகுதியின் தலைப்பு** |
| 7:00 PM -8:30 PM | அறிமுகம் 01 – புது சிருஷ்டி - மரித்த பின் பிறப்பு |
| 8:30 PM | இரவு உணவு |

| **நாள் 2 – 28 நவம்பர் - வியாழன் கிழமை** | |
|---|---|
| **நேரம்** | **பகுதியின் தலைப்பு** |
| 6:00 AM - 7:00 AM | காலை தியானம் 02 அடிமையிலிருந்து சுதந்திரவான் |
| 7:00 AM - 9:00 AM | காலை உணவு |
| 9:00 AM - 11:00 AM | பகுதி 03 புதிய சிந்தனை |
| 11:20 AM - 1:00 PM | பகுதி 04 அன்பில் நடப்போம் |
| 1:00 PM - 4:30 PM | மதிய உணவு & இடைவேளை |
| 4:30 PM - 6:00 PM | பகுதி 05 – மோதல்களை சமாளிப்பது எப்படி? |
| 6:00 PM - 8:00 PM | பகுதி 06 – ஒளியில் நடப்போம் |
| 8:00 PM | இரவு உணவு |

| **நாள் 3 – 29th நவம்பர் - வெள்ளிக்கிழமை** | |
|---|---|
| **நேரம்** | **பகுதியின் தலைப்பு** |
| 6:00 AM - 7:00 AM | காலை தியானம் 07 – புதிய குடும்பம் |
| 7:00 AM - 9:00 AM | காலை உணவு |
| 9:00 AM - 11:00 AM | பகுதி 08 – ஞானமாய் நடப்போம் - 01 |

| நாள் 3 – 29th நவம்பர் - வெள்ளிக்கிழமை | |
|---|---|
| 11:20 AM - 1:00 PM | பகுதி 09 ஞானமாய் நடப்போம் – 02 |
| 1:00 PM - 4:30 PM | மதிய உணவு & இடைவேளை |
| 4:30 PM - 6:00 PM | தேநீர் & கேள்வி பதில் |
| 6:00 PM - 8:00 PM | பகுதி 10 – கிறிஸ்தவ குடும்பம் |
| 8:00 PM | இரவு உணவு |

| நாள் 4 - 30th நவம்பர் - சனிக்கிழமை | |
|---|---|
| **நேரம்** | **பகுதியின் தலைப்பு** |
| 6:00 AM - 7:00 AM | காலை தியானம் 11 – புதிய செயல்திட்டம் |
| 7:00 AM - 9:00 AM | காலை உணவு |
| 9:00 AM - 12:00 AM | பகுதி 12 – ஒற்றுமையாய் நடப்போம் |
| 12.00 – 1:00 PM | ஜெபம் மற்றும் புறப்படுதல் |

1. புது சிருஷ்டி ....1
பட்டாம்பூச்சி ....2
புதிய கண்ணோட்டம் - New Perspective ....5
புதிய மனிதன் - New Person....8
புதிய நோக்கம் - New Purpose ....9
புதுமையின் விலை - The Cost of Newness ....13
2. அடிமையிலிருந்து சுதந்திரவான்....15
Slave to Heir ....15
கிருபை என்றால் என்ன?....17
தேவனுக்கு சொந்தமானவைகள் என்னென்ன? ....20
3. புதிய சிந்தனை....27
எப்போது மரித்தீர்கள்? ....35
Responsibility – பொறுப்பு ....38
Resource – ஆதாரங்கள்....41
Reason - காரணம். ....42
Revelation - வெளிப்பாடு. ....44
4. அன்பில் நடப்போம் - Walk in Love....47
5. மோதல்களை தீர்ப்பது – Resolving conflicts....69
இந்த மோதல்களை எப்படி சரி செய்வது?....70
மோதல்களை தீர்த்தல்: ....75
6. ஒளியில் நடப்போம் - Walk in Light....79
1. வேறுபாடு....86
2. குணாதிசயங்கள் - The characteristics....92
3. கற்பனை – The Command....96
4. அழைப்பு - The commission....98
7. புது குடும்பம் ....103
8. ஞானமாய் நடப்போம் பகுதி 1 ....117
மதியீணன் யாரை வழிபடுகிறான்?....118
மதியீனனுக்கு என்ன சம்பவிக்கும்?....120
இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?....122
9. ஞானமாய் நடப்போம் - 02 ....137
குறைந்தபட்ச உரிமைகள் ....140

அவசரம் அவசியம்! ...... 145
தேவனுடைய நோக்கங்கள் / திட்டங்கள் – Lord’s Purposes ...... 151
10. கிறிஸ்தவ குடும்பம் – Christian Home ...... 157
11. புதிய செயல்திட்டம் - New Priorities ...... 161
ஒப்புரவாகுதலின் வார்த்தை என்ன? ...... 162
1. தேவனுடைய சித்தத்தின்படி ஒப்புரவாகுதல் ...... 163
2. கர்த்தருடைய மன்னிப்பின் விளைவாக ஒப்புரவாகுதல் ...... 170
3. விசுவாசத்திற்கு கீழ்படிவதினால் ஒப்புரவாகுதல் ...... 172
4. மாற்றுபலி கொடுக்கப்பட்டதால் ஒப்புரவாகுதல் ...... 174
12. ஒற்றுமையாய் நடப்போம் - Walk in Unity ...... 179
ஒருமனப்பாடு ஒற்றுமை என்றால் என்ன? ...... 183
1. கிறிஸ்துவுக்குள் ஆறுதல் - encouragement in Christ ...... 184
2. அன்பினால் தேறுதல் - consolation of love ...... 185
3. ஆவியின் ஐக்கியம் - fellowship of the Spirit ...... 186
ஒற்றுமை / ஒருமனப்பாட்டின் அடையாளம் - The marks of unity ...... 189
ஒற்றுமையை கொண்டுவரும் வழிகள் ...... 197

# *1. புது சிருஷ்டி*

2 **கொரிந்தியர்** 5:17, இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

*கிறிஸ்தவர்களாய் நாம் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.*

- *நாம் எப்படி இருக்க வேண்டும் என்பது ஒருபுறம்*
- *அல்லது, நாம் எப்படி இருப்போம் என்பது மற்றொருபுறம். இவை இரண்டையும் விட அத்தியாவசியமானது,*
- *இப்பொழுது ஒரு கிறிஸ்தவர்களாய் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதே.*

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் - "**புது சிருஷ்டியாக** இருக்கிறான்."*

*நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற அநேகர், இரட்சிக்கப்படுவதற்கு முன் அவர்கள் எப்படி இருந்தார்களோ அப்படியே தான் இன்னமும் நடந்து கொள்ளுகிறார்கள்.*

*அவர்கள் எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு நாளன்று ஒரு ஆச்சர்யம் காத்திருக்கிறது.*

**மத்தேயு 7:21-23,** 21. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. 22. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். 23. அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

*நீங்கள் ஆண்டவருக்கு முன்பாக நிற்கும்போது, கிறிஸ்து தான் எங்களுடைய ஒரே நம்பிக்கை என்று விசுவாசித்திருந்தீர்களானால் இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் புது சிருஷ்டியாயிருப்பீர்கள்.*

*உங்களிடத்தில் "பழையவை" என்று முத்திரையிடப்பட்டவை "கடந்து போனது / முடிந்து விட்டது", ஏனென்றால் புதியவை வந்துவிட்டது.*

## *பட்டாம்பூச்சி*

*ஒரு பட்டாம்பூச்சி "உருமாற்றம்' (*metamorphosis - *ஒன்றில் இருந்து மற்றொன்றிற்கு முழுமையான மாற்றம்) என்கிற செயல்முறை வழியாய் உருவாகிறது.*

*பொதுவாக, பூச்சியினங்களில் இரண்டு விதமான உருமாற்றங்கள் நடைபெறுகிறது. வெட்டுக்கிளி, பாச்சான் , தட்டான், கரப்பான் பூச்சி ஆகிய வகைகள்* ***முழுமையடையாத உருமாற்றங்கள்*** *உடையவை.* Nymph ***(நிம்ப்)*** *என்று அழைக்கப்படுகிற இளம்பூச்சிகள் பொதுவாக, இறகுகள் அல்லாத இளமுதிர்பருவ தோற்றம் அளிக்க கூடியதாய் காணப்படுகிறது.*

*பட்டாம்பூச்சி, அந்துபூச்சி, வண்டுகள், ஈக்கள் மற்றும் தேனீக்கள் ஆகியவை* ***முழுமையான உருமாற்றங்கள்*** *உடையவை.* Larva ***(லார்வா)*** *என்று அழைக்கப்படுகிற இளம் முட்டைப்புழுக்கள் முதிர்ந்த பூச்சிகளிலிருந்து வேறுபட்டவை. இவை வேறு விதமான உணவுகளை உண்ணக்கூடியவை.*

*பட்டாம்பூச்சிகளில் நான்கு விதமான உருமாற்றங்கள் நடைபெறுகிறது : முட்டை* (egg), *முட்டைப்புழு* (larva) *, கூட்டுப்புழு* (pupa) *மற்றும் வயது வந்த பூச்சி* (adult).




## *முட்டை பருவம் Egg*

*வயது வந்த பெண் பட்டாம்பூச்ச்சிகள் செடிகளில் முட்டையிடும். குஞ்சுபொரிக்கிற கம்பளிபூச்சிகளுக்கு இந்த செடிகளே உணவாக அமைகிறது.*

*வசந்த காலம் தொடங்கி கோடைக்காலம், இலையுதிர்காலங்களில் செடிகளில் முட்டையிடப்படுகிறது. இது பட்டாம்பூச்சிகளின் ஒவ்வொரு இனத்திற்கேற்ப வேறுபடும். பெண் பட்டாம்பூச்சிகள் ஒரு முறைக்கு அநேக முட்டைகளிடும் அதில் சிலவைதான் உயிருடன் இருக்கும்.*

*பட்டாம்பூச்சிகளின் முட்டை மிகவும் சிறியதாக இருக்கும்.*

## கம்பளிப்பூச்சி பருவம் *Caterpillar*

### உணவு உட்கொள்ளும் பருவம் The feeding stages



அடுத்தது முட்டைப்புழு பருவம். பட்டாம்பூச்சி அல்லது அந்துபூச்சியாக (moth) இருந்தாலும், கம்பளிப்பூச்சி என்று தான் பெயர்.

கம்பளிப்பூச்சியின் வேலையே சாப்பிடுவது மட்டுமே. அது நன்றாக வளர்ந்ததும் தன்னுடைய மேற்தோலை 4 அல்லது 5 முறை உதிர்த்துவிடும். இந்த சமயம் உட்கொள்ளுகிற உணவை சேர்த்துவைத்து பின்பு அது வளர்ந்ததும் உபயோகிக்கும்.

இந்த பருவத்திலே கம்பளிப்பூச்சிகளின் நூறத்தனையாக (100 times) வளர கூடியவை. எடுத்துக்காட்டாக, அரசன் பட்டாம்பூச்சியின் (Monarch butterfly) முட்டையானது ஒரு குண்டூசியின் தலை பகுதியளவு தான் இருக்கும். அந்த முட்டையிலிருந்து வரக்கூடிய கம்பளிப்பூச்சி ஒன்றும் பெரிதாக இருக்காது. ஆனால், அவை கொஞ்ச வாரங்களிலேயே 2 இன்ச் நீளத்திற்கு வளர்ர்ந்துவிடும்.



## கூட்டுப்புழு பருவம் *Pupa*

### உருமாற்ற பருவம் - The transition stages

இந்த கம்பளிப்பூச்சி நன்றாக வளர்ந்த பின்பு சாப்பிடுவதை நிறுத்திவிடும். இந்த பருவத்தில் அது கூட்டுப்புழுவாக மாறிவிடுகிறது. இந்த வண்ணத்துபூச்சிகளின் கூட்டுப்புழுவை பொற்புழு என்றும் கூறுகிறார்கள்.

இந்த கூட்டுப்புழுவானது மரத்தின் கொம்புகளிலோ அல்லது இலைகளுக்குள்ளே அல்லது மண்ணுக்குள்ளே மறைந்திருக்கும். இது ஒவ்வொரு இனத்திற்கும் வேறுபடும்.

இந்த பருவம் சில வாரங்கள் அல்லது மாதம் தங்கும். அல்லது சில கூட்டுபுழுக்களின் பருவமானது 2 வருடங்களுக்கு மேல் கூட தங்கி இருக்கும்.

பார்ப்பதற்கு ஒன்றுமே நடக்காததுபோல் தோற்றமளித்தாலும் உள்ளே மிக பெரிய அளவில் மாற்றங்கள் நடக்கிறது. முட்டைபுழுக்குள்ளே இருக்கின்ற விசேஷமான உயிரணுக்கள் இப்பொழுது வேகமாக வளர தொங்கிவிடும். அவைகள் கால்கள், இறகுகள், கண்கள் மற்றும் வேறு சில பாகங்களாக ஒரு வயது வந்த பட்டாம்பூச்சியாக மாறிவிடும். முட்டைப்புழுக்களில் இருந்த எல்லா உயிரனுக்களும் இந்த பெரிய பட்டாம்பூச்சி வளருவதற்கு தேவையான ஆற்றல்களை (energy) கொடுக்கும்.



## பருவம் வந்த பட்டாம்பூச்சி *Adult*

### இனப்பெருக்க பருவம் The reproductive stage

பட்டாம்பூச்சி என்று சொன்னாலே அதினுடைய முழு வடிவம் மட்டும் தான் நினைவுக்கு வரும். அவைகள் முட்டைப்புழுக்களை காட்டிலும் சற்று வேறுவிதமாகவே தான் இருக்கிறது. இந்த கம்பளிப்புழுக்களுக்கு மிக சிறிய கண்களும், தட்டையான கால்களும், மிக சிறிய உணர்க்கொம்புகளும் உண்டு. இந்த பருவ பட்டம்பூச்சிகளுக்கு நீண்ட கால்களும், நீண்ட உணர்கொம்புகளும், கூட்டு கண்களும் உண்டு. தங்களின் அழகான பெரிய வண்ண இறகுகளால் அவைகளால் பறக்கமுடியும் ஆனால் அவைகளால் அதற்கு மேல் வளர முடியாது.

கம்பளிப்பூச்சியின் வேலை சாப்பிடுவது, பருவ பூச்சியின் வேலை முட்டையிடுதல் மற்றும் இனப்பெருக்கம். ஒரு சில பட்டாம்பூச்சி வகைகள் பூக்களிலிருந்து தேன் எடுப்பதன் மூலம் ஆற்றல் பெறுகிறது. ஆனால் அநேக பட்டாம்பூச்சி இனங்கள் உண்பதில்லை.

பறப்பது அவைகளுக்கு எளிது. பருவமான பெண் பட்டாம்பூச்சி ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்கு சென்று முட்டைகளிடுவதற்கு சரியான செடியை கண்டுபிடிக்கும். இது மிகவும் அவசியம் ஏனென்றால், கம்பளிபூசிகளால் வெகுதூரம் பயணிக்க முடியாது.

பெரும்பாலான பட்டாம்பூசிகள் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் மட்டுமே உயிர் வாழும். ஆனால் சில பட்டாம்பூச்சியின் இனங்கள் குளிர்காலத்தில் உறக்கநிலை சென்று பின்பு அநேக மாதங்கள் வாழும்.

### “புதுமை” என்று சரியாக எதை குறிப்பிட வேண்டும்?

உயரமாக, அதிபுத்திசாலியாக, வேகமாக, பணக்காரராக இருக்கிறேனா?

*புதிய பெயருடன் புது டிரைவர்ஸ் லைசன்ஸ் வைத்திருக்கிறேனா?*

*புதிய குடும்பம் புதிய வேலை எனக்கு இருக்கிறதா?*

*விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே கிறிஸ்துவுக்குள் இருக்கிற எனக்கு "புதுமை" என்றால் என்ன?*

**2 கொரிந்தியர் 4:6,** இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

### *பவுல் இங்கு எதை இணைக்கிறார்?*

*பவுல், ஆதியாகமம் 1 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஆதியின் தேவனை சுவிசேஷத்தின் தேவனோடு கூட இணைக்கிறார்.*

*பவுல், தம் கரத்தின் கிரியைகளினால் படைத்த கர்த்தாவோடு நம்மை தம்முடைய கிரியைகளினால் மீட்ட தேவனோடு கூட இணைக்கிறார்.*

*நாம் பார்க்கிற இந்த படைப்புகளெல்லாம் நம் தேவனுடைய வல்லமையான வார்த்தைகளினால் வந்தது. அதேபோல, புது சிருஷ்டிப்பானது சுவிசேஷத்தின் மூலம் தேவன் நம் இருதயத்தில் பேசுகிற வல்லமையான வார்த்தைகளினால் உண்டாகிறது.*

*"புது சிருஷ்டி" என்பது நம்முடைய சுயமாய் பழையவைகளை மாற்றுவது அல்ல.* McDonald's *வேண்டுமானால் கீழே விழுந்த உங்களுடைய* Old Big Mac *பர்கரை ஒருவேளை மாற்றி கொடுக்கலாம்.*

*நீங்கள் "புது சிருஷ்டியின்" பங்காவதற்கு இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் உங்களிடத்தில் எல்லாவிதத்திலும் மாற்றத்தை உண்டாக்குகிறவராயிருகிறார்.*

*அப்படியானால், ஒரு புது சிருஷ்டியில் புது சிருஷ்டியாக இருப்பது என்றால் என்ன?*

### *புதிய கண்ணோட்டம் - New Perspective*

**2 கொரிந்தியர் 5:16,** ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.

இங்கு பவுல், ஒரு புது சிருஷ்டியாக இருப்பதைப்பற்றி வெளிப்படையாக பேசாவிட்டாலும், இந்த வசனத்தின் சாராம்சம் புது சிருஷ்டி என்பதுதான்.

இந்த வசனத்தின் முறையான ஆழமான பொருள், நம்முடைய பார்வையில் ஒரு வித்தியாசத்தை காண்கிறோம் என்பதே.

"இதுமுதற்கொண்டு" மற்றவர்களை நாம் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறோம் என்றும்; இனி நாம் ஒருவரை ஒருவர் மாம்ச பிரகாரமாகவோ அல்லது உலகப்பிரகாரமாகவோ அறியோம் என்றும் பவுல் சொல்லுகிறார்.

மிக குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் , பவுல் தனக்காகவும் தன்னுடைய ஊழியத்திற்காகவும் பொய் குற்றச்சாட்டுகளுக்கும் கேலி சித்திரங்களுக்கும் ஆளானார். அவைகளுக்கு விரோதமாக அவர் போர் செய்கிறபடியினால், தங்களுடைய புதிய கண்களினால் பார்க்க வேண்டும் என்று அவர்களுக்கு (கொரிந்து சபை) நினைப்பூட்டுகிறார்.

"மாம்சத்தின்படி ஒருவரை ஒருவர் அறிதல்" என்றால் என்ன அர்த்தம்?

இதை புரிந்துகொள்வதற்கு கொரிந்துவிலே பவுலைப்பற்றி என்ன குற்றச்சாட்டு வைத்தார்கள் என்று எண்ணிப்பார்ப்போம்.

**2 கொரிந்தியர் 10:10,** அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே.

ஆகையால், அக்காலக்கட்டத்தின் தலைவர்களில் ஜனங்களை வசீகரிக்கும் தரம் அவரிடத்தில் இல்லை என்பதினால் சில போகதர்மார்கள் பவுலை அவதூறு செய்தார்கள்.

ஆனால், உண்மை என்னவென்றால் பவுல் அழகானவராகவோ, உயரமாகவோ அல்லது சரீர அளவில் ஈர்க்கக்கூடியவராகவோ இல்லை. மற்றும் பாரம்பரிய முறையில் பயிற்றுவிக்கவோ அல்லது கவர்ச்சியாக ஜனங்களை மகிழ்வூட்டி வசீகரிக்கும் வகையில் பேசக்கூடிய பேச்சாளராகவோ பயிற்றுவிக்கப் படவில்லை. இவை எதுவும் முக்கியமாக கருதப்படவும் இல்லை.

இது மாம்சபிரகாரமான கண்ணோட்டம் மட்டுமே.

தேவன் கொடுக்கிற ஆவிக்குரிய புதிய கண்ணோட்டம் அல்ல.

**2 கொரிந்தியர் 5:12,** இதனாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக்குறித்து நீங்கள் மேன்மைபாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்.

இந்த வேறுபாட்டை பவுல் இங்கே விளக்குகிறார். வெளித் தோற்றத்தை மாட்டுமே பார்த்து ஒரு மனிதனுடைய அதி முக்கியமான இருதயத்தை காணாத பார்வை.

ஆகையால், ஒரு புது சிருஷ்டியானவன் மற்றவர்களை பார்க்கும்போது எதை முக்கியமாக கருத வேண்டும் என்கிற ஒரு புதிய உணர்வோடு கண்ணோக்க வேண்டும்.

உங்களையும் மற்றவர்களையும் சத்தியத்தின் படி பார்க்க வேண்டும்.

எவ்வளவு பாடுகளை நாம் இவ்வாழ்க்கையில் அடைகிறோம்? ஏனென்றால் நம் சிநேகிதர், கணவன் மனைவி, பிள்ளைகள், அதிகாரி, அல்லது அண்ணன் தம்பி அக்கா தங்கை ஆகியோர்களை சத்தியத்தின் வெளிச்சத்திலே காண மறுக்கிறோம்.

மாறாக, அவர்கள் இந்த நிலையில் தான் இருக்க வேண்டும் என்றும் இந்த உலகம் அவர்களை பார்க்கிற பிரகாரமாக சுய கண்களால் அவர்களை காண்கிறோம்.

கர்த்தர் நம்மேல் வைத்த அன்பையும், அவர் நம்மை ஏற்றுக்கொண்டதையும் அவருடைய கிருபையையும் உணராமல் நாமே நம்மை மம்சப்பிரகாரமாய் நிதானிப்பதால் நம்முடைய வாழ்வில் தான் எத்தனை பிரச்சனைகள்?

உங்கள் பெற்றோர்களோ நண்பர்களோ கணவன் மனைவி அல்லது இந்த ஊடகம் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்கிற விதத்தில் அல்லாமல் தேவன் பாக்கிற விதமாக நீங்கள் உங்களைப் பார்க்க வேண்டும்.

நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். (2 **கொரிந்தியர்** 5:16) பவுல் அவர்களுக்கு எப்படி நினைப்பூட்டுகிறார் என்று பாருங்கள்.

நம் வாழ்வில் ஒரு கட்டத்தில், இயேசு கிறிஸ்துவினால் நாம் ஈர்க்கப்படவில்லை

ஒரு கட்டத்தில், இயேசு நமக்கு அத்தியாவசியமானவராக இல்லை. தேவைப்படும்போது கூப்பிடுவோம் அவ்வளவுதான்.

மற்றொரு கட்டத்தில், இயேசு எனக்கு ஆண்டவரல்ல.

எனக்கு நானே ஆண்டவராக இருந்தேன்.

ஆனால், அற்புதமாய் நன்றி செல்லுத்தும் விதமாக எல்லாம் மாறியது.

## *புதிய மனிதன் - New Person*

**2 கொரிந்தியர் 5:14-15,** கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;
15 பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

*நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் மட்டும் புது சிருஷ்டி அல்ல உங்களுடன் கூட இருப்பவர்களுக்கும் நீங்கள் புது மனுஷன்தான்.*

*பவுல் இதற்குமேல் பட்டவர்த்தனமாய் இதை தெரிவுக்க முடியாது.*

*இயேசுவானவர் தம்முடைய ஜனங்களுக்காக மரித்தபொழுதும், அவருடைய வசனத்தை நாம் உபயோகிக்கும்போதும், நல்ல சமாரியன் தம்முடைய மந்தைக்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்த வேளையிலும், நம்முடைய இருதயத்தில் ஒரு ஆட்சி மாற்றத்தை உண்டு பண்ணுவதற்காகவே அவற்றை நிறைவேற்றினார்.*

*சத்திய சுவிசேஷத்தினாலே நம்முடைய உலகம் ஆச்சரியமாய் தலைகீழாக மாறும்.*

*அவர் சிலுவையிலே நமக்காக மரித்ததினால் நாமும் அவருடன் மரித்து விட்டோம் (ஒருவர் மரித்ததினிமித்தம் நாமெல்லாரும் அவருக்குள் மரித்துவிட்டோம்). 17 ஆம் வசனத்தின் படி – பழையவை கடந்து போனது என்று பவுல் ரோமாபுரியின் சபைக்கு வெளிப்படுத்தினார்.*

**ரோமர் 6:3-4,** கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?
4. மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

*“புதுமை” அல்லது “வாழ்க்கையில் புதுமை” என்பது உங்கள குறித்தது அல்ல. இது கொஞ்சம் கடினமானதுதான் ஆனாலும் மிகவும் அத்தியாவசியமாக புரிந்துகொள்ள வேண்டியது. பொதுவாக ஜனங்கள் கிறிஸ்தவர்கள் உள்பட - புதுமை எதாவது வேண்டும், இரண்டாம் வாய்ப்பு அல்லது புதிய தொடக்கம், திரும்பவும் மாற்றி அமைக்கக்கூடிய வாய்ப்பு என்று அவர்களுக்காகவே தான் வாழுகிறார்கள்.*

- *உங்கள் நேரத்தை கொண்டு என்ன செய்கிறீர்கள்?*
- *என்ன படிக்கிறீர்கள்?*
- *உங்கள் பணம் எதில் செலவாகிறது / எங்கு போகிறது?*
- *எந்த மாதிரியான வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து வருகிறது?*
- *யாருடன் உங்கள் நேரத்தை செலவு செய்கிறீர்கள்?*
- *எப்படி உடுக்கிறீர்கள்?*
- *எதை கேட்கிறீர்கள்?*



*நீங்கள் முந்தி வாழ்ந்த வாழ்க்கையோடு ஒப்பிட்டு பார்த்தால் இது உங்களுக்கு புதிதாக தோன்றும்.*

*"புது சிருஷ்டிப்பு" என்கிற புதுமை இந்த காரியங்களைப் பற்றியது அல்ல. ஏனென்றால், எல்லா விதத்திலும் உங்களுடைய வாழ்க்கை புதிதாக இருந்தாலும் இன்னும் உங்களுக்காக தான் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்.*

*நீங்கள் புது சிருஷ்டியானதற்கு ஒரே அத்தாட்சி, நீங்கள் வாழும் இந்த புதிய வாழ்க்கை இயேசு கிறிஸ்துவுக்காக மட்டுமே வாழ்வதே அல்லாமல் உங்களுக்காக அல்ல என்பதே.*

*கவனியுங்கள் "பூரணமான" என்று நான் குறிப்பிடவில்லை.*

*இந்த வாழ்க்கையில், நீங்கள் எப்பொழுதும் உங்களுக்காக மட்டுமே வாழ தூண்டப்படுவீர்கள். சில சமயம் அப்படிப்பட்ட தூண்டுதலுக்கு அடிபணிவதும் உண்டு சில வேளைகளில் அவற்றை எதிர்த்து நிற்பதும் உண்டு.*

*ஆனால், உங்கள் விசுவாத்தின் நங்கூரம் இயேசுவின் மூலம் தேவனை பிரியப்படுத்துகிறதாயிருக்க வேண்டும். உங்கள் படகு அலைதிரிந்து செல்லலாம் அல்லது கவிழ்ந்துபோகலாம். ஆனால், அது திரும்பவும் ஆண்டவர் நங்கூரம் போட்ட இடத்திற்கே வந்துவிடும்.*

**2 கொரிந்தியர் 5:9,** அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

## *புதிய நோக்கம் - New Purpose*

*வாழ்கையின் ஒருசில நோக்கங்கள் என்ன?*

*பரவலாக நாம் அனைவரும் அறிந்த சில:*

- குடும்பத்தை பார்க்க வேண்டும்
- வெற்றிகரமான வாழ்க்கை வாழ வேண்டும்
- பாசிடிவாக மற்றோரோரோடும் உற்றாரோடும் பழக வேண்டும்
- உலகத்தை சுற்றிப்பார்க்க வேண்டும்
- பூமியின் அழிவு நிலையை மாற்ற வேண்டும்

ஆனால் உங்களுடைய நோக்கம் என்ன?

இதற்கு பதிலும் ஒருசில குறிப்புகளை சார்ந்தே இருக்கும்:

- வெற்றி வாழ்க்கை வாழ வேண்டும்
- நான் நேசிக்கப்பட வேண்டும்
- பிறருக்கு நல்ல உதவியாக இருக்க வேண்டும்
- மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்

நம்முடைய வாழ்வின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை பற்றி வேதாகமத்தில் தெளிவாக இருக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் மனிதர்கள் வாழ்க்கையின் நோக்கத்தை குறித்து தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஞானவானகிய சாலோமோன்,இவ்வுலகத்திற்காக வாழ்வது பயனற்றதாய் இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார். பிரசங்கி புஸ்தகத்தில் முடிவுரையாக கொடுத்திருக்கிறார்.

**பிரசங்கி 12:13-14,** காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.14. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

அவர் வருங்காலத்தில் ஒரு திருப்தியை காண தாவீது காத்திருந்தார்.

**சங்கீதம்** 17:15, நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.

தாவீதை பொருத்தமட்டில் , அந்நாளில் மறுபடியும் எழுந்திருக்கும்போது (மறுமையில்) அவரை கண்டு அவரோடு கூட இருக்கும்போது தான் திருப்தி உண்டாகும் என்கிறார்.

**1 யோவான் 3:2,** பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

*இந்த பிரிவின் கடைசிப்பகுதியில் பெரும்பாலானவை பவுலினுடைய ஊழியம் மற்றும் அவர்மேல் சாற்றப்பட்டுள்ள பொய் குற்றச்சாட்டுகளை எதிர்த்ததையும் பற்றி பேசப்படிருக்கிறது.*

*ஒரு புதிய மனிதனாக வாழ்தல் என்பது, ஊழிய வாழ்க்கையில் ஒரு புதிய கண்ணோட்டத்தோடு கூடிய வெளிப்பாடு முக்கியமாக “வேற்றுமையை அகற்றி ஒப்புரவாய் இருத்தல்”.*

*நமது கவனத்தை கொஞ்சம் விரிவுபடுத்தலாம்.*

**2 கொரிந்தியர் 5:11-13,** ஆகையால், கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன். 12. இதனாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக்குறித்து நீங்கள் மேன்மைபாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம். 13. நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியிருக்கும்; தெளிந்தபுத்தியுள்ளவர்களென்றால் உங்களுக்காக அப்படியிருக்கும்.

**2 கொரிந்தியர் 5:18-20,** இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். 20. ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

*பிறர் நம் வாழ்வைப்பார்த்து உங்களால் எப்படி இவ்வாறு வாழ முடிகிறது என்று கேள்வியெழும் வண்ணம் வாழ வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கை பிறரோடு ஒரு சம்பாஷணையை தூண்டி சுவிசேஷத்தை அறிவிக்க கூடிய வகையில் வாழ இந்த புதிய ஏற்பாடு நம்மை அழைக்கிறது.*

*அது சம்பவிக்கும்போது, உங்களுக்குள்ளே இருக்கிற அந்த விசுவாசத்தின் காரணத்தை உங்களிடத்தில் கேட்கிறவர்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுப்பதற்கு தேவன் உங்களை அழைத்திருக்கிறார்.*

**1 பேதுரு 3:15,** கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.;

*பொதுவாக, இங்கு இருக்கிற நாம் ஒவ்வொருவரும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்துக்கு (*"ministry of reconciliation"*) அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

**2 கொரிந்தியர் 5:18-20** *ல், கிறிஸ்து மரித்தார் அவருக்காக நாம் வாழ வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார்.*

*நாம் தேவனோடு ஒப்புரவாகியிருக்கிறதினிமித்தம் மற்றவர்களை தேவனோடு ஒப்புரவாக்க நாம் உதவி செய்ய முடியும்.*

*புதிய நோக்கத்தில் ஒரு கடின பதில் என்னவென்றால் ஒரே பணி "*One Mission*"- ஒப்புரவாக்குதலின் ஊழியம்.*

*இந்த வார்த்தைகளை பாருங்கள் ஆண்டவர்தாமே உங்கள் இருதயங்களில் கிரியை செய்யட்டும்.*

- Entrust ***ஒப்படைக்கப்பட்டிருக்கிறது*** *(இந்த சுவிசேஷம் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது)*
- Ambassadors ***ஸ்தானாபதி*** *(தேவனுடைய ராஜ்ஜியத்தின் பிரதிநிதி)*
- Appeal ***வேண்டுதல்*** *(வழிதப்பி போனவர்களிடத்தில் வேண்டுதல்)*

*"புதுமை" என்று சரியாக எதை குறிப்பிட வேண்டும்?*

*வனாந்தரத்தில் ஒரு விதையை விதைக்கிற கதை.*

## *புதுமையின் விலை - The Cost of Newness*



புது சிருஷ்டியாவதற்கு ஏங்குகிறீர்களா?

விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே கிறிஸ்துவுக்குள் நான் இருக்கிறேனென்றால் இது வெறும் தரிசனம் அல்ல.

நிகழ்விலே தேவனைப்போல அல்லது தேவன் சாயலாக தோன்றக்கூடிய ஒரு காரியம்.

ஒருவேளை பழைமை எனும் உணர்வில் தேங்கிக்கிடக்கும் உங்களுக்கு, நீங்கள் “புது சிருஷ்டி” என்கிற எண்ணம் ஒரு புத்துணர்ச்சியாக அமையலாம்.

ஒருவேளை நீங்கள் பழைய மனிதராக இருக்கிறீர்கள் என்கிற எண்ணம் உங்கள் கழுத்தை இருக்க பிடிப்பது போலவும் உங்கள் கால்களை சங்கிலிகளால் கட்டி வைத்திருப்பது போலவும் உணருகிறீர்களா?

புது மனிதனாக உங்கள் புதிய வாழ்க்கையை வாழுவதற்காக சுய முயற்ச்சியில் தோற்று சோர்ந்து போய்விட்டீர்களா?

அப்படிதான் இருக்கிறீர்கள் என்றால் உற்சாகமடைய வேண்டும்.

உங்களுக்காக தேவனுடைய வார்த்தை இதுவே:

---

கிறிஸ்துவுக்குள் இருக்கிற **<u>எவனும்</u>** புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் **ஒழிந்து போயின. எல்லாம்** புதிதாயின

---

இந்த புதிய எண்ணத்தில் புதுமையாக வாழ்வதற்கு பவுல் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

**2 கொரிந்தியர் 5:14,** கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;

புது சிருஷ்டியாக வாழ்தல் என்பது கிறிஸ்துவுக்கு உங்கள் மேலுள்ள அன்பை நீங்கள் உணர்வதிலிருந்து தொடங்குகிறது. அந்த அன்பு உங்களிடத்தில் வந்ததுமன்றி, அந்த அன்பின் மூலம், உங்கள் மேல் அவர் வைத்திருக்கிற அக்கறை

/ கரிசனை, உங்களுக்காக விலைக்கிரையமாக அவர் தம்மை கொடுத்து உங்களை பழைய மனுஷனிலிருந்து அவருடைய புதிய மனுஷனாக்கினார் என்கிற அற்புத சத்தியங்களில் மூழ்க செய்வதினால் தொடர்கிறது .

அந்த விலை, அதின் மதிப்பு என்ன? பின்வரும் வசனம் அந்த கிரையத்தை கூறுகிறது.

**2 கொரிந்தியர் 5:21,** நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

சிலுவையிலே, இயேசு பாவம் நிறைந்த உங்கள் பழைய மனுஷனுக்காய் அவர் பாவமாகி, நீங்கள் புதுமையாவதற்காக உங்களை அவருக்குள் நீதிமானாக்கினார்.

புது சிருஷ்டியாகிய நம்மை கிறிஸ்துவினுடைய அன்பு ஆட்கொள்ள வேண்டும் என்பதை புதிய கண்ணோட்டத்தோடு காண தேவன் உதவி செய்ய வேண்டும் என்று நாம் ஜெபிப்போம்.

# 2. அடிமையிலிருந்து சுதந்திரவான்

## Slave to Heir

கலாத்தியர்கள் திரும்பவும் அடிமைத்தனமாகிய பாவத்தில் சிக்கிக்கொள்ளாதபடி பவுல் எச்சரிக்கிறார். ஏனெனில் அவர்கள் பாவ பிடியிலிருந்து ஆவியினால் விடுவிக்கப்பட்டு தேவனுடைய சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள்.





### முன்னுரை

கலாத்தியரே, நீங்கள் இயேசுவை விசுவாசிப்பதே பரலோகம் செல்லும் ஒரே வழி என்று அறிந்துகொண்டீர்கள்.

கிரியைகளும் மனித முயற்சிகளும் விருதாவாக இருக்கிறது.

மாறாக அந்த கிரியைகள் உங்களை மீண்டும் அடிமைத்தனத்திற்குள் உங்களை கட்டிவைத்து உங்கள் மகிழ்ச்சியை கெடுத்துவிடும்.

யூத பற்றுள்ள கள்ள போதகர்களை பவுல் எதிர்கொண்டு, கலாத்திய சபை மீண்டும் சுத்த சுவிசேஷத்திற்கு திரும்ப வேண்டும் என்று பவுல் பிரசங்கித்தார். மனிதர்களை பிரியப்படுத்துவதை பார்க்கிலும், தேவனை பிரியபடுத்துவது அவசியம் என்று சுட்டிக்காட்டினார்.

அவர்கள் கர்த்தரை செவிப்பதை விடுத்து, அவரை பிரியப்படுத்துவதை நிறுத்தினால், இயேசு கிறிஸ்துவின் பலிக்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என்று கூறினார். “கலாத்தியரே, நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவின் பலியை விருதாவாகச் செய்ய வாஞ்சையாய் இருக்கிறீர்களா?” என்று கேட்கிறார்.

*பவுல் தானும் முன்னர் இப்படிப்பட்ட கிரியைகளில் அகப்பட்டிருந்ததை அவர்களுக்கு அடிக்கடி நினைவுப்படுத்தினார்.*

*மத வைராக்கியமும், சடங்குகளும் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாய் தன்னை நிறுத்தியதை அவர் உணர்ந்தார். மத அடிப்படை எண்ணங்கள், கர்த்தருடைய "கிருபை"யிலிருந்து ஒரு மனிதனை பிரித்துவிடுகிறது.*

*இயேசு தம்முடைய பலியை மறக்காமல் நினைவு கூறும்படி நற்கருணையை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். நற்கருணை மூலமாக தம்முடைய பலியை நம் இருதயத்தில் பதியச்செய்யும்படி விரும்பினார்.*

*ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தினாலே மீட்கப்பட்டு தேவனுடைய நண்பனாக மாறினாரே தவிர தனது கிரியைகளால் அல்ல. ஏனெனில் முன் குறிக்கப்பட்ட "வித்து" உதிக்கும்வரை நியாயப்பிரமாணம் கொஞ்ச காலம் கொடுக்கப்பட்டது, ஆனால் அந்த வித்து வந்தபோது நியாயபிரமாணம் நிறைவேற்றப்பட்டது.*

*ஆகவே பவுலின் வார்த்தைகளில், இயேசு என்ன செய்தார் என்றால்,*

**கலாத்தியர் 3:25**, விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே..

*கலாத்தியர் 3ல் மீண்டும் மீண்டும் நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமானது அல்ல என்றும், நியாயப்பிரமாணம் எப்படி ஜீவன் வருவதற்கு வழிவகை செய்தது என்றும் விளக்குகிறார்.*

*வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரை விசுவாசிப்பதினால் ஜீவன் பிறக்கிறது.*

*நாம் எல்லோரும் பாவத்திற்கு அடிமைகள் ஆகவே நமது முயற்சியாலும் கிரியைகளாலும் பரலோகத்திற்கு செல்ல முடியாது, மாறாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரே நம்மை விடுவிக்க முடியும்.*


*ஆகவே, இயேசு பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலாகவும் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட விசுவாச உடன்படிக்கையாகவும் வெளிப்பட்டார்.*

*இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல் பரமேறுதலாலும், நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், தேவனுடைய புத்திரராகும்படி நமக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த புதிய விசுவாச பிரமாணத்திற்குள் இயேசு நம் அனைவரையும் நடத்தியதால், யூதனென்றும் இல்லை கிரேக்கனென்றும் இல்லை, ஆணென்றும்*

பெண்ணென்றும், சுயாதீனனென்றும், அடிமையானவனென்றும் இல்லை. நாம் அனைவரும் கிறிஸ்துவின் பார்வையில் ஒன்றாக இருக்கிறோம்.

ஆண்டவருடைய கண்களுக்கு முன் நாம் அனைவரும் சமமானவர்களாக இருக்கிறோம். நாம் அனைவரும் அவருடையவர்களானதால் நாம் அனைவரும் சமமாக இருக்கிறோம்.




### கிருபை என்றால் என்ன?

பலருக்கு கிருபை என்றால் என்ன என்கிற புரிதல் இருப்பதில்லை.

இரட்சிப்பு என்பது கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினால் என்று ஜனங்களுக்கு புரியவைப்பது பவுலுக்கே கடினமானதாகத் தான் இருந்தது.

ஏனெனில், கிருபை மிகவும் சுலபமானதாக தெரிகிறது. ஆகையால், இயேசுவின் வார்த்தைகளை கேட்காமல், இரட்சிக்கப்படுவதற்கு மனிதன் ஏதேனும் செய்ய வேண்டும் என்று நாம் சிந்திக்கலாம். நாம் ஏன் இப்படி சிந்திக்கிறோம்?

நாம் இப்படி சிந்திப்பதின் காரணம் என்னவென்றால், உலகத்தின் எல்லா மதங்களும் பரலோகம் செல்வதற்கு நாம் எதையாவது செய்ய வேண்டும் என்று தான் பிரசங்கிக்கின்றன. ஆகவே தான் நாமும் அவர்களைப்போல் அப்படி சிந்திக்கிறோம்.

ஆனால் கிருபையும் விசுவாசமும், இரட்சிக்கப்படுவதற்கு மாத்திரம் அல்ல, தேவனுடைய புத்திரர்களாக எற்றுக்கொள்ளப்படுவதற்கும் உரிமை அளிக்கிறது.

**கலாத்தியர் 3: 26-29,** நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. 27. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. 28. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். 29. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்.

பவுல் கலாத்தியர் 3ஐ இப்படி கூறி நிறைவு செய்கிறார். நாம் கிறிஸ்துவின் மகத்தான ஒரே பலியின் நிமித்தம் விசுவாசம் கிருபை என்னும் புதிய அத்தியாயத்திற்குள் பிரவேசித்து தேவனுடைய புத்திரர்களாக மாற்றப்பட்டிருக்கிறோம்.

## அடிமையாக இருப்பது என்றால் என்ன?

### அகராதியில் உள்ள பொருள்

ஒரு எஜமானனுடைய பொருட்களில் ஒன்றாகை இருப்பது, எஜமானின் விருப்பத்திற்கு முற்றிலும் கீழ்படிவது.

கொத்தடிமையாக தன்னுடைய எல்லா சுதந்திரத்தையும் எஜமானுக்கு கொடுத்து விடுவது.

அந்நிய வல்லமையாலோ, பழக்கவழக்கத்தாலோ முற்றிலும் ஆட்கொள்ளப்-படுவது.

நாம் விசுவாசமில்லாமல் வாழும்போது கிருபையை அனுபவிக்கத் தவறுகிறோம், அதோடு பாவத்திற்கு அடிமைகளாக வாழ்கிறோம்.

## பரம பிதாவிற்கு மகனாகவோ மகளாகவோ இருப்பதன் பொருள் என்ன?

### அகராதியில் உள்ள பொருள்

அதிகாரப்பூர்வமாக ஒருவருடைய சொத்துக்களின் வாரிசு. இயற்கையாகவோ அல்லது நியமிக்கப்பட்டதன் மூலமாகவோ ஒருவருடைய காலத்துக்குப் பின், அவருடைய சொத்துக்களுக்கு வாரிசாக இருப்பது.

நாம் விசுவாசித்தபோது தேவனுடைய பிள்ளைகளாகிறோம். நம்முடைய நம்பிக்கையையும் வாழ்வையும் இயேசுவின் மேல் வைக்கிறோம் என்று வேதம் கூறுகிறது.

## நாம் தேவனால் தத்தெடுக்கப்பட்டதின் மூலம் எப்படி அவருடைய பிள்ளைகளாகிறோம்?

நம்முடைய வாழ்வில் ஒரு கட்டத்தில் நாம் பாவத்தினால் ஆட்கொள்ளப்பட்டு தேவனுடைய ஜனங்களாக இராமல் இருந்தோம்.

**ரோமர் 9:26**, நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறது.

அனால் இயேசுவின்மேல் விசுவாசம் வைத்தோம்.

**யோவான் 1:12**, அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

*ஏன் விசுவாசம் வைத்தோம், அவருடைய தெய்வீக அன்பை ருசித்தோம்.*

**1 யோவான் 3:1-2,** நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. 2. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

*சுத்த விசுவாசத்தில் வேரூன்றப்பட்டது.*

**கலாத்தியர் 3:26-27**, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. 27. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

*இந்த தெய்வீக அற்புதத்தை முழுக்கு ஞானஸ்நானத்தின் மூலம் சாட்சியாக அறிவித்து மாற்றம் அடைகிறோம்.*

**கலாத்தியர் 4:4-7**, நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, 5. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். 6. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். 7. ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.

*கர்த்தர் நம்மை அவருடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்கிறார்*

**ரோமர் 8:14-15**, மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். 15. அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு

நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.

அவருடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்போது, பாவத்திற்கு அடிமையாய் இருந்த நாம், ஆவியினால் விடுவிக்கப்படுகிறோம்.

**கலாத்தியர் 4:26, 28,** மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். சகோதரரே நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.

இந்த விடுதலை நம்முடைய ஆவிக்குரிய விசுவாச தகப்பனான ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்ததோடு நம்மை இணைக்கிறது.

**கலாத்தியர் 3:28**, 28. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

ஆகவே விசுவாசத்தினால் இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆகிறோம். இயேசுவின் மரணமே இதை வாய்க்க செய்தது.

இதை நாம் செய்தபடியினாலே, தேவனுடையவைகளுக்கு வாரிசாக ஆகிறோம்.

### தேவனுக்கு சொந்தமானவைகள் என்னென்ன?

எல்லாம் தேவனுடையவைகள் என்று வேதம் கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பூமி அவர் கையில் இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

அவர் பூமியில் உள்ளவைகள் மாத்திரமல்ல பரலோகில் உள்ளவைகளும் அவருடையவை தான்.

நாம் தேவ பிள்ளைகளாக அவருடைய வாரிசாக மாறும்போது, தேவனுடையவைகளை மாத்திரமல்ல அவருடைய வாக்குத்தத்தங்களையும் சுதந்தரிக்கிறோம்.

சுருக்கமாக சொன்னால், தேவன் தம்முடைய குடும்பத்திற்கு கொடுத்த எல்லா வாக்குத்தத்தங்களின் பலன்களையும் நாம் அறுவடை செய்கிறோம்.

### தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை குறித்து என்ன சொல்லலாம்?

அவற்றை அவர் காத்து நிறைவேற்றுவார்.

தம்முடைய பிள்ளைகளுடைய எல்லா தேவைகளையும் சந்திப்பேன் என வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

**பிலிப்பியர் 4:19**, என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

தகப்பன் தன பிள்ளைகளை பார்த்துக்கொள்வதுபோல் அவர் நம்மை பார்த்துக்கொள்வார்.

நாம் தேவையாய் இருக்கும்போது தம்முடைய வளங்களை நமக்கு அளிப்பார்.

தம்முடைய கிருபை நமக்கு போதும் என்று தேவன் கூறியிருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், பரலோகம் செல்வதற்கு அவருடைய கிருபை போதும்.

**2 கொரிந்தியர் 12:9**, அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

கிருபை போதுமானது!

உண்மை என்னவெனில், பரலோகம் செல்லக்கூடாதபடி நமக்கு குறைவு வராது.

அவருடைய வாக்குத்தத்தமான கிருபையே நாம் பரலோகம் செல்ல போதுமானது.

மனித கிரியைகள் நம்மை பரலோகத்தில் சேர்க்காது என்றும் வாக்குத்தத்தம் கூறுகிறது.

நாம் இரட்சிக்கப்படும்படி கிருபையினாலே விசுவாசத்தின்மூலம் நமக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

**எபேசியர் 2:8-10**, கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; 9. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; 10. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

விசுவாசத்திற்கு கீழ்படிவதினாலே தேவ கிருபை நமக்கு வழங்கப்படுகிறது.

**ரோமர் 5:1-2**, இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். 2. அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.

*நம் பெலனுக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்படுவதில்லை என்று தேவ வாக்குத்தத்தம் கூறுகிறது.*

*அதோடு நில்லாமல், சோதிக்கப்படும்போது அதற்கு தப்ப வழியும் உண்டுபன்னப்படும் என்று கூறுகிறது.*

**1 கொரிந்தியர் 10:13**, மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

**யூதா 1:24,"** வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்,

*தம்முடைய பிள்ளைகளுக்கு மரணத்தின்மேல் வெற்றியை வாக்குத்த்தத்தம் பண்ணியிருக்கிறார்.*

*நம்முடைய உயிர்த்தெழுதல் நிச்சயமாகும்படி அவர் இயேசுவை முதலாவது உயிர்த்தெழச் செய்தார்.*

**அப் 2:32**, "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.."

**1 கொரிந்தியர் 15:3-4**, நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, 4. அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,

**1 கொரிந்தியர் 15:57**, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

*தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மையாக முடியும் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.*

**ரோமர் 8:28,** அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

*நம்முடைய அனுதின வாழ்க்கையில் இது எப்படி நிறைவேறும் என்பது நமக்கு ஒரு கேள்விக்குறியாகவே இருக்கும். ஆனாலும், தேவன் இதை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர் நிச்சயம் நிறைவேற்றுவார்.*




*இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.*

**மாற்கு 16:16**, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் **2:38**, பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

*தம்முடைய பிள்ளைகளுக்கு **நித்திய ஜீவனை** வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.*

**யோவான் 10:27-28**, என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. 28. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

*இந்த வாக்குத்தத்தங்கள் கர்த்தர் எவ்வளவு உண்மையுள்ளவர் என்று நமக்கு காட்டுகிறது.*

***அவர் அப்படியே செய்வார்*** *என்றும் வாக்குத்தத்தம் கூறுகிறது.*

**1 தெசலோனிக்கேயர் 5:24**, உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

*அவர் நம்மீது **இரக்கம் பாராட்டுவார்** என்பதும் ஒரு வாக்குத்தத்தம்*

**ஏசாயா 54:9-10**, இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டுவருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன். 10. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

*ஜலத்தினால் இந்த உலகை அழிக்க மாட்டார்** என்பது ஒரு வாக்குத்தத்தம்.*

**ஆதியாகமம் 9:16**, அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப்பார்ப்பேன்.

*அநேகருடைய தகப்பனைப்போல் **திக்கற்றவர்களாய் விடேன்** என்பதும் அவருடைய வாக்குத்தத்தம்.*

**ஆதியாகமம் 28:15**, நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.

*அவர் நம்முடைய **உடன்படிக்கையை காத்து கடைசிமட்டும் உண்மையுள்ளவராய் இருப்பார்** என்பது வாக்குத்தத்தம்.*

**உபாகமம் 7:8-9**, கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார். 9. ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர்

ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்,

*அவர் ஒரு **வார்த்தையும் தவறுவதில்லை** என்பதும் வாக்குத்தத்தம்.*

**யோசுவா 23:14**, "இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிற வழியே போகிறேன்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை.

*தம்முடைய பிள்ளைகளுக்கு **இளைப்பாறுதல் தருவார்** என்பது வாக்குத்தத்தம்.*

**1 இராஜாக்கள் 8:56**, "தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை.

*நம் **காலை தள்ளாடவொட்டார்** என்பது வாக்குதத்ததம். ஏனெனில் அவர் எப்போதும் உறங்குவதில்லை.*

**சங்கீதம் 121:3-4**, உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். 4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

*அவர் நம்மீது **பொறுமையாய் இருப்பார்** என்பது வாக்குத்தத்தம்.*

**2 பேதுரு 3:9**, தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

*நாம் உண்மையில்லாதவர்களாய் இருந்த போதும் **அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார்** என்பது வாக்குத்தத்தம்.*

**2 தீமோத்தேயு 2:13**, நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்.

**2 தீமோத்தேயு 2:19**, ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.

*இப்போது பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு சுயாதீனராய் இருக்கும் நாம் அப்படியே இருக்கக்கடவோம்.*

*மீண்டும் அடிமைத்தனத்திற்கு செல்லாதீர்கள் என்று பவுல் கூறுகிறார்.*

*நாம் முன்னர் அடிமைகளாய் இருந்தோம், இயேசுவை கண்டு விடுவிக்கப்-பட்டோம். இப்படி விடுவிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை கண்டு பவுல், நீங்கள் எப்படி இவ்வளவு இலகுவாக மீண்டும் அடிமைகளானீர்கள் என்று கேட்கிறார்.*

*இந்த நிலை கலாத்திய கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இஸ்ரவேல் தேசமும் இதே நிலையில் இருப்பதை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கலாம்.*

### முடிவுரை

**கலாத்தியர் 4:4-5**, நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, 5. காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

*நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் வேரூன்றி இருக்க வேண்டும் என்று கலாத்தியர் 4 கூறுகிறது. நம்மீது கிருபை பொழியும் விசுவாச வழி இதுவே. கிருபை எனும் அரிய பொக்கிஷத்தை பெற்ற நாம், அதினால் வரும் பரிசுத்தமும் விடுதலையும் சுதந்திரமும் விருதாவாகப் போகாதபடி, அந்த கிருபையை பற்றிக்கொள்வோம்.*

*நாம் பின்னிட்டு அடிமைத்தனத்திற்கு செல்லும்போது, தேவனுடைய குடும்பத்தில் ஒருவர் என்று நமக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்தை இழந்துபோக நேரும்.*

*ஒருவேளை நான் இன்னும் முயற்சி செய்தால் நான் பாவத்திலிருந்து விடுதலை பெறுவேன் என்கிற எண்ணமே அடிமைத்தனத்திற்கு வழியாய் இருக்கிறது.*

*இந்த பழைய மத கோட்பாடு நம் மனமகிழ்ச்சியை பறித்து, நம்மை மீண்டும் பாவம் எனும் அடிமைத்தனத்தில் தள்ளிவிடும்.*

# 3. புதிய சிந்தனை

**கொலோசெயர் 3:1-4,** நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். 2. பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். 3. ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. 4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.



*இந்த உலகத்தை சுவிசேஷத்தினால் தொட வேண்டுமென்றால் நாம் இந்த உலகத்துக்குரியவர்களாயிராமல், இந்த உலகத்தை தெய்வீக பரிணாமத்திற்குள் கொண்டுவர வேண்டும்.*

**யோவான் 8:23,** அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல.

*இயேசு இந்த உலகத்திற்கு வந்தாலும் இந்த உலகத்தை காட்டிலும் மேலான நோக்கத்துடன் இந்த உலகத்தை அணுகினார்.*

**யோவான் 18:36,** இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்."

*இந்த உலகத்துக்கும் அப்பாற்பட்ட நன்மையினிமித்தம் இந்த உலகத்தை அடைந்தார்.*

*நாம் இந்த உலகத்தவராய் இல்லாதிருக்கும்போது, நாமும் இந்த உலகத்தை சுவிசேஷத்தால் தொடுவோம் என்று பவுல் சொல்லுகிறார்.*

**ரோமர் 12:1-2,** அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய

இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. 2. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**கலாத்தியர் 1:4,** அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;

*இயேசுவின் ராஜ்ஜியம் இந்த உலகத்தினுடையதல்ல.*

*இயேசு இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டு, இந்த உலகத்தில் பிரசங்கித்தார்.*

*இந்த உலகத்தை நாம் தொட வேண்டுமானால், உலகத்திற்கு அப்பாற்பட்டு தானே தொட முடியும் என்று பவுலும் பிரசங்கித்தார்.*

*இந்த சிந்தனை சற்று வித்தியாசமானவை.*

*உலகத்துக்கும் இயேசுவின் சீஷர்களுக்கும் உள்ள இந்த முரண்பாடு புதிய ஏற்பாடு முழுவதும் தொடர்வதை நாம் பார்க்க முடியும்.*

*எடுத்துக்காட்டாக, இயேசு பிதாவிடம் அவருடைய ஜெபத்திலே இப்படியாக சொன்னார்*

**யோவான் 17:15,** நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

**மத்தேயு 28:19,** ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

**தீத்து 2:12,** நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,

**1 யோவான் 4:17** நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.

உலகத்தில் வாழ்வது, உலகத்தை தொடுவது, உலகத்தில் கிறிஸ்துவை போல் வாழ்வது, நீதிமானாய் இவ்வுலகத்தில் ஜீவிப்பது, மற்றும் உலகத்திற்கு வெளியிலிருந்து இவ்வுலகத்தை தொடுவது என்று பலவிதமான காரியங்கள் உண்டு.

நீங்கள் எவ்வாறு இந்த முரண்பாட்டை தீர்ப்பீர்கள்?

உலகத்திற்குள் உங்களை அனுப்புகிறேன் என்று இயேசு சொல்லும்போது, உலகத்திற்கு வெளியில் இருந்து உலகத்தை தொட வேண்டும் என்று எப்படி சொல்ல முடியும்.

இந்த உலகத்தில் கிறிஸ்துவாய் இருங்கள் என்று யோவான் சொன்னது எப்படி?

இவ்விரண்டையும் எப்படி ஒன்றிணைக்க முடியும்?

உங்கள் உள்ளான மனம் பரலோகத்திலிருக்கிறது.

உங்கள் வெளியான சரீரம் இங்கே வாழ்கிறது.

கிறிஸ்துவை நேசிக்கிற ஒருவன், அவரையும் அவருடைய கிரியையும் அறிந்திருக்கிறான். ஒருவன் தன் இருதயத்திலும், தன் எண்ணத்திலும், தன் ஆத்துமாவிலும், ஆவிக்குரிய வாழ்வை பரலோகத்தில் வாழ்வது போல் வாழ்ந்து வந்தாலொழிய, தேவனுடைய சத்தியத்தின்படி அவனால் இந்த உலகத்தை தொட இயலாது. அவன் வெறும் கிறிஸ்தவனாய் இருக்குமட்டும் அது நடக்கவும் நடக்காது.

இயேசு ஒவ்வொரு இராத்திரியிலும் ஒலிவ மலைக்கு போவார் ஏனென்றால் அது அவருடைய உலகமாயிருந்தது.

அங்கேதான் அவர் பிதாவோடு மிகவும் நெருக்கமாக உரையாடுவார். ஏனென்றால் அவர் அங்கு இருந்துதான் வந்தார். அவர் தம்முடைய வேளை இவ்வுலகத்திலே முடிந்ததும் திரும்பவும் அங்கே சென்று விடுவார்.

அங்கே தான் வாழ்ந்தார். அங்கே தான் பிதாவோடு பேசுவார். அந்த ஒரு மேன்மையான நோக்கத்தோடு இவ்வுலகத்திற்குள் நுழைந்தார்.

இந்த பணம், புகழ், அந்தஸ்து, படிப்பு ஆகிய பூமிக்குரிய காரியங்கள் மற்றும் வேலை போன்ற எண்ணங்களில் முழுவதுமாக தன்னிலை மறந்திருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களை வைத்து கொண்டு ஆண்டவர் விரும்புகிறபடி இந்த சுவிசேஷத்தை நாம் உலகிற்கு கொண்டு செல்ல முடியாது.

நமக்கு சற்று நிதானிக்கும் பார்வை வேண்டும்.

நாம் உலகத்தில் ஈடுபாடற்ற கண்கள் கொண்டு பார்க்கும்போது தான், உலகத்திலிருக்கக்கூடிய இவற்றை காண தொடங்குவோம்:

- தரித்திரமான ஆத்துமா (the real poverty of soul),
- ஆதரவற்ற ஆவி (the real destitution of spirit)
- மெய் நம்பிக்கையின்மை (the real hopelessness)
- உண்மையான உதவியற்ற நிலை (the real helplessness)
- கிறிஸ்து இல்லாமல் தனியமையாக இருக்கும் உலகம் (the real loneliness of a world without Christ)




ஊழிய பாதைகளில் எனக்கு மிகுந்த அனுபவம் உண்டு. இந்தியா, பீகார், வட ஆப்பிரிக்கா இன்னும் மற்ற நாடுகளுக்கு செல்லும்போது நான் கலங்கினேன், வழிதப்பி போனவர்களை கண்டு என் இருதயம் அடித்து கொள்ளும்.

திரும்பவும் என் தேசத்திற்கு போன பிறகு என் சபை, மக்கள் என பழைய சூழலுக்குள் வந்துவிடுவேன். அந்த ஒரு ஆவிக்குரிய உணர்வு கண்ணீர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக காணாமற்போய்விடும்!

இயேசு எப்படி இந்த உலகத்தை கண்டாரோ அப்படி நான் பார்க்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறேன்.

இன்னும் என் மனநிலையை புதுப்பிக்கவும் மறுரூபமாக்கவும் முயற்சிக்கிறேன்.

**2 கொரிந்தியர் 6:17-18** ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 18. அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்."

தனிப்பட்ட பரிசுத்தத்தை பற்றி இங்கு பவுல் பேசவில்லை மாறாக சுவிசேஷத்தைப்பற்றி பேசுகிறார்.

உண்மையாக, நேர்மையாக யதார்த்தமாக நீங்கள் இந்த உலகத்தின் தேவையை அறிந்து உங்களுடைய உலகத்திலிருந்து வெளியே வராமல், இந்த உலகத்தை ஆண்டவருக்காய் தொட முடியாது.

எபேசியரிலே, பவுல் நம்மை இந்த உலகத்தை விட்டு வெளிய வர சொல்கிறார். நம்முடைய சிந்தனைகள், எண்ணங்கள், நம்பிக்கைகள், இருதயம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வெளியே வர சொல்கிறார்.

நமக்கு வேண்டிய காரியங்கள் அனைத்தும் நமக்கு இருக்கிறது. பரலோகத்திலே நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

**எபேசியர் 1:3,** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

தேவ தூதர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள்.

**எபேசியர் 3:10,** உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக,

கிறிஸ்து பரலோகத்தில் இருக்கிறார்.

**எபேசியர் 1:19;21 ,** 19. தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே; 21. அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து,

நாமெல்லோரும் பரலோகத்தில் அமர்ந்திருக்கிறோம்.

**எபேசியர் 2:7,** கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

அங்கே, ஆசீர்வாதம் இருக்கிறது.

தேவ தூதர்கள் இருக்கிறார்கள்.

ஆண்டவர் இருக்கிறார்.

உங்களுடைய அரியணை அங்கே இருக்கிறது.

**இங்கு கீழே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

அதுதான் கொலோசெயர் 3ஆம் அதிகாரத்தின் செய்தி.

**கொலோசெயர் 3:1-4,** நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். 2. பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். 3. ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. 4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

*இந்த கட்டமைப்பிலிருந்து வெளியே வர வேண்டும்.*

*உங்கள் ஆவிக்குரிய சிந்தனை, உள்ளான மனுஷன் ஆகியவற்றிற்கும் உலகத்திற்கும் உள்ள உறவு முறிக்கப்பட (Divorce) வேண்டும்.*

*கொலோசெயர் 2 ஆம் அதிகாரம் முடிவிலே ஆவிக்குரிய ஆழமான போதனைகளை பவுல் முடித்துவிட்டார். அதன் பின்னர் அந்த ஆவிக்குரிய ஆழமான போதனையின் மூலம் அனுதின வாழ்வில் ஏற்படும் விளைவுகளை விளக்குகிறார்.*

*முதலாவதாக, இந்த அமைப்பின் பழக்க வழக்கத்திலிருந்து நம்மை வெளியே வரச் சொல்கிறார். ஏனென்றால் நாம் புறம்பான உலகத்தை தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டு வர இதுதான் ஒரே வழி.*

**எபேசியர்** 2:7, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்,

*கிரேக்கத்திலே, இது கடந்த காலத்தை குறிக்கிறது. ஏற்கனவே நடந்து முடிந்த ஒரு காரியம். ஒரு கிரேக்கன் ஏற்கனவே நடந்து முடிந்து மாற்ற முடியாதவற்றைத்தான் கடந்த காலத்தில் குறிப்பிடுவான்.*

*ஆவிக்குரிய வகையில் சொன்னால் நீங்கள் உன்னதத்திற்கு ஏறியிருக்கிரீர்கள் (you ascended)*

*உங்கள் மனது கிறிஸ்துவினால் நிறைந்திருக்கிறது.*

*நீங்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்துவிட்டீர்கள்.*

*திரைகள் கிழிக்கப்பட்டு, தேவனுடைய பிரசன்னத்திற்குள் கடந்து வந்துவிட்டீர்கள்.*

**பிலிப்பியர் 3:20,** நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து **கர்த்தரா**யிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், இன்னும் நாம் அங்கு செல்லவில்லை.

நம்முடைய சரீரம் அங்கு இல்லாவிட்டாலும், பரலோகம்தான் நம் மனதின் சிந்தனையாக இருக்கிறது.

**2 பேதுரு 1:3-4,** தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, 4. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

When you were saved positionally, you were taken out of the world.

**1 யோவான் 5:5,** இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

நீங்கள் கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கும்போது உலகத்தை ஜெயித்தீர்கள்.

அந்த தெய்வீக வல்லமையை, திவ்விய வல்லமையை, ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் சுதந்தரிக்கும்போது, இந்த உலகத்தின் மாறுபாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டீர்கள்.

மறுரூபமாக்கப்பட்டீர்கள்.

உலகத்தை கடந்துவிட்டீர்கள் You transcended the world

இப்போது உங்கள் சம்பாஷனை, வாழ்க்கைமுறை யாவும் பரலோகத்தின் முறைகள்.

என்ன ஒரு அற்புதமான உண்மை!

ஆகவே, ஒவ்வொரு விசுவாசியும், அண்டசராசரங்கள் யாவும் படைத்த கர்த்தரோடும், அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவோடும், பரிசுத்த ஆவியானவரோடும், உன்னதங்களிலே மெய்யான புதிய உறவிலே நுழைந்துவிட்டீர்கள்.

நீங்கள் இரட்சிக்கப்பட்ட நொடியிலே, கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தில் நீங்கள் வசிப்பதற்கு அனுமதித்துவிட்டார்.

அப்படியானால், ஆவிக்குரிய வாழ்வு என்பது பரலோக வாழ்வு

**வ 1**, நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்

இது ஒரு தெய்வீக ஐக்கியம், மேலான பார்வை.

இந்த இடத்தில்தானே நீங்கள் தொடர்ந்து கர்த்தருடைய மகிமையை கண்டு, பரிசுத்த ஆவியானவராலே அவருடைய சாயலாய் மறுரூபமாக்கப்படுகிறீர்கள்.

**2 கொரிந்தியர் 3:18**, நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

***உங்கள் மனம் பரலோகத்தில் இல்லாதிருக்குமானால் எப்படி கர்த்தருடைய மகிமையை காண முடியும்?***

கிறிஸ்துவை குறித்தோ, தேவனை குறித்தோ, பரிசுத்த ஆவியானவரை குறித்தோ சிந்திக்காமல் எப்படி அவருடைய மகிமையை தரிசித்துக்கொண்டிருக்க முடியும்?

இந்த ஒரு சிறிய வேத பகுதி, உண்மையான ஆவிக்குரிய அனுபவத்தின் ஆரம்பமாகும்.

மெய்யான ஆவிக்குரிய அனுபவம் என்பது, உலகத்தில் சிநேகம் வைக்காமல், மேலானவைகளை சிந்திப்பதேயாகும்.

இந்த வழக்கமான சிந்தனைகளை செயல்பாடுகளை நிராகரித்து, உலகத்திற்கு புறம்பேயிருந்து உலகத்தை பார்க்கும்போது, திவ்விய வல்லமையின் பெலனை பெற்று உலகத்தை சுவிசேஷத்தினால் தொட முடியும்.

சுவிசேஷம் அறிவிக்க எல்லா வசனமும் தெரிந்திருக்க வேண்டியது முதன்மையல்ல.

சுவிசேஷம் அறிவிக்க எங்கு செல்லவேண்டும் என்பது முதன்மையானது அல்ல.

முதன்மையானது என்னவேன்றால், பரலோகத்தின் பார்வையால் உலகத்தை பார்த்து அதை தேவ பெலத்தோடு அணுகுவதே.

**V 1,** நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்

எழுந்ததுண்டானால் என்றல்லாமல், எழுந்ததினால் என்று மொழிபெயர்க்கப்-பட்டிருக்க வேண்டும். ஏனெனில், நாம் எழுந்தது நடந்து முடிந்த உண்மை.

*நீங்கள் ஏற்கனவே மரித்துவிட்டீர்கள். இதை **கலாத்தியரும்**, **ரோமர்** புத்தகமும் தெளிவாக விளக்குகின்றன.*

### *எப்போது மரித்தீர்கள்?*

*இரட்சிக்கப்பட்டபோது.*

*கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அடிக்கப்பட்டீர்கள்.*

*ஆகவே, நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது மரித்தீர்கள்.*

*உலகத்துக்கு மரித்தீர்கள்.*

***ரோமர்** 7ன் படி, முந்தைய கணவனான பாவத்துக்கு மரித்தீர்கள். பின்னர், மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திய ஜீவனை பெற்றீர்கள்.*

*நித்திய வாழ்வு பரலோக வாழ்வு.*

*ஆகவே, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்ட போது, கர்த்தருடைய பரலோக பரிணாமத்தில் உயிர்த்தீர்கள்.*

*உங்கள் இருதயம் கர்த்தருக்கு திறந்திருக்கிறது.*

*உங்கள் வாழ்வு அவருடைய விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் திறந்திருக்கிறது.*

*கிறிஸ்துவுடனே கூட உயிர்த்த வேளையிலிருந்து, மாம்சப்பிரகாரமான இந்த வழக்கமான பழைய வாழ்க்கையை நீங்கள் வாழவில்லை.*

*தேவன் மாத்திரமே கொடுக்கக்கூடிய தெய்வீக தரத்திலுள்ள நித்திய வாழ்க்கையை வாழ்கிறீர்கள்.*

*அவரை விசுவாசித்த அந்த வேளையிலே, அவரைப்போலவே ஒரு உயிர்த்தெழுந்த ஜீவியத்தை ஜீவிக்கிறீர்கள்.*

**பிலிப்பியர் 3:20,** நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து **கர்த்தரா**யிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

*ஆனால், உங்கள் மனம் இவ்வுலக காரியங்களில் சிக்கிக் கொண்டிருக்குமானால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க வேண்டிய நிலையில் ஜீவிக்காமல் இருக்கிறீர்கள் என்று பொருள்.*

*கிறிஸ்துவுக்குள் நீங்கள் இருக்க வேண்டிய நிலைக்கு உங்களை உயர்த்துவது தான் கிறிஸ்தவ ஜீவியம்.*

*கிறிஸ்துவுக்குள், நித்திய ஜீவன் உண்டு. நித்திய ஜீவன் நம்மை கர்த்தருடைய பிரசன்னத்தில் சேர்க்கிறது. நாம் அவரைப்போல் வாழ்கிறோம், அவரைப்போல் சுவாசிக்கிறோம்.*

*முதல் நான்கு வசனங்களை பார்ப்போமானால்,*

V 1, "கிறிஸ்துவுடன்கூட"

V 1, "கிறிஸ்து வீற்றிருக்கும் இடத்திலுள்ள"


V 3, "கிறிஸ்துவுடனே"

V 4, "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்"

*இந்த வசனங்களின் முக்கியத்துவம் தெளிவாக தெரிகிறது. கிறிஸ்துவே நமக்கு எல்லாம்.*

*அவரே நம் உயிர்த்தெழுந்த வாழ்வின் அச்சாரமும் மையமும்.*

*அப்படியானால், ஒரு விசுவாசி தெளிந்த புத்தியுடன் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும்.*




*"மேலானவைகளைத் தேடுங்கள்."*

*கிறிஸ்துவை நாடுவதே நம் முழுமுதற்கடமை.*

***கொலோசெயர் 2.***

- *மனித ஆலோசனைகளை கொண்டு பயமுறுத்தும் எந்த சிந்தனைக்கும் இடம் கொடாதிருங்கள்.*
  *கிறிஸ்துவே நம் எல்லாம்.*
- *மனித கோட்பாடுகளையும் சடங்குகளையும் நீதிகளையும் கற்பிக்கிறவர்களோடு ஐக்கியம் கொள்ளாமலும், அவர்கள் உங்களை பயமுறுத்தாமலும் பார்த்துக்கொள்ளுங்கள்.*
  *கிறிஸ்துவே நம் எல்லாம்.*

- *தேவ தூதர்கள் அந்நிய அக்கினி வினோத அனுபவங்களை கூறுகிறவர்களோடு துணை போகாமலும், அவர்களுக்கு பயப்படாதிருங்கள்.*
  *கிறிஸ்துவே நம் எல்லாம்*.
- *மாம்சத்தின்படி தங்களுக்கு தாங்களே வாழ்கிறவர்கள் உங்களை நெருங்காமலும் பயமுறுத்தாமலும் பார்த்துக்கொள்ளுங்கள்.*
  *கிறிஸ்துவே நம் எல்லாம்.*

- *Don't let anybody come along and intimidate you with human philosophy.*

  ***Christ is all.***

- *Don't let anybody come along and intimidate you with human rules and ritual and legalism.*

  ***Christ is all.***

- *Don't let anybody come along and intimidate you with their angels and their ecstatic experiences.*

  ***Christ is sufficient.***

- *Don't let anybody come along and intimidate you with their acts of self-styled fleshly self-indulgence.*

  ***Christ is all.***

**கொலோசெயர் 2:10,** மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

கிறிஸ்து இருப்பதால் நாம் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம்.

உலகத்தின் எந்த மத ஆசாரிப்புகளும் நமக்கு அவசியமில்லை. அகவே கிறிஸ்துவோடு எதையும் இணைக்க தேவையில்லை.

You don't need to say

- Christ plus human philosophy,
- Christ plus legalism,
- Christ plus mysticism,
- Christ plus asceticism.

*நமக்கு தேவையானதெல்லாம் கிறிஸ்து மாத்திரமே.*

*கிறிஸ்துவோடு நேரம் செலவழிக்காமல், அவர் மாத்திரமே நமக்கு தேவை என்பதை உணராமல் இருப்பதால்தான் இப்படிப்பட்டவர்களையும், அவர்கள் வார்த்தைகளையும் கேட்கும்போது கிறிஸ்தவர்கள் பயப்படுகிறார்கள்.*

*கிறிஸ்துவை முக்கியப்படுத்தும் வாழ்க்கை வாழுங்கள்.* Live a Christ conscious life.

*கிறிஸ்துவுடனேகூட எழுந்த நீங்கள், புதிய நித்திய வாழ்க்கை வாழுங்கள்.*

*பழைய வாழ்க்கை ஒழிந்துபோனது.*

*நீங்கள் உன்னதங்களில் வீற்றிருக்கிறீர்கள் என்பதை எப்போதும் உணர்ந்து நினைவுகூர்ந்து, அந்த வெளிச்சத்தை நிஜமாக்கி வாழுங்கள். நீங்கள் யார் என்பதை மறந்துவிடாதீர்கள்.*

## *Responsibility* – பொறுப்பு

V1, நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்

*மேலானவைகளை தேடுங்கள். எப்பொழுதும், தொடர்ந்து மேலானவைகளை தேடுங்கள்.*

*பரலோகத்துக்குரியவைகளை நாடுவதையே வாழ்க்கையின் முறையாக வைத்துக்கொள்ளுங்கள்.*

*விநோதமானவற்றையோ உலகை விட்டு மொத்தமாக விலகியிருப்பதையோ ஆவியானவர் இங்கு கூறவில்லை.*

*மாறாக, பரலோக சிந்தையில் நாம் மூழ்கி, இந்த உலகத்தில் நாம் செய்பவை பரலோகத்தின் சிந்தையால் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்பதே பவுலின் விருப்பமாக இருக்கிறது.*

***மேலானவைகளை சிந்திப்பது என்றால் என்ன? பரலோகத்தில் இருப்பவரை குறித்து சிந்திப்பது.***

*ஏதோ, பரலோக வீதியில் நடப்பதுபோல் கனவு காணுங்கள் என்று பவுல் கூறவில்லை.*

*பரலோக சிந்தை என்பது, பரலோகத்தில் வீற்றிருக்கிறவரை குறித்த சிந்தனை, அங்கு அரசாளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை குறித்த சிந்தனை.*

நாம் இரட்சிக்கப்பட்டபோது உன்னதத்தில் நுழைந்தாலும், நமது இருதயத்தை உன்னதத்திலேயே வைப்பதுதான் மிகவும் கடினமானது.

இந்த உலகத்தில் நமது சம்பத்து, ஐசுவரியம், வீடு, பொருட்கள், நம்மை சுற்றியிருப்பவர்கள், உலகத்தின் அனுதின வாழ்க்கை ஆகியவற்றை குறித்து நாம் அதிக சிந்தையுள்ளவர்களாய் இருக்கிறோம்.

இந்த உலகத்திற்கு பரலோக பரிணாமத்தை நம்மால் அளிக்க முடியாததற்கு காரணம், பரலோக பரிணாமம் என்னவென்று நாமும் அறியாமல் இருப்பதே.

மத் 6:33ல் உள்ள வினைச்சொல், தொடர்ந்து தேடிக்கொண்டேயிருங்கள் என்பதே.

**மத்தேயு 6:33,** முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

இது கிறிஸ்து கொடுத்த புதிய கொள்கை அல்ல. இதை பழைய ஏற்பாட்டிலும் காணலாம்.

**1 நாளாகமம் 22:19,** இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய **கர்த்தரைத்** தேடுகிறதற்கு நேராக்கி, **கர்த்தருடைய** உடன்படிக்கைப் பெட்டியையும் தேவனுடைய பரிசுத்தப் பணிமுட்டுகளையும், **கர்த்தருடைய** நாமத்திற்குக் கட்டப்படும் அந்த ஆலயத்திற்குள் கொண்டுபோகும்படிக்கு நீங்கள் எழும்பி, தேவனாகிய **கர்த்தரின்** பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டுங்கள் என்றான்.

V 1, நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்

***மேலானவைகளை தேடுங்கள் என்றால், மேலானவைகள் எவை?***

மகிமையில் கிறிஸ்துவின் இருதயத்தில் பொதிந்திருக்கும் ஆவிக்குரிய நற்குணங்கள் தான் மேலானவை.

தாழ்மை, நற்குணம், சாந்தம், நீடிய பொறுமை, தயவு, ஞானம், மன்னிப்பு எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு என்னும் நிதர்சனங்கள் தான் அவை.

இவை தான் பரலோகத்தின் கொள்ளைப்பொருட்கள்.

இவை தான் கிறிஸ்துவின் இருதயத்தை ஆட்கொண்டவை. அவரோடு நாம் நேரம் செலவளிக்கும்போதும், இவை தான் நம் இருதயத்தை ஆட்கொள்ளுகின்றன.

### இயேசுவின் விருப்பத்தை அறிவது எப்படி?

அனைவரும் அறிந்த பதில். அவரோடு நேரம் செலவழிப்பதின் மூலம் தான்.

பவுல் நம்மை உன்னதத்தின் உயரங்களுக்கு அழைத்துச் செல்கிறார். கல்லறையின் மறுபக்கத்திற்கு கைவிடப்படாத பாழாயப்போகாத ஆவிக்குரிய தேசத்திற்கு அழைத்து செல்கிறார். இந்த தேசத்தில் கிறிஸ்தவனுக்கு:

- புதிய எண்ணங்கள்
- புதிய விருப்பங்கள்
- புதிய வளங்கள்
- அனைத்தும் பரலோகத்திற்குரியவை




இந்த வாழ்வை பவுல் கலாத்தியரில், மேலான எருசலேம் என்று கூறுகிறார். அதுவே நம் தேவனின் பரம ஸ்தலம், நாம் ஓய்வெடுக்கும் ஸ்தலமும் அதுவே. அங்கிருந்து இந்த உலகிற்கு தேவையான ஆவிக்குரிய நற்குணங்களை கொண்டுவரும்படி பவுல் விளைகிறார்.

V 2, "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்."

V 1, "தேடுங்கள்,"

V 2, "மேலானவைகளை தொடர்ந்து தேடிக்கொண்டே இருங்கள்."

உன்னதத்தை தேடுவது மாத்திரமல்ல, அதை சிந்திக்கவும் வேண்டும்

உங்கள் மனம் உன்னதத்தில் இருக்க வேண்டும்.

### எப்படி பரலோகத்தை தேடுவது?

### எப்படி மேலானவைகளை நாடுவது?

மேலானவைகளை சிந்திப்பதின் மூலம்

தேடுவது "Seek" என்பதன் கிரேக்க பதம் ***zēteō***. நாடுவது "set your mind on" என்பதன் கிரேக்க பதம் ***phroneō***.

நாம் உண்மையாகவே மேலானவைகளை தேட வேண்டுமானால், நம் உள்ளத்தை மேலானவைகள் மீது வைக்கும்படி ஆயத்தப்படுத்த வேண்டும்.

தேடுதலும் நாடுதலும் பவுலின் அகராதியில் மிக முக்கியமான வார்த்தைகள். திசை காட்டும் கருவியைப்போல் வடக்கு திசையை தேடி, அதை பிடித்துக்கொண்டு அதை நாடி இழுத்துக்கொள்வது போல், விசுவாசியும், உன்னதங்களின் தேவனுடைய ஈர்ப்பை தேடி அதை பிடித்து அவரை நாட வேண்டும்.

எப்படி தேடுவது? உள்ளத்தை மேலானவைகள் மீது வைப்பதின் மூலம். இதுவே நம் மனம். மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுதல்.

கர்த்தர் கொடுக்கும் வெளிப்பாடுகளின் மூலம் அவருடைய உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் விருப்பங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

### உன்னதங்களில் வாசம்பன்னுவது எப்படி?

இதயம் வேத தியானிப்பில் மூழ்கியிருக்கும்போது. ஏனெனில், வேத வாக்கியத்தின் மூலமே கர்த்தரைக் குறித்தும், கிரிஸ்துவைக்குறித்தும், பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் அறிகிறோம்.

தேவன் நம் சிந்தனைகளில் தங்கியிருக்கும்போது, அவருடைய நற்குணங்கள் நம் செய்யும் கிரியைகளில் வெளிப்படும்.

இந்த உலகத்திற்கு கொடுப்பதற்கு நம்மிடம் வேறு ஒன்றும் இல்லை. கர்த்தரை குறித்து நாம் சிந்திக்கும்போது, அவர் தம்முடைய எண்ணங்களை நம்முடைய எண்ணங்களில் விதைக்கிறார். இவ்வாறுதான் உன்னதத்தின் சுவிசேஷத்தை இந்த மண்பாண்டத்தில் கொண்டு சேர்க்க முடியும்.

கிறிஸ்துவோடு எழுந்த கிறிஸ்தவனுக்கு ஒரு புதிய நோக்கம் உண்டு. அவன் பயணிக்கும் திசை புதிது. திசை காட்டும் கருவி வடக்கின் மேல் ஈர்ப்பு கொண்டிருப்பதைப்போல், அவனுடைய ஆவி உன்னதங்களில் இயேசு கிறிஸ்துவின்மேல் ஈர்க்கப்பட்டிருக்கும்.

V 2, பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

நாம் சிந்தித்து நாடுவது கிறிஸ்துவையே!

## Resource – ஆதாரங்கள்

V 1, “கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.”

- ✓ இயேசு அங்கே இருக்கிறார்
- ✓ இயேசு அங்கு வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்
- ✓ ராஜரீக கணத்தோடு அவர் சந்நிதியில் நாம் வரவும், அவருடைய வல்லமையை சுதந்தரித்துக்கொள்ளவும் காத்துக்கொண்டிருக்கிறார்.

அதுவே நம் ஆதாரம்.

அவர் ராஜாவாக சிங்காசனத்தில் உயர்த்தப்பட்டு, பிதாவின் வலது பாரிசத்தில் ராஜ கிரீடம் சூட்டப்பட்டதின் சத்தியம், அவரே நம் ஆசீர்வாதத்தின் ஊற்று,

ஏனெனில், அவர் வீற்றிருக்கிறார்,

உயர்த்தப்பட்டிருக்கிறார்

பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

- நீர் கனப்படுத்தப்படுகிறீர்
- நீர் துதிக்கப்படுகிரீர்
- நீர் மகிமைப்படுத்தப்படுகிரீர்
- என்னுடையதெல்லாம் உம்முடையவைகள் என்று பிதா கூறியிருக்கிறார்

நாம் அவருடைய பிரசன்னத்தில் சென்று அவற்றை சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்.

நாம் மேலானவற்றை தேடும்போது, ஏதோ ஒரு சக்தியை தேடவில்லை. நாம் மேலானவற்றை தேடுகிறோம், ஏனெனில், அவர் அங்கே இருக்கிறார். நமக்கு ஒரு தேவை இருந்தது, அங்கு சென்றோம், அங்கே அவர் இருக்கிறார்.

**நம்முடைய புதிய ஜீவியத்தில் நம்மிடம் என்ன உண்டு?**

நாம் உன்னதங்களில் ஏற்கனவே அமரவைக்கபட்டிருக்கிறோம்.

நமக்கு ஒரு கடமை உண்டு,

நாம் அமரவைக்கப்பட்ட இடத்தில், நம் இருதயமும் வைக்கப்பட்டிருக்கட்டும்.

ஆதாரம் – நாம் தேடுவது அங்கே நமக்கு நிச்சயம் உண்டு.

## Reason - காரணம்.

V 3, ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

**எதற்கு மரித்தோம்?**

**கலாத்தியர்** 6:14, நானோ நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால்

உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்..

இந்த உலக கட்டமைப்புக்கு மரித்தோம்.

உலகத்திற்கு மரித்தோம்.

நம் ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

நாம் அங்குதான் உன்னதத்தின் புத்தம்புதிய ஜீவியத்தை வாழ்கிறோம். புத்தம்புதிய சிந்தையோடு வாழ்கிறோம்.

### "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" என்றால் என்ன?

1. *கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மூடி மறைக்கப்பட்டிருக்கிரீர்கள்*

உங்கள் ஜீவன், கிறிஸ்துவின் ஜீவனோடும், தேவனுடைய ஜீவனோடும் பின்னப்பட்டிருக்கிறது.

நீங்கள் ஆண்டவரோடு ஒரே ஆவியில் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

பிதாவும், குமாரனும், நாமும், ஒன்றாக இணைந்திருக்கிறோம்.

நாம் அங்கு செல்லும்போது, நீ யார், உன் அடையாளம் என்ன என்று அவர்கள் கேட்கப்போவதில்லை. மாறாக, இவ்வளவு நாள் எங்க சென்றிருந்தாய் என்று தான் கேட்பார்கள். அதுவே நம் வீடு.

நம் ஜீவன் கிறிஸ்துக்குள் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவையல்லாமல் தேவன் நம்மை காண்பதில்லை. நம்மையல்லாமல் அவர் கிறிஸ்துவையும் காண்பதில்லை.

இதுவே கிறிஸ்துவுக்குள் நம் ஜீவன் என்பதன் பொருள்.

2. *உங்கள் ஜீவன் உலகத்திலிருந்து மறைத்துவைக்கப்பட்டிருக்கிறது - Your life is concealed from the world.*

உலகத்தார் இதை அறிகிறதில்லை.

அவர்கள் நீங்களும் அவர்களைப்போலவே என்று நினைத்துக்கொள்கிறார்கள்.

நீங்கள் அறிந்ததை அவர்கள் அறிவதுமில்லை.

மாம்சமான மனிதன் தேவனுடையவைகளை அறிவது இல்லை.

***நீங்கள் உன்னதங்களில் வசிப்பவர் என்றோ, பரலோக வாசி என்றோ அவர்கள் அறியமாட்டார்கள்.***

***அவர்களால் அதை கிரகிக்கக்கூட முடியாது.***

*இது அவர்கள் இருதயங்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது.*

### *3. நித்திய பாதுகாப்பு - Everlasting security.*

*என் ஜீவன் கிறிஸ்துவுடனே கர்த்தருக்குள் மறைந்திருக்குமானால், எனக்கு ஒரு பாதுகாப்பு.*

**ரோமர் 8**ஐ *வாசிக்கும்போது இந்த சத்தியத்தினால் நிரப்பப்படுவீர்கள்.*

*அவருக்குள் மறைந்த புதிய ஜீவன்.*

*உலகத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஜீவன்*

*அவரோடு பாதுகாப்பாக இருக்கும் ஜீவன்.*

*உன்னதங்களில் ஜீவிப்போம்.*

*ஒருசிலர் உங்களால் உன்னதங்களில் வாழ முடியாது என்று பயமுறுத்துவார்கள், ஆனால் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்.*

## ***Revelation - வெளிப்பாடு.***

V 4, நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

*உலகத்தார் ஒருவேளை நம்மை இப்போது அறியாமல் இருந்தாலும், ஒருநாள் நிச்சயமாகவே நாம் பரலோக வாசிகள் என்று அறிந்துகொள்வார்கள்.*

*ஏனெனில், அவருடைய இரண்டாம் வருகையிலே (**வெளிப்படுத்தல் 19**) நாமும் அவரோடு கூட வெளிப்படுவோம். வெள்ளை அங்கி தரித்தவராய், வெள்ளை குதிரையிலே, தேவ சேனையோடு அவர் வானத்தில் வெளிப்படுவார். அவரோடு நாமும் தூதர்களோடு வெளிப்படுவோம்.*

*நித்தியத்தின் வாக்கு, காலத்தின் வாக்கை முறியடிக்கும். தலைகீழாக மாற்றும். கர்த்தருடைய பிரசன்னத்தில் உண்மையாய் இருந்தவர்கள் யார் என்பது அன்று ஜனங்களுக்கு வெளிப்படும்.*

அவர் வருகையிலே நாமும் அவருடைய மகிமையோடு வெளிப்படுவோம். அப்போது, நம்முடைய உன்னத வாழ்வை காணக்கூடாதபடி இருக்கும் திரை விலகும். நம்மை வெறுத்து, துன்பப்படுத்தி, உதாசீனப்படுத்தும் இந்த உலகம் அந்த மகிமையினால் இருளடையும்.

### *உங்கள் வாழ்வின் கருப்பகுதி என்ன?*

உங்கள் வாழ்வின் கருப்பகுதி, உங்கள் இருதயத்தை உன்னதங்களில் வைப்பது என்றால், நீங்கள் உன்னதத்தில் வாழுவீர்கள்.

உன்னதத்திலிருந்து இந்த உலகுக்கு கொடுக்கும்படி உங்களிடத்தில் நற்குணங்களும், வல்லமைகளும் உண்டு.

இந்த நற்குணங்கள் மூலமாகவும், வல்லமையின் மூலமாகவும், கிறிஸ்துவுக்காக ஜனங்களை நீங்கள் சந்திக்க முடியும்.

அவர்கள் வாழ்க்கையில் வித்தியாசத்தை உண்டுபண்ணும் வகையில் அவர்களை தொட முடியும்.

**Ptolemy** எனும் அறிஞர், பூமியே சூரிய குடும்பத்தின் solar system மையம் என்றும், பிற கிரகங்கள் எல்லாம் பூமியையே சுற்றுகின்றன என்று கூறினார். 1,300 வருடங்கள் யாவரும் இதையே நம்பினார்கள்.

ஆனால், **Copernicus** எனும் அறிஞர் வந்த பிறகுதான், இந்த கிரகங்கள் எல்லாம் சூரியனை சுற்றுகிறது என்று கூறினார்.


Ptolemyயின் கூற்றுப்படி சொல்லப்பட்ட மாயையை ஒரு சில கிறிஸ்தவர்கள் இன்றும் நம்பி, இந்த சராசரங்கள் யாவும் உலகத்தை சுற்றுகிறது என்று நம்புகிறார்கள். ஆனால் அது மாயை, உண்மையல்ல.

குமாரனே, கிறிஸ்துவே எல்லாம்.

அவரே உங்கள் வாழ்வின் நாயகர் என்று நம்புகிறேன்.

நீங்கள் உன்னதத்தில் ஜீவிக்கிறீர்கள் என்று நம்புகிறேன்.

***Hudson Taylor*** சீனாவை குறித்து மிகவும் பாரப்பட்ட ஒருவர். எது அவரை சீனாவைக் குறித்து பாரப்பட வைத்தது?




அவருடைய வாழ்க்கை சரிதையை எழுதுபவர்களின் வார்த்தைப்படி, இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் வாழ்ந்த மனிதர். தொலைந்த ஆத்துமாக்களுக்கென்று இயேசுவின் இருதய துடிப்பை அவர் அங்கே உணர்ந்தார். கிறிஸ்துவின் பாரம் என்னுடைய பாரமாக மாறியது என்றார். அவர் உன்னதங்களிலே வாழ்ந்து இயேசு கிறிஸ்துவின் பாரத்தை உணர்ந்துகொண்டார்.

தங்களை தாங்களே திருப்திப்படுத்தும் இங்கிலாந்து சபையை பார்த்தார். அது அவருக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. அழிந்துபோகும் ஆத்துமாக்களை குறித்து கரிசனையற்று தங்களை தாங்களே திருப்தியாக்கிக்கொள்ளும் சபையை கண்டு மிகுந்த ஆவிக்குரிய பாரத்தினால் நிறைந்தார். பாரப்பட்டு தன்னோடு கப்பல் பயணத்தில் செல்வதற்கென 24 பேர் சேரவேண்டும் என்று ஜெபித்தார்.

நாமும் Ptolemyயின் கூற்றுப்படி நீதியின் சூரியனான கிறிஸ்துவை விட்டு உலகத்தை சுற்றிக்கொண்டு, நம்மை நாமே சேவித்துக்கொண்டு, இருக்கிறோமா? சிந்திப்போம்.

Hudson Taylor இந்த உலகத்தை விட்டு, உன்னதங்களில் தம்முடைய இருதயத்தை வைத்து, இயேசுவின் இருதய துடிப்பை அறிந்து, அதன் மூலம் இந்த உலகத்தில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்தார்.

கர்த்தர் நம்முடைய இருதயத்தையும் புதிதாக்குவாராக.

# 4. அன்பில் நடப்போம் - *Walk in Love*

**எபேசியர் 5:1-7,** ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, 2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். 3. மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. 4. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். 5. விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. 6. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; 7. அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்.




*நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பவராக இருந்தால், உங்களுக்கு ஒரு பழைய வாழ்க்கை உண்டு.*

**எபேசியர் 4:22-24,** அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, 23. உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, 24. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

*இந்த கடிதத்தின் மூலம் பவுல் சொல்ல விரும்பும் கருத்தின் சாராம்சம் இது தான்.*

**எபேசியர் 2:10,** ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

*இரட்சிப்பு என்றால் முழுமையான மறுரூபம் என்பதையே எபேசியர் புத்தகம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது.*

*நாம் கடந்து வந்த பாதையில் அப்படியே 180° முற்றிலும் திரும்பி நேர்மாறான பாதையில் பயணிப்பது.*

*சத்துருவின் அதிகாரப் பிடியிலிருந்து விடுதலை பெற்று, அவனுடைய அதிகாரத்தில் இல்லாமல் இருப்பது.*

**எபேசியர் 3:19,** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்,.

*சத்துருவின் அதிகாரத்தில் நடப்பதை விடுத்து, கர்த்தருடைய ஆவியானவரில் நடப்பது.*

**எபேசியர் 2:2,** அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.

*இரட்சிப்பு என்பது அப்படிப்பட்ட ஒரு ஆச்சரியமான மாற்றம்.*

*நான் உண்மையான கிறிஸ்தவன் என்பதை எப்படி அறிந்துகொள்வது?*

*நாம் ஒருசில காரியங்களுக்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

வ **1,** ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, 2. கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும்

பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்

*நாம் அவரால் நேசிக்கப்பட்ட பிள்ளைகளாக இருப்பதாலும், அவர் நம்மை பிள்ளகளாக்கும்படி நேசித்ததாலும்,*




*நாம் அவருடைய திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக இருப்பதாலும்,*

*நாம் தேவனை பிரதிபலிக்கிறவர்களாக, அவரைப்போல் அன்பிலே நடப்பதற்குரிய பெலன் நமக்கு உண்டு.*

*அன்பிலே நடப்பதை குறித்து இப்போது பார்ப்போம்.*

*அன்பிலே நடப்பது தான் கிறிஸ்தவர்களாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற மிக முக்கியமான அழைப்பாகும்.*

**எபேசியர் 4:1-3,** ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, 2. மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, 3. சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

*அன்பு என்றால் சகிப்புத்தன்மையோடு இருப்பது என்று கற்றுக்கொள்வதற்கு வெகு காலம் செல்லாது.*

ஆனால் அன்பு என்றால் சகித்துக்கொள்வது மாத்திரமல்ல.

அன்பு என்பது தியாகம்.

அன்பு தியாகத்தோடு நின்றுவிடுகிறதில்லை.

**எபேசியர் 4:32,** ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

அன்பிலே உயரிய அன்பு மற்றவர்களை மன்னிக்கும் அன்பு.

இதுவே அடிப்படை சத்தியம்.

நாம் மற்றவர்களை மன்னிப்பதின் மூலம் தேவனை பிரதிபலிக்க முடியும்.

மன்னிப்பு என்னும் நிதர்சனத்தோடு உங்கள் அன்பை ஒப்பிட்டிப்பாருங்கள்.

நீங்கள் கர்த்தரைப்போல் இருக்க வேண்டுமானால், மற்றவர்களை நீங்கள் மன்னித்துத்தான் தீர வேண்டும்.

நீங்கள் கர்த்தரைப்போல் இருக்க வேண்டுமானால், முழுமையாகவும் முற்றிலுமாகவும் முழு இரக்கத்தோடும், தயவோடும், மனதுருக்கத்தொடும் மன்னித்துத்தான் தீர வேண்டும்.

கர்த்தரைப்போல் இருக்க வேண்டும் என்று சொல்வது முதலில் ஒரு மிகப்பெரிய காரியமாகவும், சற்று அதிகமானதாகவுமே தெரியும்.

ஆனால் வேதம் கர்த்தரைப்போல் அன்பு செலுத்துவதை மாத்திரம் சொல்லி நிறுத்திக்கொள்ளவில்லை. பேதுரு சொல்வதும் உடனே நமக்கு நினைவுக்கு வரும்.

1 **பேதுரு 1:15-16**, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். 16. நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

கர்த்தர் நம்மிடத்தில் மிக அதிகமாக எதிர்பார்கிறார் என்றே நமக்கு தோன்றும். பரிசுத்தத்திலும் கூட அவர் மிக அதிகமான ஒரு அளவுகோலை நமக்கு வைத்திருக்கிறார்.

**இது எங்கே எழுதப்பட்டிருக்கிறது?**

**லேவியராகமம் 11:44-45,** நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக. 45. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக.

*நாம் கர்த்தரைப்போல் இருப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

*இது நம்மால் எட்ட முடியாததானாலும், கிறிஸ்தவத்தில் அத்தியாவசியமாக கடைபிடிக்க வேண்டியதாகவும் இருக்கிறது.*

*ஆனால் பவுல் இங்கு எதை குறித்து விளக்குகிறார் என்று பார்ப்போம்:*

- *நாம் தேவனைப்போல் படைக்கும் திறன் பெற வேண்டும் என்று கூற வில்லை*
- *நாம் அவரைப்போல் ஒப்பற்றவராக இருக்க வேண்டும் என்று கூற வில்லை*
- *நாம் அவரைப்போல் எங்கும் வியாபித்திருக்க வேண்டும் என்பதுமில்லை*
- *நாம் அவரைப்போல் சர்வ வல்லமை படைத்திருக்க வேண்டியதில்லை*
- *நாம் அவரைப்போல் சகலத்தையும் அறிந்திருக்க அவசியமில்லை*

*ஆனால், பவுல் என்ன கூறுகிறார், தேவ பிள்ளைகள் மீது அன்பு செலுத்துவதில், நாம் கர்த்தரைப்போல் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.*

*அப்படிப்பட்ட அன்பிற்கு ஆதாரம், அஸ்திபாரம் மன்னிப்பு மட்டுமே.*

*கர்த்தர் அன்புகூர்ந்து நமக்கு கொடுக்கும் எந்த வரங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னும், அவருடைய அன்பின் மன்னிப்பு நமக்கு வேண்டும். அந்த மன்னிப்பு கிறிஸ்துவின் மூலம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

**யோவான் 3:16**, “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”

*கவனியுங்கள், கர்த்தருடைய அன்பு.*

*கர்த்தருடைய அன்பு நம்மை கல்வாரி சிலுவையினிடத்திற்கும், கிறிஸ்துவினிடத்திற்கும், அவரை விசுவாசித்து, இரட்சிக்கப்படுவதற்கும் நடத்துகிறது.*

*அதன் பின், அவருடைய அன்பு அளவில்லாமல் நம்மேல் ஊற்றப்பட்டு நம்முடைய பாவங்களிலிருந்து நித்திய மன்னிப்பை நமக்கு அருளுகிறது.*

**எபேசியர் 4:32,** ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

*"கிறிஸ்துவுக்குள் தேவன்" உங்களுக்கு மன்னித்ததுபோல, மன்னியுங்கள்.*

*இவ்வாறு, மன்னிப்பதில் தேவனைப்போல் இருங்கள். கிறிஸ்து எப்படி நாம் மன்னிக்கபடுவதற்கு தம்மையே ஒப்புக்கொடுத்தாரோ, அப்படியே நாமும் அவரைப்போல் மன்னிக்க வேண்டும்.*

*அவரைப்போல்* "imitators" *என்கிற வார்த்தையின் கிரேக்க பதம்* ***mimētai*** *என்பதாகும். அதிலிருந்து* mimics *என்கிற ஆங்கில வார்த்தை வருகிறது.* mimic *என்றால் அப்படியே அவரைப்போல் செய்வது என்று பொருள்.*

*நாம் கர்த்தருடைய நித்திய குணாதிசயங்களை பிரதிபலிக்க முடியாது. ஆனால் இங்கு, மன்னிப்பதில் அவரை பிரதிபலிக்க அழைக்கப்படுகிறோம்.*

*அவரைப்போல் தியாகத்தோடு மன்னிக்கும்படி நமது வாழ்க்கையை அமைக்க அழைக்கப்படுகிறோம்.*

*மன்னிப்பு என்னும் அஸ்திபாரத்தின் மூலம் தேவ அன்பு நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

*எபேசியர் புத்தகத்தின் முதல் 3 அதிகாரங்களில், அந்த மன்னிப்பின் மூலம் பெற்ற அன்பினால் நமக்கு கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களை பவுல் விளக்குகிறார்.*

***கர்த்தர் நம்மை மன்னிக்கும் போது, எதை நமக்கு கொடுத்தார்?***

***நாம் கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்ட போது எதை கொடுத்தார்.***

| | |
|---|---|
| தமக்கு முன் நிற்கும் தகுதி கொடுத்தார் | He gave us a new standing before Himself. |
| நாம் நீதிமான்கள் என உறுதிப்படுத்தப்பட்டு, நீதி நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது | We are declared righteous, and His righteousness is credited to us. |

| | |
|---|---|
| புதிய வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது | He declared that we have new life. |
| நாம் புத்துயிர்க்கப்படுகிறோம் | We have regeneration. |
| மீண்டும் பிறக்கிறோம் | We have been born again. |
| புதிய சிருஷ்டியாக இருக்கிறோம் | We are new creations. |
| நம்முடைய நடவடிக்கைகளில் புதிய நீதி காணப்படுகிறது | We have a new righteousness in terms of our conduct. |
| நாம் மாற்றப்படுகிறோம் | We have been converted. |
| பழைய மனிதனாய் இல்லாமல், பழையன ஒழிந்து, புதிய மனிதனாய் இருக்கிறோம் | We aren’t what we used to be. Old things pass away, new things come. |
| சத்துருவின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, புதிய பிதாவினிடத்தில் இருக்கிறோம். கர்த்தரே அந்த புதிய பிதா. | We have a new father, no longer the devil, but God Himself. |
| புதிய சுதந்திரம். கர்த்தரின் கோபத்திற்கு பதிலாக நித்திய ஆசீர்வாதங்கள். | We have a new inheritance, no longer the wrath of God, but the eternal blessing of God. |
| புதிய குடியிருப்பு. அந்தகாரத்தின் பிரஜைகளாக இல்லாமல், ஒளியின் ராஜ்ஜியத்தின் பிரஜைகளாகவும், பரலோக ராஜ்ஜியத்தின் பிரஜைகளாகவும் | We have a new citizenship, no longer citizens of the kingdom of darkness, but citizens of the kingdom of light, the kingdom of heaven. |
| புதிய ஆண்டவர் | We have a new master. |
| ஆக்கினைத்தீர்ப்பிலிருந்தும் பாவத்தின் அதிகார பிடியிலிருந்தும் விடுதலை | We have a new freedom from condemnation and sin’s dominating power. |
| புதிய பாதுகாப்பு. | We have a new security. |
| நித்திய ஜீவன் அளிக்கப்பட்டதின் மூலம் பாதுகாப்பும், எப்போதும் | We are kept safe by the granting of eternal life to us, which is secured by the ever-present Holy Spirit. |

| | |
|---|---|
| இருக்கும் பரிசுத்த ஆவியின் அச்சாரமும் | |
| புதிய நித்திய சமாதானம் | We have a new peace that is everlasting. |
| பிதா குமாரன், பரிசுத்த ஆவியானவர் மற்றும் பிற விசுவாசிகளோடு புதிய ஐக்கியம் | We have a new union with Father, Son, Holy Spirit, and every other believer. |
| இரட்சிக்கப்பட்ட சபையோடு புதிய ஐக்கியம் | We are part of a new fellowship, the redeemed church. |
| புதிய தெய்வீக சந்தோஷம் | We have a new heavenly joy. |
| நமக்குள் புதிய ஆவி | We have a new spirit in us. |
| புதிய இருதயம் | We have a new heart. |
| புதிய ஆவிக்குரிய வல்லமை | We have new spiritual power. |
| கர்த்தரை சேவிப்பதற்கு புதிய பெலன் | We have new ability to serve God. |
| புதிய உயர்ந்த உன்னத அழைப்பு | We have a new high and holy calling. |
| புதிய நோக்கம் | We have a new purpose, and |
| புதிய அன்பு | We have a new love. |

அன்பே நாம் கிறிஸ்துவினிடத்தில் பெற்றுக்கொண்ட யாவற்றிற்கும் மூல காரணமாக இருக்கிறது.

இவையெல்லாம் நம்முடையவைகள். ஏனெனில் நாம் கர்த்தருடையவர்கள். கர்த்தரும் நம்முடையவர்.

**1 யோவான் 4:7-10**, பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். 8. அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். 9. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 10. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய

பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

*மனுக்குலத்தின்மேல் கர்த்தருடைய அன்பின் தாராளம், அவருடைய மன்னிப்பில் வெளிப்படுகிறது.*

*மன்னித்தல் அன்பின் வெளிப்பாடு.*

*இந்த மன்னிப்பை நாம் சம்பாதிக்க முடியாது.*

*அவர் தாமாக இலவசமாக நமக்கு கொடுத்த ஈவு.*

*நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு, இந்த மன்னிப்பில் தொடங்குகிறது. இந்த மன்னிப்பில்தான் உண்மையாகவே எல்லாமே தொடங்குகிறது.*

எபேசியர் **2:4-7**, தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, 5. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். 6. கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, 7. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

*கர்த்தர் நம்மை மன்னித்து, அவர் நம்மீது வைத்த அன்பை நித்திய நித்தியமாய் பொழியும்படி விரும்புகிறார்.*

*“நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, நம்முடைய வாழ்வு மன்னிப்பிலே ஊன்றியிருக்க வேண்டும் என்றே கூறுகிறார்.*

**1 தீமோத்தேயு 1:5**, கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.

***I கொரிந்தியர் 13****ல் சொல்லப்பட்டது போல் “நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன்”.*

*அன்பே எல்லாமுமாயிருக்கிறது.*

**1 கொரிந்தியர் 13:13**, இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

ஆர்வமாகவும் விருப்பத்தோடும் மன்னிப்பதே அன்பு. எல்லாவற்றிலும் பெரிய அன்பு என்னவென்று அறிய வேண்டுமானால், நாம் இயேசுவின் வார்த்தைகளை கேட்க வேண்டும்.

**யோவான் 15:13,** "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை."

எல்லாவற்றிலும் பெரிய அன்பு தம்மைத்தாமே, நம் உயிரையும் கூட ஒப்புக்கொடுக்கிற அன்பு. இந்த அன்பை நாம் யாரும் செலுத்தியதில்லை. இது மிகவும் ஆழமான அன்பு.

**ரோமர் 5:8** நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

**V 32,** கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல,

**1 யோவான் 2:12**, பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.

கர்த்தருடைய மன்னிப்பை நாம் பெற்றிருந்தாலும், அது அவருடைய நாமத்தின் மகிமைக்காகவே.

கர்த்தருடைய மன்னிப்பு:

- ✓ அவருடைய கிருபையை வெளிப்படுத்துகிறது
- ✓ அவருடைய இரக்கத்தை வெளிப்படுத்துகிறது
- ✓ அவருடைய மனதுருக்கத்தை வெளிப்படுத்துகிறது
- ✓ அவருடைய அன்பை வெளிப்படுத்துகிறது
- ✓ தொடர்ந்து இவை எல்லாவற்றையும் நித்தியத்திற்கும் வெளிப்படுத்துகிறது.

புதிய வானத்திலும், புதிய பூமியிலும், அவருடைய மன்னிப்பின் நிமித்தம் இரட்சிக்கப்பட்டவர்கள் அவரை இடைவிடாமல் துதிப்பார்கள்.

மன்னிப்பு எனும் அடையாளம் இல்லாமல், நாம் கர்த்தரை பின்பற்றி அன்பு செலுத்த முடியாது.

*தேவனை பின்பற்றினால், உங்களை துக்கப்படுத்தினவர்களிடத்தில், தேவன் உங்களிடத்தில் நடந்துகொண்டது போலவே நடந்துகொள்ளுங்கள்.*

**லூக்கா 6:36**, ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.இந்த குணத்தை நோக்கித்தான் பவுல் நம்மை நகர்த்துகிறார்.

**எபேசியர் 3:17-21,** விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி 18. சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; 19. அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். 20. நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, 21. சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

*விசுவாசிகள் யாவரும் அன்பிலே நிலைத்திருக்கும்படி ஜெபிக்கிறார். இதுவே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை.*

*புரிந்துகொள்ள முடியாத அந்த தெய்வீக அன்பின் முழு பரிணாமத்தையும் விசுவாசிகள் புரிந்துகொள்ளும்படி பவுல் விரும்புகிறார்.*

### *விவரிக்க முடியாததை அறிந்துகொள்வது எப்படி?*

*கர்த்தருடைய ஆவியானவர் நமக்கு எந்த அளவு கற்றுக்கொடுக்கிறாரோ, அந்த அளவு விவரிக்க முடியாதவைகளை அறிந்து கொள்ளலாம்.*

*கர்த்தரைப்போல் நாம் அன்பு செலுத்தி ஒருவரையொருவர் மன்னிக்கும்போது, அவருடைய நிறைவு நமக்குள் வருகிறது. அதன் மூலம் நாம் கர்த்தரை பிரதிபலிக்க முடியும்.*

### *நீங்கள் கர்த்தரைப்போல் இருக்க விரும்புகிறீர்களா?*

*கர்த்தருடைய பிரியமான பிள்ளையாக, அவருடைய அன்பை நாம் வெளிப்படுத்தும்போது, அவரைப்போல் நாம் மாறுகிறோம். அவரைப்போல் அன்பு செலுத்தும்போது, அவருடைய சாயலால் நாம் நிரப்பப்படுகிறோம்.*

**1 பேதுரு 4:8**, எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.."

இந்த வசனத்தில், ஊக்கமான (Fervent) என்கிற வார்த்தை கிரேக்க மூல வார்த்தையான ***ektenēs***-இல் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இந்த கிரேக்க பதத்தின் பொருள், "கிழிந்து போகும் நிலைக்கு இழுத்து பிடித்து விரிவுபடுத்துவது" என்று பொருள்.

நம்முடைய இறுதிவரை கூடிய மட்டும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே அதன் பொருள்.

இப்படிப்பட்ட அன்பு திரளான பாவங்களை மூடும்.

இப்படிப்பட்ட அன்பே மன்னிக்கும்.

பேதுரு, நீதிமொழிகள் வாக்கியத்தை மேற்கோள் காட்டி எழுதுகிறார்.

**நீதிமொழிகள் 10:12,** "பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்.."

நிதர்சனமாக பார்ப்போமானால், நாம் எப்படியாகிலும் காயப்பட்டுவிடுவோம்.

யாராவது நமக்கு தவறு இழைப்பார்கள். நம்மை காயப்படுத்தி ஒதுக்குவார்கள்.

**இப்படிப்பட்டவைகளுக்கு நம்முடைய பதில் என்னவாக இருக்க வேண்டும்?**

பழிவாங்குதலா, கோபமா, மூர்க்கமா, கசப்பா?

இல்லை!

இவைகளெல்லாம் செய்யப்படக்கூடாதவை என்கிற பட்டியலில் அல்லவா இருக்கின்றன?

**எபேசியர் 4:31,** சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது

இவைகள் நம்மைவிட்டு நீங்கி, அன்பு, தயவு, மன்னிப்பு, மனதுருக்கம் ஆகியவற்றை கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு கொடுத்தது போலவே கொடுக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, தேவன் நம் பாவங்களை பாராதிருக்கிறார். அவைகளை முற்றிலும் மன்னிக்கிறவராயிருக்கிறார்.

*இப்படிப்பட்ட மன்னிப்பு நம் உலகில் காண்பதற்கு அரிதாக இருக்கிறது.*

*ஒவ்வொருவரும் மற்றவரை பீறிப்போடுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் சபைக்குள்ளும் வந்துவிட்டதை நாம் பார்க்கிறோம். ஆனால் நம் ஆண்டவர் நமக்கு தெளிவான வேறொரு கற்பனையை கொடுத்திருக்கிறார்.*

*நான் உங்களை நேசித்தது போல நீங்களும் ஒருவரையொருவர் நேசியுங்கள்.*

***அவர் நம்மை எப்படி நேசித்தார்?***

*ஒவ்வொருநாளும் நம் பாவங்களை அவர் மன்னித்தார்.*

**மத்தேயு 18:21-22,** அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். 22. அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்..

*மன்னிப்பே அன்பை தீர்மானிக்கிறது.*


*இந்த அன்பு ஏதோ உணர்ச்சிவசப்பட்டு காண்பிக்கப்படுவது இல்லை. ஆனால் சத்துருவிடம் செலுத்தப்பட வேண்டியது.*

**மத்தேயு 5:43-48,** "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். 44. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். 45. இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். 46. உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? 47. உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச்செய்கிறார்களல்லவா? 48. ஆகையால்,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.

மத்தேயு 18ல் கடனை திரும்பி செலுத்த முடியாத இருவரை குறித்து ஒரு உவமையை இயேசு கூறுகிறார். அதில் அந்த கடன் சுமையை அற்புதமாக வேறுபடுத்தியும் காண்பிக்கிறார்.

அந்த மனிதன் பட்ட கடனை ஒருவராலும் அடைக்க முடியாது. ஆனால் அவன் தன எஜமானிடம்




வேண்டிக்கொள்ளும்போது, எஜமான் அவனை முற்றிலுமாக மன்னிக்கிறார், அவனுடைய கடனையும் ரத்து செய்கிறார். மன்னிப்பு பெற்ற இந்த மனிதன் வெளியே சென்று, சொற்ப பணம் தன்னிடம் கடன் பெற்ற ஒருவனை கழுத்தை பிடித்தான். இதை கண்டவர்கள், இவன் எப்படிப்பட்ட கடனிலிருந்து இரக்கம் பெற்றான், ஆனால் சொற்ப கடனுக்கு இப்படி நடந்துகொள்கிறானே என்று சொல்லி, அதே எஜமானிடம் முறையிடுகிறார்கள்.

கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகள் அவரைப்போல் நடந்துகொள்ள வேண்டும், அவரை பிரதிபலிக்க வேண்டும்.

மன்னிப்பிலும், தியாகத்திலும் அவரைப்போல் இருக்க வேண்டும்.

நமக்கு பிறர் எப்படிப்பட்ட தீமை செய்தாலும், அதற்கு தக்க பலனை கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. அவர் பார்த்துக்கொள்வார். நாமோ, அவர் நமக்கு எதை செய்தாரோ, அதை நாம் மற்றவர்களுக்கு செய்வோம். நமக்கு அவர் என்ன செய்தார்? முழுமையாக நம்மை மன்னித்தார்.

2000 ஆண்டுகளாக கிறிஸ்தவம் இந்த உலகத்திற்கு நீதியை கற்பித்தது. ஏறக்குறைய இந்த 2000 ஆண்டுகளாக ஓரினச்சேர்க்கை என்பது மேலை நாடுகளில் (Western world) சீர்குலைக்கும் ஒரு ஆபத்தான பாவமாக கருதப்பட்டது. ஒவ்வொரு மேலை கலாச்சாரமும் (Western culture) இதை ஆபத்தான பாவமாகவே பார்த்தது.

*ஆனால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இந்த கிறிஸ்தவத்திற்கு-பின் post-Christian சமுதாயத்தில் 2015ஆம் ஆண்டு அமெரிக்க உச்சநீதிமன்றம் ஓரினச்சேர்க்கை திருமணங்களை அனுமதித்தது. மேலை கலாச்சாரத்தை சவப்பெட்டியில் வைத்து அடிக்கப்பட்ட கடைசி ஆணி இதுவே. அதோடு சேர்ந்து கிறிஸ்தவ நற்குணங்கள் அனைத்தும் மண்ணோடு மண்ணாகிப்போயின.*

*இதன் விகாரமான பக்க விளைவான transgender போன்றவையும் இந்த உலகத்தில் சத்துருவின் அக்கிரமத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன. விரோதம் இந்த உலகத்தில் முன்பு இல்லாத அளவிற்கு கட்டவிழ்க்கப்பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்தவத்திற்கு பிந்தைய (post Christian) காலத்தில் இன்று வாழவில்லை புது-பாகால் (neo-paganistic) காலத்தில் வாழ்கிறோம். இப்படிப்பட்ட பாவங்களை ரோமர்கள் கிரேக்கர்கள் அனுமதித்திருந்தார்கள். ஆனால் கிறிஸ்தவம்தான் இந்த பாவங்களிலிருந்து இத்தனை நாள் காத்தது.*

*இப்போது நாம் வாழ்கிற உலகம், புதிய ஏற்பாட்டு ஆதி கிறிஸ்தவர்கள் வாழ்ந்த காலத்தைப்போல் இருக்கிறது. வெறுப்பும், பாவமும், மூர்க்கமும் நிறைந்த உலகத்தின் மத்தியில் ஆதி சபை இருந்தது.*

*இந்த சூழ்நிலைகளில் நாம் தேவனைப்போல் நடப்பது, அவரை பிரதிபலிப்பது முடியாத காரியம் என்று நமக்கு தோன்றும். அவருடைய குணங்களில் ஒருசிலவற்றை நாம் வெளிப்படுத்த முடியாது.*

**ஒரு எடுத்துக்காட்டு.**

***யோபு 11**ஆம் அதிகாரம். இங்கு சோப்பார் பேசுவதை நாம் பார்க்கிறோம். சோப்பார் சில நல்ல கேள்விகளை எழுப்புகிறார்.*

**யோபு 11:7-8,** "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? 8. அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக்கூடியது என்ன?

**யோபு 21:14-15**, அவர்கள் தேவனை நோக்கி: எங்களைவிட்டு விலகியிரும், உம்முடைய வழிகளை அறிய விரும்போம்; 15. சர்வவல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம்பண்ணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன என்கிறார்கள்.'

*அவர்களால் தேவனை அறிந்துகொள்ள முடியாததின் காரணம், அவர்களுக்கு தேவனை அறிந்துகொள்ளும் விருப்பம் இல்லை என்பதுதான்.*

**யோபு 26:7-14**, அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார். 8. அவர் தண்ணீர்களைத் தம்முடைய கார்மேகங்களில் கட்டிவைக்கிறார்; அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை. 9. அவர் தமது சிங்காசனம் நிற்கும் ஆகாசத்தை ஸ்திரப்படுத்தி, அதின்மேல் தமது மேகத்தை விரிக்கிறார். 10. அவர் தண்ணீர்கள்மேல் சக்கரவட்டம் தீர்த்தார்; வெளிச்சமும் இருளும் முடியுமட்டும் அப்படியே இருக்கும். 11. அவருடைய கண்டிதத்தால் வானத்தின் தூண்கள் அதிர்ந்து தத்தளிக்கும். 12. அவர் தமது வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணி, தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை அடக்குகிறார். 13. தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று. 14. இதோ, இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான்.

*நாம் காண்கிற இந்த படைப்புகள் யாவையும் பார்த்தாலும், அவரது விரல்களின் ஒரு சில கிரியைகளை மாத்திரம்தான் நாம் கண்டிருக்கிறோம்.*

***அப்படியானால், தேவனை முழுவதுமாய் உணர்ந்துகொள்வது எப்படி?***
*யோபு இதற்கு விடை கொடுக்கிறார்:*

**யோபு 42:2-6,** "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். . அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிற இவன் யார்? ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன். 4. நீர் எனக்குச் செவிகொடும், அப்பொழுது நான் பேசுவேன்; நான் உம்மைக் கேள்விகேட்பேன், நீர் எனக்கு உத்தரவு சொல்லும். 5. என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. 6. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்.

*யோபு கண்டதெல்லாம், கர்த்தரின் அன்பும், இரக்கமும், மனதுருக்கமும், அளவில்லாத அவருடைய கிருபைகளும்தான். அதினால் தான் யோபு, "என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது" என்று கூறுகிறார்.*

*கர்த்தருடைய இரக்கத்தின்மூலம் அவரை தெளிவாய் காணலாம்.*

*கர்த்தருடைய அநாதி கிருபையினால் அவரை தெளிவாய் காணலாம்.*

*கர்த்தருடைய எல்லையில்லா அளவற்ற அன்பினால் அவரை தெளிவாய் காணலாம்.*

*ஒருசில வேளைகளில் நாம் கர்த்தருடைய பிரசன்னத்தில் வந்தால், பேதுருவைப்போல் நடக்க வேண்டும் என்றும் நாம் நினைக்கலாம்.*

**லூக்கா 5:8**, சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.

**வெளிப்படுத்தின விசேஷம் 1:17**, நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

**ஏசாயா 6:5**, அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.."

*நாம் கர்த்தரை முகமுகமாய் காணும்போது பிரமிப்பது உண்மைதான்.*

*அவருடைய பரிசுத்தத்தில் பிரமிக்கிற அதேவேளையில், அவருடைய அன்பையும் மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்த முடியும்.*

*யோபு அதே பிரமிப்பில், "இதோ நான் உம்மை முதலில் கண்டேன், நீர் எவ்வளவாய் மன்னிக்கிறவர் என்பதை உணர்ந்தேன். நீர் மன்னிப்பதில் எவ்வளவு தாராளமானவர் என்பதை அறிந்தேன்" என்று கூறுகிறார்.*

*அப்படிப்பட்ட இரக்கம். அதில்தான் அவருடைய அன்பை காணலாம். நாமும் கண்டிருக்கிறோம். விசுவாசிகளான நாம் யாவரும் அந்த அன்பை கண்டிருக்கிறோம்.*

*அந்த மன்னிப்பை உறுதிப்படுத்த பரிசுத்த ஆவியானவர் எனும் அச்சாரத்தையும் நமக்கு கொடுத்திருக்கிறார்.*

- ✓ *ஆவியானவர் நம்மில் வாசம்பன்னுகிறார்.*

- ✓ குமாரன் நம்மில் வாசம்பன்னுகிறார்.
- ✓ பிதாவானவர் நம்மில் வாசம்பன்னுகிறார்.

நாம் திரியேக தேவனைக் குறித்து பாடுகிறோம். உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் அந்த திரியேக தேவனோடு ஐக்கியத்தில்தான் இருக்கிறார்கள்.

நொறுங்குண்ட இருதயத்தோடு அவர் பிரசன்னத்தில் வந்து, பாவ தோஷத்தின் பாரத்தொடும் கண்ணீரோடும் வந்து, தாழ்மையோடு வந்து, கிருபையை வேண்டி வந்து, அதேநேரத்தில், அவர் நம் அக்கிரமங்களை மன்னிப்பார் அன்று அறிந்து அவரிடம் வருகிறோம்.

நாம் மீண்டும் மீண்டும் அவரை காயப்படுத்துகிறோம். அவரை காயப்படுத்தாத நாளே இல்லை. ஆனால் தேவனோ நமக்கு தயவு பாராட்டி, நமக்கு இரங்கி கிருபையாய் நம்மை மன்னிக்கிறார். இதுவே நாமும் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்த நம்மை அழைக்கிறது.

இது தெய்வீக மன்னிப்பு.

கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

இதுவே தியாகத்தின் அன்பு.

**1 கொரிந்தியர் 16:13,** “விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்..”

மிகவும் தெளிவான கடினமான வார்த்தைகள்.

விழித்திருங்கள் – தாக்குதல்களுக்கு விழித்திருங்கள் - சத்தியத்திற்கு விரோதமாய், தேவ ஜனங்களுக்கு விரோதமாய், ஏன் தேவனுக்கே எதிராக தாக்குதல்கள் வராதபடி விழித்திருங்கள்.

நிலைத்திருங்கள் – சத்தியத்தில் நிலைத்திருங்கள்.

புருஷராயிருங்கள் – தைரியமாக போராடுவதற்கு தயாராக.

இதற்கு அடுத்த வசனம்.

**1 கொரிந்தியர் 16:14,** உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது.

*அநேகர் 13ஆம் வசனத்தில் நின்று விடுவார்கள்.*

*விசுவாசத்தில் நிலைத்திருக்க விரும்புவார்கள்.*

*அனைத்துமே அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். நாம் செய்யும் அனைத்துமே.*

*அந்த அன்பு மன்னிப்பதற்கு நம்மை அழைக்கிறது!*

**ரோமர் 13:10**, அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.

*கர்த்தரை நேசிப்பவர்கள், வேறு தேவர்களை வைத்திருக்க மாட்டார்கள்.*

*கர்த்தரை நேசிப்பவர்கள் சொரூபங்களை வைத்திருக்க மாட்டார்கள்.*

*கர்த்தரை நேசிப்பவர்கள் அவருடைய நாமத்தை வீணாய் வழங்க மாட்டார்கள்.*

*கர்த்தரை நேசிப்பவர்கள் அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்க மாட்டார்கள்.*

*கர்த்தரை நேசிப்பவர்கள் அவரை ஆராதிப்பார்கள்.*

*பத்து கற்பனைகளின் கடைசி ஐந்து கற்பனைகள் மனிதனுக்குரியவை.*

*அன்பு செலுத்தினால் யாரையும் கஷ்டப்படுத்த மாட்டீர்கள்.*

*பவுல் இதை சிறப்பாக விளக்குகிறார்.*

**ரோமர் 13:8-9**, ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். 9. எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது..”

*நீங்கள் யாரிடத்தில் அன்பு செலுத்துகிறீர்களோ அவர்களை கஷ்டப்படுத்த மாட்டீர்கள்.*

*அவர்களுக்காக தியாகம் செய்வீர்கள்.*

*அன்பு சகலத்தையும் நிறைக்கும்.*

அன்பில் நடங்கள்

மன்னிப்போடும் தியாகத்தோடும்.

V2 கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

இயேசு சிலுவைக்கு சென்று தேவ ஆட்டுக்குட்டியாக தம்மை தியாகம் செய்தபோது, கர்த்தருக்கு அது அருவருப்பாக இல்லை. மாறாக ஒரு கர்த்தருக்கு அது ஒரு சுகந்த வாசனையாக இருந்தது.

லேவியராகம புத்தகத்தில் முதல் ஐந்து அதிகாரங்களில் நாம் இதை பார்க்கலாம்.

**லேவியராகமத்தின் மூன்று பலிகள்.**

1. தகன பலி
2. போஜன பலி
3. சமாதான பலி

இவை மூன்றும் பலிபீடத்தில் படைக்கப்பட வேண்டும். படைக்கும்போது இவை மூன்றும் ஒரு சுகந்த வாசனையை கொடுக்கும்.

தகன பலி – கிறிஸ்துவின் முழுமையான தியாகத்திற்கு அடையாளம். தேவ ஆட்டுக்குட்டி தம்மை முழுமையாய் ஒப்புக்கொடுப்பதற்கு ஆயத்தமாக இருந்ததை இந்த பலி குறிக்கிறது, இந்த ஒப்புக்கொடுத்தல், தேவனுக்கு சுகந்த வாசனையின் பலியாக இருந்தது.

மன்னிப்பதோடு நில்லாமல் தம்மை ஒப்புக்கொடுப்பதுமே அன்பின் பூரணமாகும். இந்த ஒப்புக்கொடுத்தலை தகன பலியில் காணலாம்.

போஜன பலி – கிறிஸ்துவின் பரிபூரணத்தை குறிக்கிறது, அவருடைய குணங்களின் பரிபூரணம். பரிசுத்தமும், நீதியும், கறைபடாதவராய் தேவ ஆட்டுக்குட்டி தம்மை பலியாக கொடுத்தது கர்த்தருக்கு சுகந்த வாசனையாக இருந்தது.

சமாதான பலி – தேவனுக்கும் பாவிகளுக்கும் சமாதனம் உண்டுபண்ண தேவ ஆட்டுக்குட்டி தம்மை ஒப்புக்கொடுத்தார்.

ஆக இந்த மூன்று பலிகளிலும் கர்த்தருக்கு சுகந்த வாசனை உண்டு. லேவியராகமத்தின் இந்த பலிகளில், இயேசுவின் தியாகத்தையும், தேவனுக்கு சுகந்த வாசனையாக அந்த தியாகம் இருந்ததையும் நாம் காண்கிறோம்.

இவைகளையே நாம் பின்பற்ற அழைக்கப்படுகிறோம்.

நாம் பிறருக்கு பாவ மன்னிப்பின் பலியாக மாற முடியாவிட்டாலும், கிறிஸ்துவைப்போல், தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நம் குணங்கள் அவருக்கு பிரியமானவையாக மாறுவதன் மூலம், பாவிகளுக்கும் தேவனுக்கும் சமாதானம் உண்டு பண்ணுவதே அவரைப்போல் நேசிப்பதாகும். இவை எல்லாம் மன்னிப்பில் அடங்கியிருக்கிறது,

இக்காலங்களில் சபை எப்படி உலகத்தைபோல் மன்னிக்க மறுக்கிறது என்பது பார்க்கும்போது கவலையளிக்கிறது.

நாம் இந்த உலகத்தில் தேவ பிள்ளைகளாக வாழ வண்டும்.

தேவனுடைய சத்தியத்தை தரித்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய பிதாவைப்போல் மன்னிக்க வேண்டும். மன்னிக்கிற எவனும் பிதாவை வெளிப்படுத்துகிறான்.

கற்பனையின் பொருள் – சுத்த இருதயத்தில் பிறக்கும் அன்பே.

**அப்படிப்பட்ட அன்பை எப்படி அறிந்துகொள்ள முடியும்?**

அந்த அன்பு அளவற்றது, எல்லையில்லாமல் மன்னிப்பது.

இப்படிப்பட்ட அன்பு நம் மன்னிப்பில் வெளிப்படுகிறது. இந்த அன்பையே உலகம் காண வேண்டும்.

கிறிஸ்துவை பிரசங்கிக்கும் சபையிடம் இதை உலகத்தாரால் காண முடியவில்லை.

நம்மிடத்திலாவது அவர்கள் அதை காணட்டும்!

நம்மால் கூடுமானவரை இந்த உலகத்தை சுவிசேஷத்தினால் தொடுவோம்.

ஆனாலும் நம்முடைய அன்பினால் நாம் அறியப்படுவோம்.

4. அன்பில் நடப்போம்

# *5. மோதல்களை தீர்ப்பது – Resolving conflicts*



*ஆர்ஜென்டினா* ***(Argentina)*** *மற்றும் சிலி* ***(Chile)*** *நாடுகளின் எல்கையில் கிறிஸ்துவின் மிக பெரிய சிலை ஒன்று ஆண்டேசில் எழுப்பபப்பட்டது. அதற்கு “****க்ரைஸ்ட் ஆப் தி ஆண்டேஸ்****” என்று பெயர். அந்த சிலை நிலை நிற்கும் வரை இரண்டு நாடுகளுக்கும் சமாதானம் நிலவும் என்பதை குறிக்கும் வகையிலும் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறுதிமொழியை அடையாளப்படுத்தும் வண்ணமாகவும் அந்த சிலை அமைந்திருக்கிறது.*

*ஆனால், அந்த சிலை நிறுவப்பட்ட சில நாட்களில், சிலி நாட்டை சேர்ந்தவர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக குற்றம் சாட்டினர். என்னவென்றால், அந்த கிறிஸ்துவின் சிலையின் முதுகு பகுதி தங்கள் நாட்டை நோக்கி வைக்கப்பட்டிருப்பதாக புகார் தெரிவித்து குற்றம் சாட்டினர்.*

*அப்போது சிலி நாட்டின் நாளிதழின் ஆசிரியர் ஒருவர் சிலி நாட்டு மக்களை சமாதானப்படுத்தியது மாத்திரமல்ல, அவர்களை சிரிக்கவும் வைத்தார். என்னவென்றால், தனது நாளிதழில் “****அர்ஜென்டீனியர்கள் சிலி நாட்டவரைவிட அதிக பாவம் செய்கிறவர்கள் போலும், ஆகவே கிறிஸ்து அவர்களை அதிகம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது****” என்று ஒரு தலையங்கம் வெளியிட்டார்.*

**அப் 15:36-41,** சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று

போய்ப்பார்ப்போம் வாரும் என்றான். 37. அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான். 38. பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான். 39. இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். 40. பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, 41. சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.

*எப்படியாகிலும் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் மோதல்களை சந்திக்க நேரிடும்.*

*நாம் ஏற்கனவே அந்தகாரத்தோடு போராடிக் கொண்டிருக்கிறோம். அது தவிர்க்கமுடியாதது.*

*அதோடு கூட, மற்ற விசுவாசிகளோடும் மோதல்கள் ஏற்படும்.*

### *அதை எப்படி தீர்ப்பது?*

*பவுலுக்கும் பர்னபாவுக்கும் மோதல்கள் ஏற்பட்டது. மாற்கையும் தங்களுடைய பிரயாணத்தில் கூட்டி கொண்டு போக வேண்டும் என்று பர்னபா கூறினார். ஆனால் பவுல் அதை மறுத்துவிட்டார். அவர்களுக்கிடையே வாக்குவாதம் மிகவும் கடுமையாக இருந்தது ஆதலால் இருவரும் அவரவர் வழயில் சென்றார்கள்.*

*பர்னபா சீப்ருவிற்கு மாற்குடன் சென்றார். ஆனால் பவுல் சீலாவோடு கிளம்பிவிட்டார்.*

*அவர்கள் பிரிந்த பின்பு, பர்னபாவை பற்றி அதிகமாக ஒன்றும் கேள்விப்படவில்லை, அவருக்கு பதிலாக சீலா மாற்றப்பட்டுவிட்டார்.*

*நீங்கள் எந்த இடத்திற்கு யாருடன் செல்ல வேண்டும் என்பதை உங்களுடைய சண்டை பிரிக்காதிருப்பதாக. நாம் எல்லாவற்றிற்கும் "சரி" என்று சொல்பவராக இருந்தால் மட்டுமே மோதல்களை தவிர்க்க முடியும்.*

### *இந்த மோதல்களை எப்படி சரி செய்வது?*

### How do we deal with conflicts?

*மோதல்கள் கால தாமதம் ஆகுமே தவிர, முற்றிலும் தவிர்க்கக்கூடியவை அல்ல. கண்டிப்பாக உண்டாகும்!*

### *பவுல் மற்றும் பேதுரு:*

**கலாத்தியர் 2:11-14** மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். 12. எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். 13. மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். 14. இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்கட்டாயம் பண்ணலாம்?

### *இயேசு மற்றும் பேதுரு:*

மத்தேயு 16:21-23, அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார். 22. அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். 23. அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.

### *ஆபிரகாம் மற்றும் லோத்து:*

**ஆதியாகமம் 13:5-13**, ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. 6. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. 7. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும்

அத்தேசத்தில் குடியிருந்தார்கள். 8. ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். 9. இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். 10. அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்துதேசத்தைப்போலவும் இருந்தது. 11. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள். 12. ஆபிராம் கானான்தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். 13. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.



### *மார்த்தாள் மற்றும் மரியாள்*

லூக்கா **10:38-42**, பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். 39. அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். 40. மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா (அக்கறையில்லையா)? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். 41. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே,

மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். 42. தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்."

*மோதல்களை எளிதாக தீர்க்கமுடியும், ஆனால் அந்த மோதல்கள் அப்பட்டமாக, ஒரு விசுவாசிக்கு விரோதமான் போராக மாறிவிடக்கூடாது.*

*எனினும், எப்பொழுதும் எல்லா மோதல்களையும் சரி செய்ய முடியாது. ஆனாலும் மோதல் ஏற்படுபவரோடு சமாதானத்தோடு வாழ பழகி கொள்ள வேண்டும்.*

*சில விசுவாசிகளிடத்தில் என்ன பாடுபட்டாலும் உங்களால் இணைந்து செயல்பட முடியாது. ஏனென்றால் உங்களுடைய கோத்திரம் வேறு.*

*இஸ்ரவேலில் 12 கோத்திரங்கள் உண்டு, அதனிலும் கிறிஸ்துவின் அங்கத்தில் அநேக கோத்திரங்கள் உண்டு. இஸ்ரவேலின் 12 கோத்திரங்களும் எப்படி தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்களோ, அதே போல கிறிஸ்துவின் அங்கத்திலுள்ள அநேகரும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள். அந்த 12 கோத்திரங்களும் இணைந்து செயல்பட முடியாதது போல, நாமும் எப்பொழுதும் இணைந்து செயல்பட முடியாது.*

### *Four Thousand Deaths Over a Bucket Story:*

From the late Middle Ages until the Renaissance, northern Italy divided into factions who supported rival political powers, which further intensified their border disputes. According to legend, in **1325**, a huge conflict erupted when soldiers form the town of **Modena** stole an oak bucket from the nearby rival town of **Bologna**. The thieves mockingly displayed the bucket for all to see.

Outraged, the Bolognese army marched to Modena to recover their bucket and pride. When the Modenese refused their demand, the Bolognese declared war. This event became known as the War for the Oaken Bucket. Bologna summoned a mighty army from the Guelph cities. Thirty thousand men-at-arms, two thousand knights, and Pope John XXII himself joined the chase of reclaiming the bucket.

The Modenese by contrast, only gathered five thousand men-at-arms and two thousand knights. The two armies clashed on the afternoon of **November 15, 1325**.

Despite being outnumbered nearly five to one, the Modenese managed to rout the Bolognese in just two hours of battle. The Modenese pursued the

Bolognese all the way to the walls of Bologna, where they flaunted their victory before their humiliated enemy.

**A total of four thousand men died that day.**
**All because of a bucket.**

*சில விசுவாசிகளோடு, அவர்களுக்குள் செயல்படுகிற ஆவியானவரின் உடனடி தொடர்பு நமக்கு ஏற்படும். ஆனால், சிலரோடு அந்த தொடர்பு இருக்காது அதற்காக அவர்கள் எதிரியாக பாவிக்க முடியாது.*

*அவர்களோடு சமாதானமாயிருந்து அவர்கள் எப்படியோ அப்படியே ஏற்றுகொள்ள வேண்டும். அவர்களும் தேவனுடைய பிள்ளைகள் தான். அவர்களுக்குள்ளும் தேவ ஆவியானவர் வாசம் செய்கிறார். அவர்களும் பரலோகம் செல்வதற்கு முயற்சிக்கிறார்கள்.*

*ஆதலால், உங்களுக்கு அவர்களோடே ஒத்துபோகவில்லை என்பதால் அவர்கள் உங்களுக்கு எதிரி அல்ல.*

*தேவன் எல்லா விசுவாசிகளோடும் இணைந்து செயல்பட உங்களை அழைக்கவில்லை. மாறாக கூடியமட்டும் சமாதானமாக இருப்பதற்கு அழைத்திருக்கிறார்.*

**1 தெசலோனிக்கேயர் 5:23**, சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக..

*எந்த ஒரு மனிதனும் / மனுஷியும் ஆவியாயிருக்கிறார்கள், சரீரத்திலே வாழ்கிறார்கள் அவர்களுக்கு ஒரு ஆத்துமாவும் உண்டு!*

*எந்த ஒரு மனிதனுடைய போராட்டமும் அந்த மனிதனுடைய மாம்சத்தோடு கூடிய போராட்டமோ அல்லது ஆவியோடு கூடிய போராட்டமோ அல்ல. ஏனென்றால் ஆவி மறுபடியும் பிறந்து ஜீவிக்கிறதாயிருக்கிறது. போராட்டம் ஆத்துமாவோடு மட்டுமே.*

*ஆத்துமா என்பது ஒரு மனிதன் தன் சுய நினைவு. ஒவ்வொரு தீர்மானமும் அங்கே எடுக்கப்படுகிறது. அவன் வளரும் சூழ்நிலை, எப்படி வளர்க்கப்படுகிறான், சூழல், சமூக பொருளாதார வளர்ச்சி ஆகியவை மனிதனின் ஆத்துமாவை தீர்மானிக்கிறது.*

*எனினும், நாம் பரலோகம் சென்ற பின் அங்கே நமது ஆவியைதான் பார்ப்போம் ஆத்துமாவை அல்ல.*

ஆகவே ஆத்துமாவோடு செய்யும் போராட்டம் ஒரு பொருட்டே அல்ல.

நாம் ஒன்றாக செயல்படாவிட்டாலும் சமாதானமாயிருக்க கற்றுகொள்ள வேண்டும்.

**மத்தேயு 5:9**, சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

**கலாத்தியர் 5:22-23**, ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23. சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

**எபிரேயர் 12:14** யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

ரோமர் **12:18**, கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.

### *மோதல்களை தீர்த்தல்:*

**ஆதியாகமம் 13:5-13**, ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. 6. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. 7. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள். 8. ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். 9. இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். 10. அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்துதேசத்தைப்போலவும் இருந்தது. 11. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே

பிரயாணப்பட்டுப் போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள். 12. ஆபிராம் கானான்தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். 13. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.

*மோதல்களை தீர்ப்பதற்கு பெரிதான இலக்கு என்னவென்றால் சகோதரரை ஆதாயப்படுத்திக்கொள்வது!*

*ஆபிரகாம் தன்னுடைய பிரச்சனைகளை சரி செய்ய லோத்தை அனுகினான்.*

*பிரச்சனைகளை தீர்க்க தனியே ஒருவரை அனுக வேண்டும். கூட்டத்தில் அல்ல.*

**மத்தேயு 18:15**, 'உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.

*ஒருவேளை, அவன் செவிகொடுக்க மறுத்தால், வயதில் மூத்த விசுவாசிகளை அழைத்து செல்ல வேண்டும்.*

**மத்தேயு 18:16,** அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.'

*அப்படியும் அவன் அவர்களுக்கு செவிகொடுக்க மறுத்தால் சபைக்கு எடுத்து செல்ல வேண்டும்.*

**மத்தேயு 18:17,** அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.

*திரும்பவும் அவன் சபைக்கு செவிகொடுக்கவில்லை என்றால், அவனை தனியே விட்டுவிட வேண்டும். ஆனால், நீங்கள் சமாதானமாயிருங்கள் ஏனென்றால் உங்களால் கூடுமான மட்டும் பிரயசப்பட்டீர்களே.*

*அவன் விசுவாசியாயிருந்தால் எதாகிலும் ஒரு காரியத்தில் அந்த பிரச்சனையை சரி செய்திருக்க முடியும்.*

கூடுமானால் அவன் தன் வழியிலே செல்லட்டும்.

ஆபிரகாம் லோத்துவிடம் அவனுக்கு வேண்டிய இடத்தை முதாலவதாக தேர்வு செய்ய சொன்னான். பின்பு அவன் வேறு வழியாய் போகும்படிக்கு அப்படி சொன்னான்.

**மத்தேயு 5:40** உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.

***மோதல்களை சரி செய்தாயிற்றா என்று சோதித்து பார்த்தல்:***

அந்த நபருடைய கையை பிடித்து மனதில் எந்த ஒரு சலனமும் இல்லாமல் உங்களால் ஜெபிக்க முடியுமா?

உங்களுடைய அறையிலே அந்த நபருக்காக உண்மையாக ஜெபிப்பீர்களா?

தேவன் சோதோம் கொமோராவை அழிக்க முற்படும்போது லோத்துவிற்காக அபிரகாம் தேவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.

### முடிவுரை

**மோதல்களை தீர்க்க காரணங்கள்**

- உங்கள் ஜெபமும் காணிக்கையும் தேவனை சேருவதற்கு ஒரு தடையாக இந்த மோதல்கள் அமையக்கூடாது.
- மன்னிக்கமுடியாத உள்ளுணர்வு இதயத்தில் ஊறாமல் இருப்பதற்காக
- பழிவாங்குதலை தவிர்ப்பதற்காக
- பிசாசு கொண்டு வரும் துன்பங்களுக்கு இடம் கொடுப்பதை தவிர்க்கலாம்

**செய்முறை கேள்வி.**

இப்பொழுது யாருடன் உங்களுக்கு பிரச்சனை உள்ளது?

அந்த பிரச்சனைக்கு காரணம் என்ன?

யாருடன் உங்கள் உறவை நீங்கள் இழந்தீர்கள்?

அந்த உறவை உங்களால் சரி செய்ய முடியுமா?

நீங்கள் முயற்சி செய்து தோற்று மறுபடியும் அதை சரி செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?

யாரிடமாவது உறவை சரி செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

குடும்பத்தில் உறவுகளோடு பிரச்சனையா?

ஆவிக்குரிய குடும்ப உறவுகளோடு பிரச்சனையா?

ஒருவேளை அந்த உறவு முறிந்து விட்டது அதை சரி செய்யலாகாது என்றால் அந்த நபருக்காக உண்மையாக ஜெபிக்க முடியுமா?

# 6. ஒளியில் நடப்போம் - *Walk in Light*

**எபேசியர் 5:8-14,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். 9ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். 10கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். 11கனியற்ற அந்தகாரக்கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். 12அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. 13அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. 14ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.



*கிறிஸ்தவ வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை எபேசியர் புத்தகம் நமக்கு கற்றுத்தருகிறது.*

*முதல் மூன்று அதிகாரங்களில் கிறிஸ்தவன் யார்.*

*பின் உள்ள மூன்று அதிகாரங்களில் அவன் எப்படி வாழ்கிறான், நடக்கிறான் என்பவை.*

*புதிய சிருஷ்டிகளாக நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று பவுல் இந்த புத்தகத்தின் பின் உள்ள மூன்று அதிகாரங்களில் விளக்குகிறார்.*

*“பாத்திரவான்களாய் நடந்துகொள்ளுங்கள்”*

*உங்கள் வாழ்க்கை நீங்கள் யார் என்பதை பிரதிபலிக்கட்டும். நீங்கள் புது சிருஷ்டியாய் இருந்தால் உங்கள் வாழ்வில் அது காணப்படட்டும்.*

**எபேசியர் 5:1,** ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,

பாத்திரவான்களாய் நடந்து, தேவனை பின்பற்றுங்கள். அவரை உங்கள் வாழ்கையில் பிரதிபலியுங்கள்.

பாத்திரவான்களாய் நடக்க வேண்டுமானால், கர்த்தரைப்போல் நடக்க வேண்டும்.

வெளிச்சத்தில் நடக்க வேண்டும். வெளிச்சத்தின் பிள்ளைகளைப்போல் நடக்க வேண்டும்.

**வ 8,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்

வெளிச்சத்தில் வாழ வேண்டுமெனில், வெளிச்சம் என்றால் என்ன என்று நாம் அறிய வேண்டும்.

வெளிச்சம் என்பது வேதத்தில் ஒரு அடையாளம்.

இரண்டு கோணங்கள்.

- ✓ அறிவு சார்ந்து சொல்லப்படுவது
- ✓ நீதி சார்ந்து சொல்லப்படுவது

அந்தகாரத்திற்கும் இருளுக்கும் இரண்டு கோணங்கள் உண்டு.

- ✓ அறியாமையை குறிக்கும்
- ✓ அநீதியை குறிக்கும்

வேதாகமம் முழுவதிலும் இந்த அடையாளங்களை நாம் காண முடியும்.

வேத வசனங்களை எழுதியவர்கள் ஒருசில இடங்களில் வெளிச்சம் என்று சொல்லும்போது, அறிவையும், ஞானத்தையும், சத்தியத்தையும் குறிப்பிடுகிறார்கள்.

வேறு சில இடங்களில் வெளிச்சத்தைப் பற்றி எழுதும்போது நீதியையும், பரிசுத்தத்தையும் குறிப்பிடுகிறார்கள்.

அந்தாகாரத்தை சொல்லும் போதும், ஒருசில இடங்களில் ஜனங்களின் இருதயம் இருளாக இருக்கிறதையும், வேறு சில இடங்களில், அந்தாகார கிரியைகளையும் குறிப்பிடுகிறார்கள்.

சொல்லாலும் செயலாலும் வெளிச்சமும் அந்தகாரமும் நேர் எதிர் துருவங்கள்.

**நீதிமொழிகள் 6:23**, கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி.

*இங்கு கிரியைகளை பற்றி கூறாமல் சத்தியத்தைப்பற்றி கூறுகிறார்.*

*கர்த்தருடைய வார்த்தை, சத்தியம், அவருடைய வார்த்தை வெளிச்சம், அறிவு, ஞானம்.*

**சங்கீதம் 119:105** உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

*அறிவின் வெளிச்சத்தை இங்கே பார்க்கிறோம்.*

**2 கொரிந்தியர் 4:3-4,** எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். 4. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

*வ**3**, கெட்டுப்போகிறவர்கள்*

*வ**4**, ஒளியில்லாமல் குருடானவர்கள்*

- *வெளிச்சம் அறிவு*
- *அந்தகாரம் அறியாமை, சுவிசேஷத்தின் அறியாமை, சுவிசேஷத்திற்கு குருடானவர்கள்*

வ**6,** இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

- *வெளிச்சம் ஞானத்தை குறிக்கும்*
- *அந்தகாரம் அறியாமையை குறிக்கும்*

***எபேசியர் 4**ல்,* *இரட்சிக்கப்படாதவர்களின் மனம், பாகாலின் மனதைப்போல் இருளடைந்திருக்கிறது பார்வையற்று இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்.*

**ரோமர் 1:21,** அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

*வெளிச்சமும் இருளும் ஒருசில இடங்களில் பரிசுத்தத்தையும் வேறு சில இடங்களில் பாவத்தையும் குறிக்கும்.*

ஏசாயா **5:20**, தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!

*இங்கு நன்மை தீமையை ஒளி இருள் ஆகியவையோடு ஒப்பிடுகிறார். இது நம் குணத்தை குறிக்கிறது.*

**ரோமர் 13:12-13,** இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். 13. களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்.

*கர்த்தருடைய சத்தியத்தை அறியாமல் இருளில் இருக்கும்போது, அநீதியின் இருள் வெளிப்பட்டு மனிதனுடைய கிரியைகளிலும் அநீதி காணப்படுகிறது.*
*மற்றொரு புறம், சத்தியத்தை அறிகிற அறிவு வெளிச்சம்.*

*கிறிஸ்தவர்களாக நாம் வெளிச்சத்தில் நடக்கிறோம்.*

**1 யோவான் 1:5**, தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.

*கர்த்தர் வெளிச்சமாயிருக்கிறார். அவரிடத்தில் எவ்வளவேனும் இருள் இல்லை. நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாக, வெளிச்சத்தின் பிள்ளையாக இருக்கும்போது உங்களிடத்தில் எவ்வளவேனும் இருள் இல்லை.*

*நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது முழுவதுமாக மீட்கப்பட்டீர்கள். கொஞ்சம் இருள் ஒட்டிக்கொண்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்வதில்லை.*

**1 யோவான் 1:7**, அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

*இந்த வசனத்தை முன்னிருந்து பின் மாற்றி சொல்லிப்பாருங்கள்.*

*அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிதத்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடக்கிறோம்.*

*மன்னிக்கபடுகிறவர்கள்தான் ஒளியில் இருக்கிறார்கள்*

*தேவன் ஒளியாயிருக்கிறார். ஒளி ஒளியை உண்டாக்கும். அவருடைய பிள்ளைகள் நாமும் ஒளியாயிருக்கிறோம்.*

**மத்தேயு 5:14,** "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

*புதிய ஏற்பாடு நம்மை மீண்டும் மீண்டும் ஒளியின் பிள்ளைகள் என்று அழைக்கிறது.*

**1 தெசலோனிக்கேயர் 5:4**, சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.

*ஒளியான தேவன் நம்மை பிறப்பித்ததினால் நாமும் ஒளியாய் இருக்கிறோம். இயேசுவும் நாமே உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்.*

*நாம் ஒளியில் நடக்கிறோம்.*

*ஒளியில் ஐக்கியப்பட்டிருக்கிறோம்.*

*நாமே சுத்திகரிக்கப்படுகிறோம்.*

*கிறிஸ்தவன் என்பவன் ஒளியில் இருக்கிறான். அவன் இருளில் நடப்பதில்லை.*

**கொலோசெயர் 1:13,** இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

**யோவான் 8:12,** மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.."

இதில் நடு மையம் என்று ஒன்றும் இல்லை.

மீட்கப்பட்டபோது இருளில் இருந்து எடுக்கப்பட்டு ஒளியில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

***அப்படியானால் நாம் பாவம் செய்கிறதில்லையா?***

நாம் வெளிச்சத்திலிருந்து அந்தகார கிரியையாகிய பாவத்தை செய்கிறோம்.

**எபேசியர் 5:8**, வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்..

- *நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளானால்*
- *நாம் வெளிச்சத்தின் புத்திரரானால்*
- *நாம் பகலின் புத்திரரானால்*
- *தேவன் நம்முடைய பிதாவானால், அவரே ஒளி.*

ஆகவே நாமே இந்த உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறோம். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ அழைக்கப்படுகிறோம்.

வெளிச்சத்தின் புத்திரராகிய கிறிஸ்தவன் இருளில் நடப்பதில்லை.

அந்தகார கிரியைகளை நாம் செய்யும்போது அதை பகல் வெளிச்சத்தில்தான் செய்கிறோம். அனைத்தும் வெளியரங்கமாகும்.

நம் மனதிரும்புதல் எப்படி பழைய வாழ்க்கைக்கு நேர் எதிர்மறையானதோ, அதே போல், வெளிச்சமும் இருளும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை.

அந்தகாரத்தில் உள்ள இந்த உலகம் நம்முடைய வெளிச்சத்தை எதிர்நோக்கி இருக்கிறது. ஆகவே, பவுல் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடங்கள் என்று கூறுகிறார்.

**எபேசியர் 4:18,** அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து;

இந்த அந்தகார உலகம், கர்ம சிரத்தையாய் நீதியை மறைத்து, சத்தியத்தை ஒளித்து, ஜனங்களை துஷ்ட காரியங்கள் செய்ய பலவந்தப்படுத்துகிறது.

*இயேசு இந்த உலகத்திற்கு ஒளியை கொடுக்கும்படி வந்தார்.*

**யோவான் 3:19-20,** ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. 20. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.

*உலகமோ அந்தகாரத்தின் ஆழத்திற்கு மீண்டும் மீண்டும் சென்று புதைந்துகொள்கிறது.*
*தேவன் நம்மை உலகத்திற்கு ஒளியாக வைத்திருக்கிறார். இருளில் இருக்கும் உலகிற்கு ஒளியாய் இருக்கும்படி நம்மை அழைத்திருக்கிறார். நாம் அதை திறம்பட செய்ய வேண்டுமானால், அந்தகார கிரியைகளை முற்றிலுமாய் விட்டொழிய வேண்டும். அந்த கிரியைகளோடு கலவக்கூடாது.*

**2 கொரிந்தியர் 6:14-18,** அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? 15. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? 16. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. 17. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். 18. அப்போது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்."

*நாமே ஒளி, ஒளியைப்போல் வாழ்வோம்.*

*ஒரு சிறிய கற்பனை செய்துபாருங்கள். நீங்கள் ஒரு குகையில் மாட்டிக்கொண்டீர்கள். குகையிலிருந்து தப்பிக்க வழிதேடி, உங்களையே அறியாமல் ஒரு பாதை மாறி மற்றொன்று என்று சென்று, கடைசியில் பூமியின் தாழ்விடத்திற்கே சென்றுவிடுகிறீர்கள். நாட்கள் வாரங்களாகின்றன, வாரங்கள் மாதங்களாகின்றன.*

குளிரும், பயமும், திகிலும் உங்களை ஆட்கொள்ளும் அந்த வேளையில் தூரத்தில் ஒரு ஒளியை பார்க்கிறீர்கள். அந்த ஒளியை பார்த்து எப்படியோ குகையின் வாசலை கண்டு பிடித்து, வெளிய வந்துவிடுகிறீர்கள்.

வந்து ஒரு சில தினங்களில், அந்த குகையில் உள்ள ஒருசில விஷயங்கள் உங்களுக்கு பிடித்திருக்கிறது என்று மீண்டும் அதே குகைக்கு நீங்கள் சென்றால், இதை என்னவென்று சொல்வது? அது மூடத்தனமாக இருக்காது?

ஒரு கிறிஸ்தவனும் ஒளியில் வந்த பிறகு அந்தகார கிரியைகளை செய்ய விரும்பும்போது, அதே போல மூடத்தனமாகத்தான் இருக்கும்.

ஒளியின் பிள்ளைகளாக நாம் நடக்க வேண்டுமானால், பவுல் நமக்கு ஐந்து காரியங்களை கற்றுக்கொடுக்கிறார்.

## *1. வேறுபாடு*

ஒளியின் புத்திரரிடம் காணப்படும் வேறுபாடு.

**V 8,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.

நீங்கள் யார் என்பதற்கேற்ப வாழ்வதே கிறிஸ்தவ ஜீவியம். நீங்கள் யாராக முன்னம் இருந்தீர்களோ அப்படி வாழாதிருங்கள்.

**ரோமர் 6:16,** மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?

இதுவே உங்கள் அடையாளம். இந்த அடையாளத்திற்கேற்ப வாழுங்கள்.

இதுதான் நீங்கள், அதற்கேற்ப வாழுங்கள்.

இந்த வசனம் கடந்த காலத்தை குறிக்கிறது.

**எபேசியர் 2:1-3**, அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். 2. அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.

3. அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

**எபேசியர் 2:12-13**, அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். 13. முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

*நீங்கள் முன்னம் அப்படி இருந்தீர்கள். இப்பொழுது இருக்கிறபடி வாழுங்கள்.*

வ **8,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள்

*நீங்கள் அந்தகாரத்தில் இருத்தீர்கள் என்று பவுல் கூறவில்லை. நீங்களே அந்தகாரமாய் இருந்தீர்கள் என்று பவுல் கூறுகிறார்.*

*நீங்கள் சத்துருவின் வஞ்சனையில் விழுந்தவர் மாத்திரமல்ல, அவனுடைய ராஜ்ஜியத்தில் பங்குள்ளவர்களாகவும் இருந்தீர்கள்.*

*நாமே அந்த சத்துருவின் ராஜ்ஜியமாய் இருந்தோம். ஆவிகளானாலும் மனிதர்களானாலும், தனிப்பட்ட நபர்களையல்லாமல் சத்துருவின் ராஜ்ஜியம் இந்த உலகத்தில் இல்லையே.*

*அதேபோல், இவ்வுலகில் ஒளியாய் இருப்பவர்கள் இல்லாமல் ஒளியின் ராஜ்ஜியம் இங்கு இல்லையே.*

வ **8,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.

*நாம் ஒளியில் நடப்பதால், ஒளியின் பிள்ளைகளைப்போல் வாழலாமே!*

*அந்தகாரம் அறியாமையும், அநீதியுமாயிருகிறது. ஒளியோ அறிவும் நீதியுமாயிருக்கிறது.*

*நாம் அறிந்திருக்கிறது மாத்திரமல்ல, நாம் அறிந்திருக்கிறதை நடப்பிக்கவும் வேண்டும்.*

**அந்தகாரத்திளிருப்பவர்களிடம் காணப்படும் நான்கு குணங்களை காண்பிக்கிறேன்.**

*உங்கள் முந்தைய வாழ்கையை திரும்பி பாருங்கள்.*

### *1. சத்துருவின் கிரியைகளை செய்தீர்கள்.*

*அந்தகாரத்தில் இருப்பார்கள் உண்மையாகவே அந்தாகார கிரியைகளை செய்கிறார்கள்.*
*அவைகள் சாத்தானின் கிரியைகள்.*

வ **11**, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.

*அந்தகார கிரியைகளை நடப்பிப்பவர்கள் அஞ்ஞானிகளும் அசுத்தவான்களுமாக இருக்கிறார்கள்.*
*தேவ ஞானத்தை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை.*
*தேவனுடைய ஜீவன் அவர்கள் இருதயத்திலும் ஆத்துமாவிலும் காணப்படுவதில்லை.*

**யோவான் 8:44**, நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

லூக்கா **22:53**, “அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது.”

*சாத்தான் அந்தகாரத்தின் அதிபதி என்று அழைக்கப்படுகிறான்.*
*ஆகவே அந்தகார கிரியைகளை நாம் செய்யும்போது அவன் கொடுக்கும் பெலத்தில் (empowered) செய்கிறோம். சாதாரண மனிதர்களுக்கு தாங்கள் சாத்தானால் பெலப்படுத்தப்படுகிறோம் (empowered) என்று உணர்வது கடினம்.*

### *2. சாத்தானால் ஆளப்படுகிறார்கள்*

*அந்தகாரத்தின் அதிபதியினால் ஆளப்படுகிறார்கள்.*

- *நீங்கள் சாத்தானின் பிள்ளையாக இருந்தால், சாத்தானின் கிரியையை செய்வீர்கள்.*

- *நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருந்தால் தேவனுடைய கிரியையை செய்வீர்கள்.*

**கொலோசெயர் 1:13,** இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

*சாத்தானின் விருப்பப்படி செய்வதோடு அல்லாமல், அவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டும், அவனால் ஆளப்பட்டும் இருக்கிறார்கள்.*

***கொலோசெயர் 1**ல் நாம் அந்தகாரத்தின் அதிகாரத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டோம் என்று கூறுகிறது.*

*அந்தகாரம் ஒரு ராஜ்ஜியம்.*

*அதற்கு ஒரு அரசாங்கம் இருக்கிறது. அதின் அதிபதி சாத்தான்.*

*அவனே அங்கு நடப்பவைகளை தீர்மானிக்கிறான்.*

*நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்து தேவனை பின்பற்றவில்லை. மாறாக சாத்தானால் ஆதிக்கம் செலுத்தப்பட்டீர்கள்.*

*இயேசு இல்லாவிட்டால், உங்கள் வாழ்வில் சாத்தானே என்ன நடக்க வேண்டும் என்று தீர்மானிப்பான்.*
*அந்தகாரத்தின் ராஜ்ஜியம் அந்தகாரத்தின் ராஜாவால் ஆளப்படுகிறது.*

### *3. கர்த்தருடைய தண்டனை*

*ஆக்கினையின் தண்டனை. கர்த்தருடைய தண்டனையாகிய ஆக்கினைத் தீர்ப்பு அந்தகாரத்தின் பிரஜைகள் மேல் இருந்தது.*

**ரோமர் 1:18**, சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

*தேவ ஆக்கினை பாவத்தின் மீது விழும்.*

**ரோமர் 1:21-22** அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. 22. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி,

**யோவான்** 12:35-36, அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான். 36. ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களைவிட்டு மறைந்தார்.

*இயேசு அவர்களுக்கு பிரசங்கித்தார், அவர்களோ அதை விசுவாசிக்கவில்லை.*

**யோவான் 12:37-40,** அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. 38. கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது. 39. ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமல் போனார்கள். ஏனெனில் ஏசாயா பின்னும்: 40. அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான்."

*"நான் விசுவாசிக்க மாட்டேன்" என்று நாம் கூறும்போது, "உங்களால் விசுவாசிக்க முடியாது" என்று நீதியின்படி தேவன் கூறுகிறார்.*

*அப்போது தேவ நியாயத்தீர்ப்புக்கு ஆளாகிறீர்கள்.*

### *4. கடைசி முடிவு அந்தகாரம்*

**மத்தேயு 8:12,** ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

*அந்தாகாரத்தின் கிரியைகளை அந்தகாரத்தின் அதிபதியின் ஆளுகையினால் செய்யும்போது, தேவ நியாயத்தீர்ப்பு வருகிறது. அதின் தீர்ப்பு நித்திய நரகம்.*

***உங்களுக்கு இருள் வேண்டுமா?***

*நித்தியத்திற்கும் நீங்கள் இருளை பெற்றுக்கொள்ளலாம்.*

**வ 8,** முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ **கர்த்தருக்குள்** வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.

பவுல் இருளுக்கும் வெளிச்சத்திற்கும் உள்ள வேறுபாட்டை கோடிட்டுக்காட்ட விரும்புகிறார். இவை இரண்டும் நேர் எதிர்மாறானவை.

முன்பு அந்தகாரமாக இருந்தோம், இப்போதோ வெளிச்சமாய் இருக்கிறோம்.

ஒரு மிகப்பெரிய மாற்றம்.

- நாம் சாத்தானின் கிரியைகளை செய்வதில்லை.
- கர்த்தருடைய கிரியைகளை செய்கிறோம்.

**எபேசியர் 2:10,** ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

- நாம் சாத்தானின் அதிகாரத்தில் இப்போது இல்லை, இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள் இருக்கிறோம்.
- தேவனுடைய ஆக்கினைக்கு தப்பி, வாக்குத்தத்தத்தின்படி ஒளியின் ராஜ்ஜியத்தின் பங்காளர்களாய் இருக்கிறோம்.
- நாம் அந்தகார இருளுக்கு செல்வதில்லை, வெளிச்சத்தின் பரலோகத்திற்கு செல்கிறோம்.
- வேதாகமத்தின்படி தேவ ஆட்டுக்குட்டியே அந்த இடத்தின் வெளிச்சமாக இருக்கிறார்.

அந்தகாரத்தின் கிரியைகளை அந்தகாரத்தின் அதிபதியின் ஆளுகையினால் செய்யும்போது, தேவ நியாயத்தீர்ப்பு வருகிறது. அதின் தீர்ப்பு நித்திய நரகம்.

ஆனால் வெளிச்சத்தில் இருக்கிறவர்கள், வெளிச்சத்தின் அதிபதியாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்குள் வந்து, வெளிச்சத்தின் கிரியைகளை செய்கிறார்கள்.

ஆகவே பிரியமான கிறிஸ்தவர்களே, வெளிச்சத்தின் ராஜ்ஜியத்தில் இருக்கிற நீங்கள் வெளிச்சத்தின் புத்திரராய் நடந்துகொள்ளுங்கள்.

***அந்த அந்தகார ராஜ்ஜியத்தில் உங்களுக்கே என்ன வேலை?***

அந்த அதிகாரம் உங்களை விட்டு நீங்கியது.

*அது கடந்தகாலம்.*

*அது முடிந்துவிட்டது. இன்னும் தொடரவில்லை.*

*ஆகவே, வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடப்போம். ஆக்கினையின் பிள்ளைகளாக அல்ல, கீழ்படியாமையின் பிள்ளைகளாக அல்ல, பிசாசின் பிள்ளைகளாக அல்ல.*

## *2. குணாதிசயங்கள் - The characteristics*


**வ 9,** ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.

*இந்த வசனம் எழுதப்பட்ட சில சுருள் கோப்புகள், ஆவியின் கனி என்று சொல்லாமல், **வெளிச்சத்தின்** கனி என்றே கூறுகின்றன.*

*இந்த வசனத்தை விளக்குவதற்கு பெரிய போதகர்கள் யாரும் அவசியம் இல்லை.*

- ✓ *நற்குணம்*
- ✓ *நீதி*
- ✓ *உண்மை / சத்தியம்*

*வெளிச்சத்தில் நடப்பவர்களின் குணங்கள் இவைகளே.*




### *ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கை குணங்கள் எப்படி இருக்க வேண்டும்?*

*நற்குணம், நீதி, உண்மை.*

*அநேகர் தாங்கள் வெளிச்சத்தில் இருப்பதாக கூறுகிறார்கள். வெளிச்சத்தில் இருக்கிறார்களா என்று சோத்தித்து பார்ப்பது எது தெரியுமா?*

கனிகள் தான். வாழ்கையில் கனிகள் இருக்க வேண்டும்.

**நற்குணம்** - மற்றவர்களோடு எப்படி பழக வேண்டும் என்பதற்கு எடுத்துகாட்டு.

***kalos*** *என்கிற கிரேக்க வார்த்தையின் பொருள், "பழுதற்ற அழகு" (*free from defects and beautiful*).*

*அருமையான ஒரு ஓவியமோ, கண்ணாடி பொருளோ, அலங்கார பொருளோ இருப்பது போல் பழுதற்ற அழகு.*

***chrstos*** *என்கிற கிரேக்க வார்த்தையின் பொருள் "பயனுள்ள".*

***Agathos*** *என்கிற கிரேக்க வார்த்தையின் பொருள் "ஒப்பற்ற மேன்மை", நிகரற்ற நன்மை (*moral excellence*).*

*பழுதற்றவையாக மாத்திரம் அல்ல, பயனுள்ளவையாக மாத்திரமல்ல, முழுவதுமாய் நன்மையினால் நிறைந்துருப்பது தான்* ***Agathos****. இந்த* ***Agathos*** *தன்னிடம் வரும் யாவரையும் அதே நன்மையினால் தொடும், நல்லவையை மாத்திரமே செய்யும், நல்லவையை மாத்திரமே சிந்திக்கும் ஒரு நிகரற்ற நன்மை.*

*நற்குனத்திற்கு இங்கு* ***Agathos*** *என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**1 தெசலோனிக்கேயர் 5:15**, ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்.

*இதுவே வெளிச்சத்தின் பிள்ளைகளிடத்தில் காணப்பட வேண்டிய முதல் குணம். தன்னிடம் வரும் யாவரையும் நன்மையினால் தொடும் நிகரற்ற நன்மை.*

*நீதி – தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவை குறிக்கிறது. பரிசுத்தத்தை விட்டு விலகாத குணம்*

***உண்மை / சத்தியம்*** *– ஒழுக்கம் (*integrity*), நேர்மை (*honesty*), நம்பகத்தன்மை (*trustworthiness*) ஆகியவற்றை குறிக்கிறது. இது தன்னை சார்ந்த ஒரு குணம்.*

- *நற்குணம் – பிறருடன் உள்ள உறவு*
- *நீதி – தேவனோடு உள்ள உறவு*
- *உண்மை – தன்னைத்தான் சார்ந்தது*

*நேர்மையும், நம்பகத்தன்மையும் நம்முடைய பழைய வாழ்வின் பொய்யிலிருந்தும், மாய்மாலத்திலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது.*

இதுவே நம்மைக்குறித்து தேவனுடைய வாஞ்சையாய் இருக்கிறது.

வெளிச்சத்தின் புத்திரராய் நடக்கும்போது, மற்றவர்களிடத்திலும், தேவனிடத்திலும், தனக்குத்தானும் வெளிச்சத்தின் கனிகளை வெளிப்படுத்த வேண்டும்.

இவற்றைக்கொண்டு நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கிறோமா என்று நம்மைநாமே சோதித்து பார்த்துக்கொள்ள முடியும்.

அநேகர் தங்களை வெளிச்சத்தின் புத்திரர் என்று கூறிக்கொள்கிறார்கள், சோதித்துபார்க்க அருமையான வழி உண்டு

**மத்தேயு 7:15-19,** “கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். 16. அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? 17. அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். 18. நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. 19. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

அனைத்து கிறிஸ்தவர்களும் கனி கொடுக்க வேண்டும். கனி கொடுக்காத கிறிஸ்தவன் என்று யாரும் இருக்க முடியாது.

அநேக சிறிய கனிகள் உண்டு, குறைந்தது சிறிய காய்ந்த திராட்சை (Raisins) பழமாவது இருக்க வேண்டும். கனியற்ற கிறிஸ்தவன் என்பதே இல்லை.

ஜீவன் இருக்குமானால், அது பலனளிக்க வேண்டும்.

வெளிச்சத்தின் புத்திரர், வெளிச்சத்தின் கனி கொடுக்க வேண்டும்.

ஒருசிலர் வந்து நாங்கள் இதை செய்தோம் அதை செய்தோம் என்று சொல்லும்போது.

**மத்தேயு 7:21-23,** “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. 22. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி:

கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். 23. அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.'

கனியில்லையேல் ஜீவனில்லை.

கனியில்லாத வெளிச்சத்தின் புத்திரர் உண்மையற்றவராய் இருக்கிறார்கள்.

வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்க வேண்டிய நாம், ஒருசில வேளைகளில் பாவம் செய்தாலும், நம்முடைய முழு வாழ்வை பார்க்கும்போது கனிகள் இருக்க வேண்டும்.

பாவம் செய்யும்போது, கனிகள் குறைகிறது.

ஆனால் பவுல் இங்கு கூற விரும்புவது, வெளிச்சத்தின் பிள்ளைகளிடத்தில் கனிகள் நிச்சயமாக இருக்கும். அதுவே நாம் வெளிச்சத்தில் இருப்பதின் அடையாளம்.

வ 10, கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.

சோதித்தல் அல்லது தேடுதல்.

கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று போதிப்பதோடு நில்லாது அவற்றை நம் வாழ்விலும் செய்து காட்ட வேண்டும்.

நம்முடைய வாழ்விலும் அதை சோதித்துப்பார்க்க வேண்டும்.

கர்த்தருடைய சத்தியத்திற்கு சாட்சியாக வாழ்வதே ஒரு கிறிஸ்தவனுக்கு மனமகிழ்ச்சியை அளிக்கும்.

### *நான் கிறிஸ்தவன் என்பதை எப்படி அறிய முடியும்?*

ஒரு மனிதன் கிறிஸ்தவனா என்று எப்படி அறிய முடியும்?

கனியினால் அறிய முடியும்.

ஆண்டவருக்கு பிரியமானது இன்னது என்பதின் மூலம் அறிய முடியும். அவற்றை உங்கள் வாழ்வில் காண்பதின் மூலம் அறிய முடியும்.

ஆண்டவருக்கு பிரியமானது நம் வாழ்வில் இருக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளை, தேவனுடைய குணாதிசயங்களை உடையவராய் இருக்க வேண்டும். வெளிச்சத்தின் பிள்ளை, வெளிச்சத்தின் கிரியையை வெளிப்படுத்த வேண்டும்.

முன்னாளில் நடந்தவற்றை வைத்து கிறிஸ்தவன் என்று கூறிவிட முடியாது. வெளிச்சத்தில் காண்பித்து சோதனையில் தப்புகிறதா என்று பார்ப்பதின் மூலம் கிறிஸ்தவனை அடையாளம் காணலாம்.

எல்லா சிந்தனைகளையும், நோக்கங்களையும், கிரியைகளையும், கிறிஸ்துவின் வெளிச்சத்தில் வைக்கும்போது அந்த செயல்களின் உண்மைத்தன்மை வெளிப்பட்டுவிடும்.

விமான நிலையத்தில் சென்று பயணிப்பவர்களின் உடைமைகள் ஒரு X-ray கருவியின் ஊடாய் செலுத்தப்படும். அனால் நாம் அதை குறித்து பதறுவதில்லை. ஏன்? நமது உடைமைகளில் தவறான கடத்தல் பொருட்கள் ஏதும் இல்லை. ஆகவே நாம் அதை குறித்து பயப்படுவதில்லை.

கிறிஸ்தவர்களும் அதேபோல் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் வெளிச்சம் நம் கிரியைகளை உற்று நோக்கும்போது நாம் பதறுகிறவர்களாய் இருக்கக்கூடாது. ஏனெனில் கிறிஸ்துவின் வெளிச்சம் நம்முடைய உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும்.

கிறிஸ்தவனின் நற்குணம், நீதி, உண்மை ஆகியவை வெளிச்சத்தின் பிள்ளைகளின் அடையாளமாக இருக்கும். அதுவே நாம் தேவனுடைய புத்திரர் என்பதற்கும் அடையாளம்.

### *3. கற்பனை – The Command*

வ **11,** கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.

நமக்கு ஒரு கற்பனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இருளுக்கும் வெளிச்சத்திற்கும் உள்ள வேறுபாடும், வெளிச்சத்தின் குணங்களும், நமக்கு ஒரு கட்டளையையும் அளிக்கிறது.

இந்த வசனத்தில் அவர் முதலாவது நாம் எதை செய்யக்கூடாது என்று கூறுகிறார் "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல்". சற்று நிதானமாய் நிறுத்தி, இந்த வாக்கியத்தை தியானிப்போம்.

நாம் இருளுக்கும் வெளிச்சத்திற்கும் உள்ள வேறுபாடுகள் என்னவென்று பார்த்தோம். அந்த வேறுபாட்டின் நிமித்தம் நாம் அந்தகாரத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டவர்கள்.

*அந்தகாரத்தினின்று வெகு தூரம் பிரிக்கப்பட்டு தேவனிடத்தில் சேர்ந்து, நற்குணம், நீதி, உண்மை ஆகியவற்றோடு ஐக்கியத்தில் இருக்கிறோம்.*

*ஆகவே இப்போது, இவற்றிற்கு நேர் மாறான அந்தகார கிரியைகளோடு எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள கூடாது.*

*பவுல் இங்கே **sugkoinne** எனும் கிரேக்க பதத்தை பயன்படுத்துகிறார்.*

*“**koine**” என்றால் ஐக்கியம், அதற்கு முன் “**sug**” சேர்க்கப்படும்போது. இந்த வார்த்தைக்கு வலு சேர்க்கப்படுகிறது.*

*கனியற்ற பாவ காரியங்களில் துளியும் ஈடுபடாதிருங்கள்.*

*தேவனைக்குறித்து உலகம் அறியாமையில் இருப்பதைப்போல், நீங்களும் தேவனைக்குறித்து அறியாமையில் மாட்டிக்கொள்ளாமல் இருங்கள்.*

*உலகத்தின் அநீதியில் அகப்படாமல் இருங்கள்.*

*இவற்றோடு நமக்கு பங்கும் இல்லை பாத்திரமும் இல்லை.*

***அப்படியானால் யாரிடமும் பழகாமல் இருக்க வேண்டுமா? அப்படியல்ல!***

*நாம் இந்த உலகத்தாரை சுவிசேஷத்தினால் தொட வேண்டும். ஆனால் அவர்களின் கிரியைகளில் கலவாமல் இருக்க வேண்டும்.*

*உலகத்தில் தேவனுடைய சாட்சியாய் இருப்பதற்கு ஒரே வழி, உலகத்தின் பாவத்தில் பங்கெடுக்காமல் இருப்பது மாத்திரமே. அப்படி நீங்கள் உலகத்தோடு கலந்தால், உங்கள் சாட்சியை அது குலைத்துவிடும்.*

**1 கொரிந்தியர் 5:11,** நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது.

*உலகத்திலிருப்பவர்களுக்கு நாம் வேண்டும். ஆனால் அவர்களின் செயல்கள் நமக்கு வேண்டாம். அவர்களிடம் பழகுங்கள், அவரகளிடம் அன்பு செலுத்துங்கள். ஆனாலும் அவர்கள் செய்வதை பின்பற்றாதிருங்கள்.*

*கனியற்ற அந்தகாரத்தோடு கலவாதிருங்கள். உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்.*

*இப்படி கலவாதிருங்கள் என்று சொல்வதோடு முடித்துக்கொண்டால், நாம் யாவரும் உலகத்தாரை விட்டு முற்றிலும் விலகிவிடுவோம் என்று அறிந்து, இந்த கற்பனைக்கு அடுத்து ஒரு அழைப்பும் கொடுத்திருக்கிறார்.*

## *4. அழைப்பு - The commission*

**வ 11,** "அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்"

*அவர்கள் செய்வதை பின்பற்றாமல், அவற்றை கடிந்துகொள்ளுங்கள், வெளிப்படுத்துங்கள்.*

நாமே ஆவிக்குரிய CIA/ FBI/MI5.

*நம்முடைய பணி, அந்தகார கிரியைகளோடு கலவாமல், அவைகளை வெளிப்படுத்துதல்.*

*நாம் அனைவரும் கர்த்தரால் இதற்கென அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

**2 தீமோத்தேயு 3:16-17**, வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, 17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

*நாம் கடிந்துகொள்ள வேண்டும். சத்துருவை வெளிப்படுத்த வேண்டும்.*

*இதற்கென தேவன் வார்த்தையையும் வாழ்கையையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.*

*சில வேளைகளில் நம்முடைய வாழ்கையே சிலரை கடிந்துகொள்ளும்.*

*தீய வார்த்தைகளை சிலர் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் அங்கு சென்றால் அனைவரும் உடனே நல்ல வார்த்தைகளை பேசுவதை கண்டிருக்கிறீர்களா?*

*அநீதியான இந்த உலகத்தை அப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் வாழ்க்கை கடிந்துகொள்கிறது.*

*உங்கள் வாழ்க்கை மட்டுமல்ல உங்கள் வார்த்தையும் நேர்மையினால் நிறைந்திருக்க வேண்டும்.*

*பரிசுத்த தேவனால், உலகத்தின் பாவ கிரியைகளை கடிந்துகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.*

- *அநீதியான காரியங்களை எவை என்று ஆராயுங்கள் (*diagnose*)*

- *அவற்றிற்கு எதிர்த்து நில்லுங்கள் (*confront*)*
- *அதற்கு தீர்வு கொடுங்கள் (*offer solution*)*

*கடிந்துகொள்ளுங்கள், வெளிப்படுத்துங்கள், அவைகளை உடைத்துப்போடுங்கள்.*

*அவைகள் அறுக்கப்பட வேண்டிய புற்று நோய் போன்றவை. அவைகளை மறைப்பதினால் யாருக்கும் பிரயோஜனமில்லை.*

*அனைவரையும் நேசிப்பதுதான் சுவிசேஷம் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் அது சுவிசேஷம் அல்ல.*

*ஜனங்கள் பாவத்தில் அழுகிப்போய் இருக்கிறார்கள் என்பதை முதலில் உணர்த்த வேண்டும். அதன் பின்னர் சுவிசேஷத்தினால் அவர்களை மகிழ்விக்க வேண்டும்.*

*கலவாமல் கடிந்துகொள்ள வேண்டும்.*

*பாவிகளிடத்தில் பாவத்தை பாவம் என்று வெளிப்படையாய் தெரிவிக்க வேண்டும்.*

***ஏன்?***

**வ 12**, அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.

*அவைகள் நிச்சயமாகவே கண்டிக்கப்பட வேண்டியவை.*

*அவைகள் சொல்லுகிறதற்கும் அருவருப்பானவை. இந்த வாக்கியத்தில் தேவனுடைய இருதயத்தை உங்களால் காண முடிகிறதா? ஆகவே அவற்றை கண்டும் காணாததுபோல் செல்ல முடியாது.*

*ஆனால் இந்த உலகத்தில் இருப்பவர்கள் இப்போது பாவம் என்பதே இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட உலகத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*

*அவை அருவருப்பு. பேசவும் கூடாதவை.*

*அப்படிப்பட்ட அவலட்சனங்கள் பேச்சு வழக்கில் இருக்கக்கூடாது.*

*இப்படிப்பட்ட கேடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.*

*சில வேலைகளில் நம்முடைய தொலைக்காட்சியை நம் பிள்ளைகளுக்கு காண்பிப்பதின் மூலம் இப்படிப்பட்டவைகளை நம் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கிறோம்.*

ஓரினச்சேர்கை குறித்த ஒரு கிறிஸ்தவர் எழுதிய புத்தகத்தை படித்தேன். அந்த புத்தகத்தில் அருவருப்பான பல விஷயங்களை அவர் வெளிப்படையாக எழுதியிருந்தார். அதை படிக்கும்போது கிறிஸ்தவ புத்தகத்தை படிப்பதுபோல் இல்லாமல், ஏதோ ஒரு விகார புத்தகத்தை வாசிப்பதுபோல் தோன்றுகிறது. இது சரியான முறை அல்ல. தீமையை இவ்வளவு தீமையை விளக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வளவு மோசமாக விவரிக்காமலே தேவனுடைய தீர்வை நாம் அறிவிக்கலாம். அவர்களுடைய பாவங்களின் நுணுக்கங்களை விவரிப்பது அவசியமற்றது.

இந்த அவலட்சனங்கள் கடிந்துகொள்ளப்பட வேண்டியவை. உதாசீனப்படுத்தவோ பொறுத்துக்கொள்ளவோ கூடாதவை.

இதற்காகவே உலகத்தில் அனுப்பப்பட்டீர்கள்.

உங்களுக்குள்ளே போராடாமல், இவற்றை கடிந்துகொள்ளுங்கள்.

இவற்றை வெளிப்படுத்துங்கள்.

வ **13,** அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது.

வெளிச்சம் எல்லாவற்றையும் வெளிப்படுத்திவிடும். வெளிச்சமாக இருந்து நீங்கள் வெளிப்படுத்தாவிட்டால், அவைகள் எப்படி வெளிப்படுத்தப்படும்?

இதுவே உங்கள் அழைப்பு.

உலகத்தில் சென்று பாவத்தை கடிந்துகொள்ளுங்கள். நீங்களே வெளிச்சம்.

- தங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பாவிட்டால், யாரும் தேவனிடத்தில் சேர முடியாது.
- பாவம் வெளிப்படுத்தபடாதபோது, பாவம் என்னவென்றே யாருக்கும் தெரியாது.

பாவத்தை சகித்துக்கொண்டு ஜனங்களை நேசிப்பது சுவிசேஷமல்ல. அவர்கள் பாவத்தை அவர்கள் கண்முன் நிறுத்துவதே சுவிசேஷம்.

வெளியரங்கமாக்குவது வெளிச்சத்தின் குணம். அவர்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை, வெளியரங்கமாக்கும் வெளிச்சம்.

ஆகவே தான், நாம் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறோம்.

---

**வேறுபாடு** – அந்தகாரமும் வெளிச்சமும்

**குணம்** – வெளிச்சத்தின் புத்திரராய் நற்குணம், நீதி, உண்மை

**கற்பனை** – உலகத்தின் பாவத்தோடு கலவாமல் இருப்பது

**கட்டளை / அழைப்பு** – அவலட்சணங்களை வெளியரங்கமாக்கும் வெளிச்சம்.

---

### முடிவுரை

### அழைப்பு - Invitation.

கிறிஸ்துவை அறியாதவர்கள் எபேசியர் நிருபத்தை வாசிப்பார்கள் என்று பவுல் உணர்ந்து இந்த வார்த்தைகளை கூறுகிறார்.

**வ 14,** ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

ஏசாயா **60:1**, எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.

ஏசாயாவின் வார்த்தைகள், இயேசுவை எதிர்நோக்கி இருந்தன. பவுலின் வார்த்தைகள் சிலுவையில் இயேசு நிறைவேற்றியதை நோக்கி இருக்கின்றன.

பவுல் ஏசாயாவின் வார்த்தைகளில் கிறிஸ்துவை முன்னிறுத்துகிறார். ஏனெனில் கிறிஸ்துவே எல்லாவற்றின் நிறைவாய் இருக்கிறார்.

பவுலின் வார்த்தை ஒரு அழைப்பு. ஒருவேளை இதை கேட்டுக்கொண்டு இருக்கிற சிலர் நான் இன்னும் அந்தகார கிரியைகளில் இருக்கிறேன் என்று நினைக்கலாம். என்னுடைய வாழ்வில் நற்குணம், நீதி, உண்மை ஆகியவற்றை காண முடியவில்லை என்று நினைக்கலாம். இயேசு என் வாழ்வில் ஜீவனாக இல்லை என்று சிந்திக்கலாம். தேவனை இன்னும் அறிந்துகொள்ள வில்லை என்று யோசிக்கலாம். அறியாமையின் இருளினால் கைகளில் பாவ கறைகளோடு இருப்பதாக உணரலாம்.

வரலாற்றில் எல்லோருக்கும் வந்தது போல் உங்களுக்கும் இந்த அழைப்பு உண்டு.

ஒரு சிறிய வசனத்தில், சுவிசேஷம் முழுமையும் அடங்கியிருக்கிறது.

பாவியானவன் தூங்குவதாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

*எழும்பவும், பிரகாசிக்கவும் அறைகூவல் விடுக்கப்பட்டது.*

*இரட்சகர் அறிமுகப்படுத்தப்படுகிறார் – "கிறிஸ்து உங்களுக்கு வெளிச்சத்தை கொடுப்பார்"*


*பாவத்தின் இருமனதைக் காட்டி, பாவியை வரவேற்கும் ஒரு அழைப்பு இறுதியில் அந்த பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகர் அறிமுகப்படுத்தப்படுகிறார்.*

**யோவான் 3:16-21,** தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். 17. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். 18. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. 19. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. 20. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். 21. சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.

# *7. புது குடும்பம்*

*அமெரிக்காவை பற்றிய முதல் பாடமாக ஒரு காரியத்தை கூறுகிறேன்: அமெரிக்காவின் மிக பெரிய எல்லா மாற்றங்களும் சாப்பாட்டு மேசையில் தான் தொடங்குகிறது என்று அமெரிக்காவின் 40வது ஜனாதிபதியான ரொனால்ட் ரீகன் தன்னுடைய பதவி நிறைவு விழாவில் கூறினார்.*

குடும்பம் செல்லும் பாதையில் தேசமும், தேசம் செல்லும் பாதையில் நாம் வாழும் உலகமும் செல்லும்.




**எபேசியர்** 2:19, ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

*ஆண்டவர் இஸ்ரவேலை தம்முடைய விசேஷித்த ஜனமாக தெரிந்துகொண்டார்.*

**உபாகமம்** 7:6, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்.

*ஆனால், இயேசு யூதரையும் புறஜாதியாரையும் (எல்லோரையும்) இரட்சிக்க வந்தார்.*

தம்மைத்தாமே சிலுவையில் பலியாக கொடுத்த இயேசுவின் மூலம் நாம் எல்லோரும் கர்த்தருடைய தத்துப் பிள்ளைகளானோம்.

**ஒருவன், தேவனால் தத்தெடுக்கப்பட்டு அவருடைய குமாரனால் தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டு வரப்படும்போதுதான் கிறிஸ்தவனாயிருக்க முடியும்.**

**கர்த்தருடைய இந்த குடும்பம் சபையின் மூலமாய் இந்த உலகத்தில் வெளிப்படுகிறது.**

**மாற்கு** 3:31-35, அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். 32. அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். 33. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, 34. தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! 35. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

இதுவே கிறிஸ்துவின் ஊழிய வாஞ்சையாக இருந்தது.

புத்தம் புதிய குடும்பத்தை ஆரம்பிக்க இயேசு கிறிஸ்து வந்தார். மறுபடியுமாக கிறிஸ்துவுக்குள் பிறந்த ஆண் / பெண், சகோதர / சகோதரி, தாத்தா / பாட்டி என அனைவரையும் பார்க்க வந்தார்.

இப்பொழுது அவரும் அவருக்குள் அவருடைய புது குடும்பமும்.

உங்களுடைய குடும்பத்தை குறித்து ஆழமாக நீங்கள் யோசிக்கலாம். எனினும், புதிய குடும்பம் மற்றும் புதிய நோக்கத்தையும் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட நீங்கள் கிட்டி சேர வேண்டும்.

ஒருவேளை நீங்கள் உங்களை குறித்து,

- வயது நிரம்பி ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவர் என்று நினைக்கலாம்,
- நம்பிக்கையற்ற வாலிபர் என்று நினைக்கலாம்
- நடுத்தர வயதில் சிக்குண்டவராக உணரலாம்,

கிறிஸ்து உங்களுக்காக புது குடும்பம் வைத்திருக்கிறார். அந்த புதிய குடும்பத்திற்குள் நீங்கள் இருந்தீர்களானால் நீங்கள் விசேஷித்தவர்கள்.

## இயேசுவின் தாயாரும் சகோதரரும் அவரை காண வந்தனர்

***கிறிஸ்து இந்த புதிய குடும்பத்தை குறித்து போதிக்கும்போது அவருடைய பழைய குடும்பத்தினர் வந்தனர். இயேசுவின் இந்த மதிமயக்கத்திலிருந்து அவரை மீட்டு விடலாம் என்று அவர்கள் கருதினர்.***



**மாற்கு** 3:21, அவருடைய இனத்தார் இதைக்கேட்டபோது, அவர் "மதிமயங்கியிருக்கிறார்" என்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தார்கள்.

*அவர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைக்கவில்லை.*

**யோவான்** 7:1-5, இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார். 2.யூதருடைய கூடாரப்பண்டிகை சமீபமாயிருந்தது. 3. அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம். 4. பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள்., 5. அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.

*உண்மையாகவே, இயேசுவின் ஊழியத்தின்போது இரண்டாவது முறையாக மரியாள் அவர் முன்பாக வருகிறார் ஆனால் இந்த முறையும் மரியாளை அவர் அலட்சியம் பண்ணுகிறார். மரியாளும் மற்றவர்களும் ஆண்டவரின் குடும்பத்திலுள்ளவர்களும் இனம், மதம், மற்றும் இரத்த சம்பந்தத்தினால் எதாவது செய்துவிடலாம் என்று நினைத்தார்கள். ஆனால், அது பூவுலகத்தில் தானே அன்றி பரலோகத்தில் இல்லை !*

*செல்வமும் வறுமையும் குடும்பம் சம்பந்தப்பட்டதாக இருக்குமே தவிர ஆண்டவரிடம் இல்லை !*

*கிறிஸ்து சுற்றிலும் பார்த்துவிட்டு (வ34) இல்லை இதை விட உன்னதமான உறவு இப்பொழுது வந்திருக்கிறது என்று சொன்னார்!*

*கண்டிப்பாக, அது உயர்வான ஒன்றாகத்தான் இருக்கும்.*

*இயேசு தம் சொந்த ஜனங்களாலேயே குற்றஞ்சாட்டப்பட்டு கேலிசெய்யப்பட்டு, நிராகரிக்கப்பட்டார். ஆதலால், நீங்களும் அப்படித்தான்.*

**மத்தேயு** 5:11-12, என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;

12. சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

1 **பேதுரு** 4:14, நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.

*கவனம், கிறிஸ்தவர்களாயிருக்கிறதற்கு சரியான விலையை நீங்கள் கொடுக்கவில்லை என்றால் மற்றவர்களுக்கு உங்கள் வாழ்க்கையைப்பற்றிய உண்மையை சொல்ல வில்லை என்று தான் அர்த்தம். நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள் என்றால் வழி தப்பினவர்களை விட நீங்கள் வித்தியாசமானவர்களாயிருப்பீர்கள்.*

*பழைய வாழ்க்கையின் கட்டுகள் கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டான புதிய வாழ்க்கைக்குள் வருவதில்லை என்று கிறிஸ்து நிரூபித்தார்.*

ஆனால் இந்த கட்டுகள் வரும் என்று கூறுவதுதான் உண்மையாகவே, பொய்யான மதம். புதிதாய் பிறந்த அனுபவத்தோடு எதையாவது கூட்டினாலும் கழித்தாலும் அது பொய்யான மதமே.

**ரோமர் 10:1-4**, சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. 2. தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சிசொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. 3. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். 4. விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

கர்த்தருக்காக வைராக்கியமாக இருந்தாலும், யூதர்களால் ஆண்டவருக்குள் வர முடியவில்லை ஏனென்றால் அவருடைய விதிமுறைகளுக்குள் அவர்களால் வர இயலவில்லை.

ஒருவேளை, ஒரு மனிதனுடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்று ஒருவன் விசுவாசித்தும், தான் நற்காரியங்களை ஈட்டி, மரியாள் தங்களுக்காக பரிந்து பேசுவார் என்று விசுவாசித்து, உத்தரிப்பு ஸ்தலத்தில் பாடுபட்டு, ஒரு சபையில் அங்கமாயிருந்து, விதிமுறைகளை பின்பற்றி அல்லது சடங்கு சம்பிரதாயங்களை காப்பாற்றி, அல்லது மறுபடியுமாக கிறிஸ்து பலியாவார் என்று ஆராதனையில் கூறினால் அந்த மனுஷன் இரட்சிக்கபட்டவனா?.

வேதாகமம் அதை மறுக்கிறது.

இரட்சிப்படைவதற்கு வேறேதேனும் உண்டு என்று விசுவாசிப்போமானால், கிறிஸ்து நமக்காக விலைக்கிரையமாக முழுமையாக தம்மை கொடுத்தார் என்பதையும் சுவிசேஷத்தையும் நாம் முழுமையாக நிராகரிக்கிறோம்.

உங்கள் இரட்சிப்புக்கு ஒரு சபையை நீங்கள் விசுவாசித்தால், பின்பு எப்படி நீங்கள் கிறிஸ்துவையும் அவர் செய்து முடித்த கிரியைகளையும் விசுவாசிக்கிறீர்கள் என்று சொல்ல முடியும் ?.

ஆண்டவருடைய வார்த்தையை விடுத்து, சபை கூறும் வியாக்கியானங்களை வேதமாக ஏற்றுக்கொள்ளுகிற ஒருவன், எப்படி ஆண்டவரை முழுமையாக அறிந்திருக்கிறான் என்றும் அவரை விசுவாசிக்கிறான் என்று சொல்ல முடியும் ?

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்" என்று சொல்லுகிற அநேகர் தாங்கள் உபயோகப்படுத்துகிற வேத வசனங்களோடு தங்களுடைய சொந்த அர்த்தங்களையும் சேர்த்து கொள்ளுகிறார்கள்.

இதனால், அநேக கள்ள உபதேசம் உண்டாகிறது, மட்டுமன்றி இதன் மூலம் கிறிஸ்துவை குறித்த தாவறான கருத்துக்களும் உள்ளடங்குகிறது.

## பழைய குடும்பத்தின் அடிப்படையே அல்லாத புதிய குடும்ப உறவுகள்.

இயேசு அவரை சுற்றியிருந்த அந்த 12 பேரை கவனித்தார். அவர் என்ன பார்த்திருப்பார் என்று நினைத்துபாருங்கள்.



அவர் என்ன கண்டிருப்பார் என்பதை பின் நடந்த சம்பவங்கள் வெளிப்படுத்தும்.

பயத்தின் மிகுதியால் இருந்த ஒரு மனிதனை பார்த்தார்.

அவரை அறியேன் என்று அர்த்த இராத்திரியில் சத்தியம் பண்ண கூடிய மனிதனை கண்டார்.

அவர் வேதனையில் இருக்கும்போது ஓடிப்போகிறவர்களான மற்ற பத்து பேரை அவர் கண்டார்.

ஆனால், இயேசு கண்ட அந்த மனுஷர் உள்ளான இருதயத்திலே ஆண்டவருக்காக பரிசுத்தம் பண்ணப்பட்டவர்கள்.

தோல்விக்கான எல்லா சாத்தியங்களும் இருப்பதை அவர் கண்டார் ஆனாலும், அதன் முடிவு என்னவாயிருக்கும் என்றும் அவர் அறிந்திருந்தார்.

ஆனாலும், இயேசு உள்ளத்தின் நோக்கத்தை அறிந்திருந்தார். ஒருவரும் நுழையக்கூடாத அந்த சாம்ராஜ்ஜியத்திற்குள் அவர் நுழைந்து சொன்னது:

- இதோ என் சகோதரரே, நெருக்கத்தில் எனக்காக பிறந்திருக்கிறவர்களே.

- *இதோ என் சகோதரிகளே, எனக்கு இன்பமான நம்பிக்கைக்கும் அனுதாபத்திற்கும் பிறந்திருக்கிறவர்களே.*
- *இதோ என் தாய், என் ஆறுதலுக்காக பிறந்திருக்கிறவளே.*

*"என் பிதாவினுடைய சித்தத்தை செய்கிறவர்கள் எவர்களோ அவர்களே எனக்கு தாயும் சகோதரனும், சகோதரியுமாய், இருக்கிறார்கள்"* என்று சொன்னார்.

**சத்தியத்தின் அடிப்படையில் கிறிஸ்து விரும்பும் புதிய குடும்பம்.**

The New Family that Christ loves is based on Truth.

*கிறிஸ்துவுடன் இப்படிப்பட்ட நெருக்கமான உறவில் இருப்பதற்கு அவசியமானது ஒன்று என்னவென்றால் கிறிஸ்து பிதாவின் சித்தத்தில் பங்குகொண்டது போல நாமும் அவரை அறிந்து அவருடைய சித்தத்தில் பங்குகொள்ள வேண்டும்.*

*ஆண்டவருடைய சித்தத்தில் பங்குகொள்ள வேண்டிய காரியத்தை பற்றி லேவியராகமத்தில் பார்க்கலாம்.* (Leviticus 23:1–41).

*அவருடைய பரிசுத்த பண்டிகை நாட்களை குறித்து ஆண்டவர் தம்முடைய குடும்பத்திற்கு வருட அட்டவணையை கொடுத்திருக்கிறார்.*

*இந்த நாட்களை சரியாய் கணக்கு போட்டு பார்த்தால் ஆண்டவர் அவரது பிள்ளைகளோடு அதிக நேரம் செலவழிக்க விரும்புகிறார் என்பது புரியும் !.*

**ஒரு வருடத்திற்கு 52 வார ஓய்வு நாட்கள்**

**வருடாந்திர பண்டிகைகளின் நிமித்தம் அனுசரிக்கப்படும் ஓய்வு நாட்கள் 18.**

***மொத்தம் 70 நாட்கள் .***

*இந்த மொத்த 70 நாட்களும் விருந்து, படித்தல், கற்றல், பாடுதல், மற்றும் ஆண்டவரின் குடும்பத்திலுள்ள சகோதரரோடு கூட இருக்கிற ஐக்கியம், அதோடு மட்டுமல்லாமல் பிதவோடும் கிறிஸ்துவோடும் சேர்ந்த ஐக்கியமும் அடங்கும்.*

1 **யோவான்** 1:3, நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.

*இயேசு கற்பித்த மிக முக்கியமான பாடம் ஒன்று:*

**மத்தேயு** 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

நம்மெல்லோரிடத்திலும் விசுவாச குறைச்சலுண்டு என்று இயேசு அறிவார்.

நாம் ஆண்டவருடைய சித்ததிற்கு கீழ்படிந்தோமானால் அவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவற்றுவார்.

அவருடன் நாம் செலவழித்த அந்த (70 days) நாட்களில் நமக்கு ஏற்பட்ட நஷ்டங்களை அவர் ஈடேற்றுவார்.

ஒவ்வொரு ஓய்வு மற்றும் பண்டிகை நாட்களை நாம் அனுசரிக்கும்போது நாம் எதை முன்னிலைப்படுத்துகிறோம் என்பதை அவர் பார்ப்பார்.

ஆண்டவருடைய பிள்ளைகளுக்காக அவர் குறித்து வைத்திருக்கிற நாட்கள், பிதாவினுடைய சித்தத்திற்கு நம்மை வழிநடத்துகிறது.

ஆண்டவரோடு நேரம் செலவழிக்க மறந்தாலோ அல்லது பின்வாகி போனோமானால், அவருடைய சித்தத்தை செய்ய முடியாது. நமக்கு வசதியான நேரதிற்கேற்ப ஒரு வாரத்துக்கு ஒரு முறை இரண்டு மணி நேரம் மாத்திரம் அவருடைய சித்தத்தை செய்து வாழ முடியாது.

சத்தியத்தை ஆமோதித்து வேத ஞானம் அடைவது மாத்திரம் போதாது என்பதே புதிய ஏற்பாட்டில் நாம் மீண்டும் மீண்டும் கற்றுக்கொள்ளும் பாடம்.

நாம் கற்ற வேத அறிவே நம்மை குற்றப்படுத்தும். அதுவே நம்மை நாம் வஞ்சித்து வீழ்வதற்கு முக்கிய காரணியாக அமையும். இதுவே மணலின் மீது வீடு கட்டின புத்தியற்ற மனிதனின் உவமைக்கு ஒப்பான வாழ்வு.

**லூக்கா** 6:47-49, என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். 48. ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. 49. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின் மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து, முழுவதும் அழிந்தது என்றார்."

**லூக்கா** 8:21, அதற்கு அவர்: தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார்.

இந்த வசனத்தில் உள்ள இரண்டு படிகள் தெளிவாக உள்ளன.

அவருடைய வசனத்தை கேட்டு, அதின்படி செய்கிறவனே ஆசீர்வதிக்கப்படுகிறான்.

இதுவே வேத அறிவுக்கும் விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசம்.

அறிவோடு இணைந்த கீழ்படிதலே உத்தமம், அதுவே விசுவாசம். விசுவாச-மன்மையை இதுவே வேறுபடுத்தி காண்பிக்கும்.

**யாக்கோபு** 2:21-24, நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? 22. விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. 23. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். 24. ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

கர்த்தரை அறிகிற அறிவு என்பது சுருக்கமாகவோ, நம்முடைய அறிவினாலோ அறிந்து கொள்ள முடியாதது. மாறாக தனிப்பட்ட ஒழுக்கம் மற்றும் அனுபவபூர்வமாக அதை அறிந்து கொள்ளலாம். அவர் ஜீவனுள்ள தேவன்.

ஆகவே இது அறிவுப்பூர்வமான உணர்வு மாத்திரமல்ல, ஜீவன் கொடுக்கிற ஆவிக்குரிய அனுபவம். இந்த அனுபவம் பேதுருவுக்கு இருந்தது,

**மத்தேயு** 16:17, இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு முதன் முதலில் அவரை கண்டது மகதலேனா மரியாள். இயேசு தம்முடைய சீஷர்களுக்காக உண்டுபண்ணின ஒரு புதிய உறவை அவளிடத்தில் வெளிப்படுத்தினார்.

**யோவான்** 20:17, இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்."

- *என் பிதா*
- *உங்கள் பிதா.*

- ✓ *என் தேவன்*
- ✓ *உங்கள் தேவன்*

**மத்தேயு** 28:10, அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்."

எபிரேயர் 2:11, எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:

*இயேசு அவருடைய சீஷர்களையும் எந்த கிறிஸ்தவனையும் தன்னுடைய சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை.*

### *முடிவுரை*

*பழைய மனிதனை விட்டுவிட்டீர்களா?*

Have you left the old?

**லூக்கா** 14:26, யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரனையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

*கண்டிப்பாக, நம் குடும்பத்தாரை கவனித்துக் கொள்வதும் அவர்களுக்கு வேண்டியதை செய்வதுமே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது.*

1 **தீமோத்தேயு** 5:8, ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

ஆனால், அதிகமாய் நேசிக்கிற நம் குடும்பத்தாரால் நாம் ஆண்டவருடன் கிட்டிச்சேர்வதில் ஒரு இடைவெளி உண்டாவதை நாம் அனுமதிக்க கூடாது.

ஒரு யூத சமுதாயத்தில் குடும்பம் எவ்வளவு முக்கியம் என்று பார்க்கும்போது, நீங்கள் சிந்தித்து பாருங்கள் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை கேட்டவர்களுக்கு அது எவ்வளவு அழுத்தமாக இருந்திருக்கும்.

*ஒருவன் ஆண்டவருடைய குடும்பத்தில் சேர்வது எப்படி?*

## How does one enter the family of God?

*புதிதாக பிறப்பது மற்றும் ஆவிக்குரிய முறையில் பிறப்பதினால் மட்டுமே.*

**யோவான்** 3:1-7, யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். 2. அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். 3. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். 4. அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். 5. இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். 6. மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். 7. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்.

1 **பேதுரு** 1:22-25, ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர்

ஊக்கமாய் அன்புகூருங்கள்; 23. அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. 24. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. 25. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே.

*ஒரு பாவி இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவன் அந்த புதிய பிறப்பின் அனுபவத்தை உணர்ந்து தேவனுடைய குடும்பத்திற்குள் நுழைகிறான்.*

*ஆண்டவருடைய சாயலை தரித்து கொள்ளுகிறான்!*

2 **பேதுரு** 1:3-4, தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, 4. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

*ஆண்டவரை " பிதா" என்று அழையுங்கள்.*

**ரோமர்** 8:14-17, மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். 15. அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். 16. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். 17. நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

*ஆவிக்குரிய முறையில் பிறப்பது என்பது நாமாக மாத்திரமோ அல்லது மற்றவர்கள் நமக்காகவோ செய்ய முடியாதது. மாறாக, இது ஆண்டவரால் உண்டானது. அவரோடு இனைந்து நாம் செய்யக் கூடிய ஒன்று,*

*இது தேவனுடைய ஈவு. அதை விசுவாசித்து பெற்றுகொள்ள வேண்டும்.*

**எபேசியர்** 2:8-9, கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; 9. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

**தீத்து** 2:7-8, நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, 8. எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.

Apologetics என்று சொல்லக்கூடிய ஒரு போதக முறை. இது பொதுவாக கர்த்தரை மறுதலிப்பவர்களிடத்தில் முறையிட்டு கர்த்தருக்காக பேசுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் அவிசுவாசிகளோடு பேசுவதற்கு மாத்திரமல்ல சத்தியத்திற்கு விரோதமாய் இருப்பவர்களிடத்திலும் பேசுவதற்கும் இந்த Apologetics முறை அவசியமாக இன்றைக்கு சபையில் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

*கர்த்தரோடும் கிறிஸ்துவோடும் உங்கள் புதிய குடும்பம் நெருங்கி இருப்பதாக உணருகிறவரா?*

*அந்த உணர்வு உங்களுக்கு ஒரு நோக்கத்தை கொடுத்து, உங்களை ஒரு பாத்திரமாகவும் மாற்றுகிறதா?*

*அப்படி இல்லை என்றால், இந்த புதிய குடும்பத்தில் இணைவது எப்படி என்று காண்பிக்க விரும்புகிறோம்.*

*புதிய பிறப்பின் சத்தியத்தை ஆழமாக விசுவாசிக்கிறவரா?*

*கிறிஸ்துவுக்கு பாத்திரமாய் வாழும் வாழ்வுக்கான கிரயத்தை செலுத்தியிருக்கிறீர்களா?*

*உங்கள் பரம பிதா செய்ய விரும்பும் எதையும் செய்ய தயாராக இருக்கிறீர்களா?*

*அப்படியானால், கிறிஸ்துவின் புதிய குடும்பத்தை நன்றாக உணர்ந்தவர் நீங்கள்!*

7. புது குடும்பம்

# *8. ஞானமாய் நடப்போம் பகுதி 1*

எபேசியர் **5:15-21,** ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, 16. நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். 17. ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். 18. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; 19. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, 20. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, 21. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.




*நாம் மதியீனமான உலகத்தில் வாழ்கிறோம்.*

*உண்மையிலேயே, இந்த உலகத்தில் பிறக்கும் எல்லோரும் பிறவிலேயே பாவ சுபாவம் எனும் ஊனத்தொடு தான் பிறக்கிறோம். அதை பாவ சுபாவம் என்றும் கூறலாம்.*

நீதிமொழிகள் **22:15**, பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்.

*ஒரு மனிதன் மதியீன நிலையில் (*state of foolishness*) தான் பிறக்கிறான்.*

*அப்படி என்றால் என்ன?*

*முட்டாள் என்று நினைத்தாலே, ஒருவன் பொறுப்பில்லா காரியத்தை செய்பவனும் பொறுப்பில்லாமல் தன் இஷ்டத்திற்கு பேசுபவனுமாயிருப்பவன் என்று நாம் நினைப்போம்.*

*ஆனால், தேவனை அறியாதவனும் தேவனை விட்டு பிரிந்திருப்பவனுமே முட்டாள் என்று வேதம் சொல்லுகிறது.*

*புத்திமான் என்பவன் தேவனுடைய பிரதான கற்பனைகளின் படி வாழ்பவன்.*

*மனிதன் பிறகும்போதே தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டான். தேவனுடைய ஞானம் அவனிடத்தில் வெளிப்படுவதில்லை.*

*நீதிமொழிகளின் புஸ்தகம் மதியீனனை விளக்கும்.*

**சங்கீதம் 14:1,** தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.

*ஒரு மதியீனனுக்கு தெரியும் தேவன் உண்டென்று ஆனாலும் அவர் இல்லாததுபோல் அவன் வாழ்கிறதினால் சிதைந்து போகிறான். மதியீனர்கள் அருவருக்கத்தக்க செயல்களை செய்கிறார்கள்.*

*ஆண்டவர் இல்லை என்று கூறும் நாத்திகம் அக்கிரமத்தில்தான் முடியும்.*

*ஒரு மதியீனனின் முதல் குணாதிசயம் அவன் வாழ்கிற வாழ்வில் ஆண்டவர் இல்லை என்று சொல்லுவதுதான். அது தேவனுக்கு விரோதமான வாழ்வு.*

*அவர்கள் தேவ காரியங்களை அறிந்து கொள்ள மாட்டார்கள்.*

**1 கொரிந்தியர் 2:14**, ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.

*ஒரு மதியீனனுக்கு மதியீனமே ஞானம், ஞானமே மதியீனம்.*
*முதல் குணாதிசயமே தேவனை புறக்கணிப்பதுதான்.*
*தேவன் என்கிற எண்ணமே அவனிடத்தில் ஒட்டுவதில்லை.*
*தேவனுடைய கட்டளை மூடனுடைய மனசாட்சியை கட்டி வைப்பதில்லை.*
*அவன் நடைமுறை நாத்திகனாக இருப்பான்.*
*அவன் தேவனை விட்டு பிரிந்து இருப்பான்.*

### *மதியீணன் யாரை வழிபடுகிறான்?*

*எல்லோரும் ஏதாவது ஒன்றை வணங்கித்தான் ஆக வேண்டும்.*
*மெய்யான தெய்வம் இல்லை என்றால், மனிதன் ஒரு பொய்யான தெய்வத்தை வைத்துகொள்வான். இது தவிர்க்கமுடியாதது.*
*தான் படைத்த தெய்வத்திற்கு அவனே தெய்வமாக இருப்பான்.*

**நீதிமொழிகள் 12:15**, மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்; ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்.

*மூடன், தன்னுடைய வாழ்வில் இதுதான் சரி, தவறு என்று தனக்குத்தானே நிர்ணயிக்கிறான்.*

*முடிவாக தேவன் இல்லை என்று சொல்லி தன்னைத்தான் தேவன் என்று நினைத்து கொள்ளுவதின் மூலம், தவிர்க்க முடியாத பாவத்தில் ஊறுகிறான்.*

**நீதிமொழிகள் 14:9**, மூடர் பாவத்தைக்குறித்துப் பரியாசம்பண்ணுகிறார்கள்; நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு.

*மூடன் தனக்குத்தானே விதிகளை வைத்துக்கொண்டு, அதை நியாயப்படுத்துகிறவனாயிருக்கிறான்.*

*தனக்கு சாதகமாக எல்லாம் அமைய வேண்டும் என்று கூறி, பாவத்தையும் அதின் விளைவையும் மறுதலிக்கிறான்.*

*நடைமுறையிலே ஒரு மூடன் தேவன் இல்லை என்றும், தேவனுக்கு பதிலாக தன்னையே ஒரு தேவனாக நினைத்து தனக்குரிய வாழ்வை நியமித்து பாவத்தை மறுக்கிறான். ஏனென்றால் அவனால் பாவத்தின் குற்ற உணர்வை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தினால் அப்படி நடந்து கொள்வான்.*

*ஆவேசமாக மற்றவர்களை தன்னுடைய சொந்த கருத்துக்கள் பாதிக்கும் வகையில் பேசுவான்.*

**நீதிமொழிகள் 15:2,** ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்; மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்.

*கசப்பு நிறைந்த ஊற்றை நீங்கள் பயன்படுத்தினால் உங்களுக்கு கசப்பான தண்ணீர் தான் கிடைக்கும்.*

*அழுகின மரத்தை கண்டால் அழுகின பழங்கள் தான் கிடைக்கும்.*

*ஒரு மூடன் தன வாயை திறந்தால் அவனின்று ஞானம் கிடைக்காது மாறாக மதியீனம் தான் வெளிப்படும்.*

- *அவன் தேவனை மறுப்பான்*
- *அவன் தன்னையே தெய்வமாக கொள்வான்*
- *பாவத்தை குறித்து பரிகாசம் செய்வான்*
- *தன்னுடைய சொந்த அதிகாரத்தினால் பேசுவான்*

- *தன்னுடைய சொந்த கருத்துக்களை உருவாக்குவான்.*

*இந்த உலகம் மதியீனர்களின் கருந்துகளால் நிறைந்திருக்கிறது.*

**நீதிமொழிகள் 16:22**, புத்தி தன்னை உடையவர்களுக்கு ஜீவஊற்று; மதியீனரின் போதனை மதியீனமே.

*மதியீனனுடைய விதிமுறைகள் முட்டாள் தனமாக இருக்கும்.*

*தான் வாழுகிற சமூகத்தையும் கெடுத்து அதே மதியீனத்தினால் தன்னுடைய ஆத்துமாவையும் கெடுத்துப்போடுகிறான்.*

- *மதியீனத்தை, பரம்பரை சொத்தாக தன் பிள்ளைகளுக்கு வைத்து போகிறான்.*
- *தன் சிநேகிதருக்கு*
- *அவன் போதிக்கிற மக்களுக்கு*
- *அவனுடைய மதியீன வலைக்குள் சிக்கி கொள்ளுகிற எல்லோருக்கும் அதை வைத்து போகிறான்.*

*மதியீனத்தின் இந்த நிலையை பார்த்தால் பின்வரும் வசனம் ஒரு நல்ல வார்த்தை இருக்கிறது.*

**நீதிமொழிகள் 1:7,** கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

*நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானம் என்பது ஒரு உன்னதமான நிலையில் வாழ்வது.*

*உன்னதமான சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அதன் படி வாழ்வதையே ஞானம் குறிக்கிறது.*

### *மதியீனனுக்கு என்ன சம்பவிக்கும்?*

*தேவனை மறுப்பவனுக்கு என்ன நடக்கும்?*

**நீதிமொழிகள் 1:20-23**, ஞானமானது வெளியே நின்று கூப்பிடுகிறது, வீதிகளில் சத்தமிடுகிறது.
21. அது சந்தடியுள்ள தெருக்களின் சந்திலும், ஒலிமுகவாசலிலும் நின்று கூப்பிட்டு,
பட்டணத்தில் தன் வார்த்தைகளை வசனித்துச் சொல்லுகிறது: 22. பேதைகளே, நீங்கள்
பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே, நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவதும்,
மதியீனரே, நீங்கள் ஞானத்தை வெறுப்பதும், எதுவரைக்கும் இருக்கும். 23. என்

கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ, என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்.

*என்ன ஒரு பெரிய அழைப்பு!*

*பழைய ஏற்பாட்டில் தேவனும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவும் – எருசலேம் நகரத்தின் வீதிகளில் ஞானம் ஞானம் என்று அறைகூவல் விடுத்தனர். எளியவனையும், பரியாசக்காரனையும், மதியீனரையும் தம்மிடத்தில் வரும்படியாய் அழைத்தனர்.*

**நீதிமொழிகள் 1:24-32**, நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. 25. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். 26. ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம்பண்ணுவேன். 27. நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கணும் உங்கள்மேல் வரும்போதும், ஆகடியம்பண்ணுவேன். 28. அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். 29. அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனார்கள். 30. என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள். 31. ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள். 32. பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும், மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும்.

*அதுதான் முடிவு, ஒரு மூடனாக இப்படிதான் சாக நேரிடும்.*

**நீதிமொழிகள் 10:21**, நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்.

*ஒவ்வொரு மரணத்திலும் தாவீது அப்நேருக்காக அழுது புலம்பின வார்த்தைகளை நாம் கேட்கலாம்.*

**2** சாமுவேல் **3:33**, ராஜா அப்னேருக்காகப் புலம்பி: மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப்போனானோ

*ஜனங்கள் மூடரைப்போல் சாவார்கள்.*

*அவர்கள் மூடர்களை போல வாழ்ந்து, மூடத்தனதிலே மாளுவார்கள்.*

## *இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?*

*நீதிமொழிகள் 1 ஆம் அதிகாரத்தில் , ஞானம் ஜனங்களை தன்னிடதில் வரும்படி சத்தமிட்டு அழைக்கிறது.*

*ஞானம் நமக்கு கிடைக்ககூடிய தூரத்தில் தான் இருக்கிறது.*

**நீதிமொழிகள் 9:1**, ஞானம் தன் வீட்டைக் கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து,

*புத்திமான் ஆண்டவருடைய கரங்களில் இருக்கிறான். ஒவ்வொரு சந்ததியிலும், மதியீனர்களின் ராஜ்ஜியத்தில் அகப்பட்டிருக்கும் மனிதர்களை புத்திமான்களாய் மாற்றும்படி தேவன் தம் கரங்களை நீட்டுகிறார். இரட்சிப்பு மட்டுமே இந்த மாற்றத்தை சாத்தியப்படுத்த முடியும்.*

**2 தீமோத்தேயு 3:15**, கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

*இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவின் பாரம்பரியத்தை அவருக்கு நினைவுபடுத்துகிறார்.*

*சத்தியத்தை அறிகிற அறிவினாலே ஞானத்தை கண்டடைய முடியும், அது இரட்சிப்பை கொண்டு வருகிறதாயிருக்கிறது.*

*இரட்சிப்பே ஞானத்தை கொண்டுவருகிறது.*

*ஒரு தனி மனிதனை மூடன் என்ற நிலையிலிருந்து புதிமானாக்குவது இரட்சிப்பு ஒன்றே.*

*நீங்கள் கிறிஸ்தவனாகும்போது, புத்திமானாகிறீர்கள்.*

*நீங்கள் கிறிஸ்தவனாகும்போது, நீங்கள் மதியீனமாய் இருப்பதை நிறுத்தி விட்டு தேவனுடைய புத்தியுள்ள பிள்ளைகளாகிறீர்கள்.*

*ஞானம் என்பது சுய அறிவு இல்லை. கிரேக்கர்கள், ஞானத்தை ஒரு தத்துவமாக நினைக்கிறார்கள், "சோபோஸ்" (**Sophos**), வாழ்க்கைக்கு சம்பந்தமில்லாத தத்துவங்கள், நடைமுறைக்கு புறம்பான தத்துவங்கள் தான் ஞானம் என்று*

*நினைக்கிறார்கள். ஞானவான்கள் தான் தத்துவங்களை அறிவிப்பார்கள். அவர்கள் அறிவுசார்ந்த, தத்துவவாதிகள். அது கிரேக்க எண்ணம்.*

*எபிரேயர் ஞானத்தை ஒருநாளும் விவரித்ததில்லை. ஆனால், அவர்களுடைய நடத்தைகளில் ஞானம் இருந்தது.*

*நீங்கள் கிறிஸ்தவனாகும்போது உங்கள் சிந்தனை சத்துவத்தில் மாறுதல் ஏற்படுவது மட்டுமல்ல, என்ன தெரிந்து கொண்டீர்கள் என்பதிலும், அதன்மூலம் எப்படி வாழ்க்கை முறையிலே மாற்றம் அடைந்திருக்கிறீர்கள் என்பதுமே வேதம் கூறும் ஞானம்.*

- ➢ *உங்களுக்கு ஆண்டவரை தெரியாது*
- ➢ *நீங்கள் அவரை மறுதலித்தீர்கள்*
- ➢ *நீங்கள் உங்களை தேவனாக நினைத்துக்கொண்டீர்கள்*
- ➢ *நீங்கள் பாவத்தை கேலி செய்தீர்கள்*
- ➢ *உங்கள் கருத்துகளை சொல்லி உங்கள் சமூகத்தை கெடுத்தீர்கள்.*

- ✓ *நீங்கள் கிறிஸ்தவனாகும்போது, தேவனை அறிந்து கொள்வீர்கள்.*
- ✓ *உங்களை ஆராதனை செய்யாமல், தேவனை மட்டுமே தொழுது கொள்வீர்கள்.*
- ✓ *உங்கள் குற்றங்களை ஒப்பு கொள்வீர்ள்.*
- ✓ *அவற்றை கேலியாக எண்ணவில்லை.*
- ✓ *நீங்கள் பேசும்போது தேவனை போல பேசுவீர்கள்.*
- ✓ *மற்றவர்களுக்கு அறிவுறுத்தும்போது, உன்னதமான சத்தியத்தை பேசுவீர்கள்.*

*என்ன ஒரு பெரிய மாற்றம்.*

*நீங்கள் ஒரு புதியுள்ள வாழ்க்கையை வாழுவீர்கள்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வாக்கியத்திலே என்ன சொல்லுகிறார் என்றால், நீங்கள் மூடராக இருந்தீர்கள் ஆனால் கிறிஸ்துவுக்குள் புதிமானாக்கப்பட்டீர்கள். அகவே, கிறிஸ்துவுக்காக புத்திமானாக நடந்து கொள்வீர்கள்.*

*நீங்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே வாழுங்கள்.*

*இந்த உலகம் தாழ்மையாக நடந்து கொள்ளாது. ஒவ்வொருவரும் தங்கள் உரிமைக்காக ஒருவரையொருவர் பீறிக்கொள்ளுகிறார்கள். தாழ்மைக்குரிய அர்த்தத்தை அறிந்துகொள்ளமாட்டார்கள். ஒற்றுமையாக இந்த உலகம் செயல்படாது.*

வேற்றுமையை கொண்டாடும்.

ஏற்றத்தாழ்வுகளை உயர்த்தும்.

வேற்றுமைகளாலும், பிளவுகளினாலும், கருத்து வேறுபாடுகளினாலும் ஒரு சமுதாயத்தை கட்டமைக்கும்.

இந்த உலகத்தால் நேசிக்க முடியாது ஏனென்றால் ஆண்டவருடைய ஜீவன் இல்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

அவரை தவிர உண்மையான அன்பு எங்கும் இல்லை. இந்த உலகம் ஒளியை கண்டடையாது ஏனென்றால் அதுவே இருளான கட்டமைப்பில் தான் இருக்கிறது.

இந்த உலகம் தேவனுடைய ஞானத்தை அறிந்து கொள்ளாது ஏனென்றால் தேவனுடைய ஞானம் மனுஷனிடத்திலிருந்து மறைக்கப்படிருக்கிறது.

**2 தீமோத்தேயு 3:7**, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற

இது நம்பமுடியாதது.

நமக்கு நிறைய தெரியும், ஆனால் தேவனுடைய ஞானத்தைப்பற்றி தெரியாது. மூடனுக்கு தேவனுடைய ஞானத்தை அடைவது எளிதல்ல.

ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் தாழ்மையுடன் இருக்க முடியும்.

ஒற்றுமையாக நடக்க முடியும்.

ஒரு வித்தியாசத்தை காண்பிக்க முடியும்.

அன்பாக நடந்து கொள்ள முடியும்.

ஒளியிலே நடக்க முடியும்.

ஞானத்தோடு நடக்க முடியும்.

பவுல் இதை கண்டிப்பாக வலியுறுத்தி அதன்படி வாழ சொல்லுகிறார்.

அவர் நம்மை சற்று வித்தியாசமாக இருக்கும்படி அழைக்கிறார். இந்த மொத்த உலகத்திற்குள் நெறுக்கப்பட்டிருக்கிறோம். ஆதாலால், நாம் இந்த அடிப்படை காரியங்களுக்குள் திரும்ப வராவிட்டால் நம்மையும் உலகத்தையும் வேறுபடுத்த முடியாத நிலை உருவாகும்.

ஞானத்தோடு நடக்கிற எந்த ஒரு விசுவாசியும் இந்த மூன்று காரியங்களை அறிந்திருக்கிறான்.

1. வாழ்க்கையின் கோட்பாடுகள் - Life’s principles,
2. குறைந்தபட்ச உரிமைகள் - Limited privileges,
3. தேவனுடைய நோக்கம்- Lord’s purposes.

இதை வேறு விதமாக சொல்லவேண்டுமானால்,

தன்னுடைய வாழ்க்கைக்குரிய விதிமுறைகளை அறிந்திருக்கிறான். தேவன் அவனுக்கு என்ன வைத்திருக்கிறார் என்பதையும் அறிந்திருக்கிறான்.

அதை குறித்த நேரத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறான்.

குறிப்பாக, அவன் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் சொல்கிறார் என்பதையும் அவன் அறிந்திருக்கிறான்.

வ **15**, ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து,

ஞானமுள்ளவன், தான் வாழ்வதற்கு ஆண்டவர் கொடுத்த கொள்கைகளை அறிந்திருக்கிறான்.

முதல் வார்த்தை, “ஆனபடியினாலே” அது நம்மை முந்தின வசனத்திற்கு அழைத்து செல்லுகிறது.

அதேபோல, “ஆதலால்”.

வ **14,** ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

இரட்சிப்படைவதற்கான அழைப்பு.

நீங்கள் மரித்தவர்களாயிருந்து உயிரடைந்தவர்களாய், உறக்கத்திலிருந்து தெளிந்தவர்களாய், இருளில் இருந்து இப்பொழுது வெளிச்சத்திற்கு வந்தீர்கள் என்றால் ஞானமாய் நடவுங்கள் என்று பவுல் சொல்லுகிறார்.

வேறு வகையில் சொன்னால், இரட்சிப்பு உங்களுக்கு என்ன செய்திருக்கிறது என்கிற அடிப்படையில் பார்க்க வேண்டும்.

ஏனென்றால் நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் ஆதலால் ஞானத்திலே நடக்க வேண்டும்.

*உடனடியாக சிலர் சொல்லுவார்கள், "இப்போதுதான் இரட்சிக்கப்-பட்டிருக்கிறீர்கள், உங்களுக்கு ஒன்றும் தெரியாத நிலையில் எப்படி ஞானத்திலே நடப்பீர்கள்?"*

*அப்படியானால் நீங்கள் வளர வேண்டாமா?*

*நரைத்தவர்கள் யாவரும் ஞானவான்களா?*

*முந்தைய பழைய கால் புனிதர்கள், வெகு காலத்திற்கு முன்னரே இரட்சிக்கப்பட்டார்களா?*

*நீங்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு நீங்கள் அடைந்த ஞானம் உங்களுடைய முழு வாழ்க்கைக்கும் பொறுப்புணர்வை தந்தாக நினைக்கிறீர்களா?*

*சரியே!*

*இரட்சிக்கப்பட்ட அந்த நொடியே , உங்களுக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிற அந்த ஞானம் உங்களுடைய நடைகளை சரி செய்கிற பொறுப்பை வழங்குகிறது.*

**1 கொரிந்தியர் 1:30** அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக,

*கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த நான்கும் உங்களுக்குரியதாகிவிடும்.*

- *ஞானம்* - Wisdom,
- *நீதி* - Righteousness,
- *பரிசுத்தம்*- Sanctification, *மற்றும்*
- *மீட்பு* - Redemption.

*மீட்புக்கு முன்னானது பரிசுத்தமாகுதல்*

*முதலில் மீட்பு அடுத்து ஞானத்தை பெறுதல் பின்பு நீதிமானாவது பின்னர் பரிசுத்தமாகுதல். அப்படி அல்ல.*

*நீங்கள் இரட்சிக்கப்பட்ட அந்த நொடியிலே ஞானமடைந்து, நீதிமானாய் பிரித்தெடுக்கப்பட்டீர்கள் ஏனென்றால் நீங்கள் மீட்கப்பட்டுவிட்டீர்கள்.*

*இரட்சிக்கப்பட்ட அந்த நொடியில் தேவனுடைய ஞானம் உங்களுக்குள்ளே குடிகொண்டுவிடும், அதற்கு நீங்கள் பொறுப்பாளிகளாவீர்கள்.*

**கொலோசெயர் 2:3,** அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

### ஞானம் மற்றும் அறிவின் பொக்கிஷம் எங்கே இருக்கிறது?

***கிறிஸ்துவுக்குள்!***

**கொலோசெயர் 2:10**, மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

*கிறிஸ்துவுக்குள் நீங்கள் வந்த அந்த நொடியே ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு, ஆகியவை வந்திவிடும். இது இரட்சிப்பின் முழுமையான பரிசாக கிடைக்கும்.*

- *ஞானமில்லாமல் நீங்கள் இரட்சிப்படைய முடியாது.*
- *நீதி இல்லாமல் இரட்சிப்படைய முடியாது.*
- *பரிசுத்தம் இல்லாமல் இரட்சிப்படைய முடியாது.*

*எல்லோரும் மறுபடியும் பிறக்கிறோம் ஆனால், அதை பற்றின ஒரு உணர்வோ அல்லது நினைப்போ இருப்பதில்லை. இயேசுவை விசுவாசிக்க வேண்டும் கொஞ்சம் சிறிய அளவில் ஏதாவது செய்துவிட்டு அவ்வளவுதான் என்று சொல்லி நீதியை பற்றியும் ஞானம் பரிசுத்தத்தை பற்றியும் பிறகு பேசி கொள்ளலாம் என்று நினைத்துவிடுகிறோம்.*

*இல்லை!*

*இவை எல்லாம் ஒரே பொருளுடையவை.*

*கிறிஸ்து நம்மை அதற்கென்று படைத்திருக்கிறார்.*

**தீத்து 2:11-12**, அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். 12. ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

*நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் என்றால், அந்த இரட்சிப்பே உங்களை துன்மார்க்கத்திலிருந்து, உலக இச்சைகளிலிருந்து - தெளிந்தவர்களாய், நீதியுள்ளவர்களாய், தெய்வீகமாய் இருப்பதற்கு போதிக்கும். அவ்வளவு பெரிதான காரியங்களை நீங்கள் பெற்று கொள்வீர்கள்.*

*நீங்கள் மீட்கப்பட்டதால் ஞானத்தை அடைந்தீர்கள் .*

*நீங்கள் அதற்காக ஐந்து, பத்து, நாற்பது வருஷம் காத்திருக்க தேவை இல்லை. அது உங்களுடையது.*

வேதம் சொல்லுகிறது நமக்கு தேவையானது நம்மிடம் இருக்கிறது. நமக்கு வேண்டுமென்றால் இன்னும் அதிகமாகவே இருக்கிறது. வேண்டியவற்றை நாம் பெற்று கொள்ள முடியும்.

**எபேசியர் 1:7-8,** அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. 8. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.

*எந்த ஒரு கிறிஸ்தவனும் தான் செய்கிற காரியத்திற்கு பொறுப்பற்றவனாக இருக்க கூடாது.*

*நீங்களே அதற்கு பொறுப்பு. அது உங்களுக்கு அளிக்கப்ட்டிருக்கிறது.*

**1 யோவான் 2:20,** நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம்பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

**1 யோவான் 2:27,** நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

*நாம் கிறிஸ்துவினால் இரட்சிப்படைந்து ஞானத்தைபெற்று கொண்டோம்.*

*இனி நாம் மதியீனர்கள் அல்லவே.*

*உலக ஞானத்தை அதிகமாய் பெறக்கூடாது என்று நான் சொல்லவில்லை. நாம் கண்டிப்பாக பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*நாம் கிருபையில் வளர வேண்டும்.*

*கர்த்தராகிய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் நாம் வளர வேண்டும்.*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள், இயேசு கிறிஸ்துவைப்போல் மாறுவதில் வளர வேண்டும்.*

*தேவனுடைய ஆவியானவர் நம்மை அவருடைய சாயலாக மாற்ற அனுமதிக்க வேண்டும்.*

*ஞானத்திலே அதிக வளர்ச்சி காணப்பட வேண்டும்.*

*கோட்பாடுகள் மாறாமல் தெய்வீகத்தன்மையில் அதிக வளர்ச்சி வேண்டும்.*

*தேவனுடைய ஆவியானவர் நம்முடைய மனசாட்சியில் கிரியை செய்கிறார். வேதத்திலே உங்களுக்கு நிறைய காரியங்கள் தெரிந்திருக்காது, ஆனாலும் நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது உங்களுக்குள் இருக்கிற ஆவியானவர் பாவத்தை குறித்தும் நீதியை குறித்தும் உணர்த்துவார்.*

*உங்களுக்கு இன்னும் அதிக ஞானம் வேண்டுமா?*

*நீங்கள் இன்னும் அதை தேடினால் அது உங்களுக்கு கிடைக்கும்.*

**நீதிமொழிகள் 9:10,** "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.

*எப்படி நீங்கள் அதிகமாய் பெற முடியும்?*

**யாக்கோபு 1:5-6**, உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். 6. ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

*ஆண்டவர் அதை கொடுப்பார் அவர் ஒன்றையும் அருளாதிருக்கமாட்டார்.*

*நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.*

*அது பெறக்கூடிய வகையில் இருக்கிறது.*

*கேளுங்கள்.*

**கொலோசெயர் 1:28,** எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

*ஆண்டவரிடம் பெற்று கொண்டதை கற்று உங்களை நிரூபியுங்கள்.*

*கற்றுக்கொள்வதினால் ஞானத்தை பெற்று கொள்ளலாம்.*

*ஆதலால், பவுல் சொல்லுகிறார், "அறியாதிருக்காதீர்கள் (Don't claim ignorance)".*




ஞானமாகிய தேவனே உங்களுக்குள் இருக்கிறார், ஆகவே, புறக்கணியாமல் அதிலே நடவுங்கள்.

யுதார்களை பொறுத்தவரை நடத்தல் என்றால் ஏதோ ஒரு தத்துவம் அல்ல. அனுதின நடத்தை, அனுதின முறை, அனுதின வாழ்க்கை என்பது தான் நடத்தல்.

Circumspectly.

வல்லமையான வார்த்தை.

அப்படியென்றால் துல்லியமாக.

துல்லியமாக, கவனமாக, சரியாக.

Circumspect என்றால் எதையும் முழுமையாய், கவனமாய் பார்த்து, என்ன நடக்கிறது என்று எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இந்த உலகத்திலே இருக்கும் போது கண்ணிவெடிகளுக்குள்ளே நடப்பது போல் நாம் நடக்கிறோம். பூந்தோட்டத்தில் இருப்பது போல் நினைத்து கொண்டு அங்கும் இங்கும் திரிய முடியாது. நீங்கள் இருக்கிற இந்த உலகத்தின் அமைப்பு நீங்கள் முழுமையாக, துல்லியமாக, கவனமாக, சரியாக நடக்கும்படி எதிர்பார்க்கிறது.

**மத்தேயு 7:13-14**, "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.
14. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

கதவு ஒடுக்கமாயும் வழி குறிகியதாயும் இருக்கிறது.

எங்கு செல்கிறோம் என்பதை கவனமாய் இருக்க வேண்டும்.

ஒரு புத்தியுள்ள கிறிஸ்தவன் கவனமாய் இருப்பான். ஆண்டவர் நியமித்த பாதையில் உன்னிப்பாய் கவனித்து ஆண்டவர் விதித்த விதிமுறைகளில் சரியாய் நடப்பான். இந்த உலகத்தின் அமைப்பிற்குள் விழமாட்டான்.

**V 15,** ஞானமுள்ளவர்களைப்போலக் **கவனமாய்** **நடந்துகொள்ளப்பார்த்து**

- *உங்களுக்கு ஞானம் இருக்கிறது* - You have the wisdom.
- *நீங்கள் உயிரோடு இருக்கிறீர்கள்* - You are alive.
- *நீங்கள் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்* - You are arisen.
- *நீங்கள் ஒளியில் இருக்கிறீர்கள்* - You are in the light.
- *உங்களிடத்தில் தேவ ஞானம் குடிகொண்டிருக்கிறது* - You have God's wisdom resident.

*ஆகவே அப்படி வாழுங்கள்.*

**பிலிப்பியர் 1:27**, நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

*உங்கள் நடை உங்களுடைய தகுதிக்கு இணையாக இருக்க வேண்டும்.*

**2 பேதுரு 1:5**, இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,

*ஞானத்தோடு நடவுங்கள்.*

**தீத்து 3:3,** ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.

*முந்தி நாமும் அப்படிப்பட்டவர்களாயிருந்தோம், நம்முடைய மதியீனம் நம்மிடத்தில் வெளிப்பட்டது.*

*மதியீனனுடைய வாழ்க்கை:*

- *தேவனுக்கு கீழ்படியமாட்டான்* - He disobeys God.
- *சத்தியத்தை குறித்து வஞ்சிக்கப்படுகிறான்* - He is deceived about the truth.
- *தன்னுடைய இச்சைகளை பூர்த்தி செய்வான்* - He serves his lusts.

- *அவனுடைய சொந்த விருப்பங்களினால் நடத்தப்படுகிறான்* - He's guided by his own desires and his pleasures.
- *தன்னுடைய மகிழ்சிக்காக வாழ்கிறான்* - He lives for pleasure.
- *அக்கிராமத்தில் வாழ்கிறான்* - He lives in evil.
- *பொறாமையுடையவனாயிருக்கிறான்* - He is envy,
- *வெறுக்கிறவனாய்* - He is hateful, and
- *ஒருவரையொருவர் வெறுக்கிறான்* - He hates one another.

**தீத்து 3:4-8,** நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, 5. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். 6. தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, 7. அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். 8. இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

*நாம் நம் வாழ்வை கவனாமாய் வாழும்படி இந்த மாற்றம் அறிவுறுத்துகிறது.*

**தீத்து 3:9-11,** புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும். 10. வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு. 11. அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத்தீர்ப்புடையவனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே.

*ஒரு கிறிஸ்தவனுக்கு, மதியீனனை போல தன்னை கீழ்ப்படித்தி கொள்ளவதற்கு சாக்கு போக்கு சொல்ல இடம் கிடையாது.*

*நீங்கள் சாலோமோனைப்போல சிம்மாசனத்தில் இருப்பவர்கள். நீங்கள் ஞானிகளிலும் ஞானவான்கள்.*

*பாசாங்கு செய்தவனாகிய சவுல் கூட, தன்னுடைய தன்னுடைய குற்றத்தினால் தாவீதினிடத்தில் கெஞ்சினான்.*

**1 சாமுவேல் 26:21**, அப்பொழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றான்.

*2 சாமுவேல் 24, ல், தாவீது தன்னை பெரியவன் என்று நினைத்து கொண்டான். தான் பெரிய ஆள் என்று காண்பிப்பதற்காக தன்னிடத்திலுள்ள ஆட்களை கணக்கு பார்க்க சொன்னான். ஆட்களை இலக்கம் பார்த்து பெரிய நன்மைதிப்பைபெற வேண்டும் என்பதற்காக. ஆதலால், அவன் இலக்கம் பார்த்தான், அவன் இருதயம் பூரித்தது.*

*ஆண்டவர், அவனிருதயத்தில் குற்ற உணர்வை சூடான எண்ணையைப்போல் ஊற்றினார். அது கொழுந்து விட்டு எரிய எரிய ஆரம்பித்தது.*

**2 சாமுவேல் 24:10**, இவ்விதமாய் ஜனங்களை எண்ணினபின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது; அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும், நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்."

*மோசே, அநேகந்தரம் ஆண்டவரை விட்டு விலகின இஸ்ரவேல் ஜனங்களை நோக்கினான்.*

**உபாகமம் 32:6,** விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்களே, இப்படியா கர்த்தருக்குப் பதிலளிக்கிறீர்கள். உன்னை ஆட்கொண்டபிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?

*கிறிஸ்தவர்கள் மதி கெட்டவர்களாய் நடந்து கொள்கிறார்கள்.*

***மதி கெட்டவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று உங்களுக்கு தெரியுமா?***

**a) *தேவனுடைய வார்த்தையை விசுவாசியாமல் இருப்பது* - Not believing the Word of God**

*இரண்டு அப்போஸ்தலர்கள் எம்மாவூருக்கு வழியே நடந்து போனார்கள். அப்போது, அவர்கள் தங்களுடைய ஆண்டவர் மறித்து போனார் என்று அழுது புழம்பி கொண்டிருந்தார்கள் அப்பொழுது இயேசு அவர்கள் பக்கத்தில் தோன்றினார்.*

**லூக்கா 24:25-27,** அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, 26. கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, 27. மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.

*விசுவாசியாமல் மதியீனமாய் நடந்து கொள்வது.*

*அல்லது தேவனுடைய வார்த்தையை விசுவாசியாமல் இருப்பது.*

### b) *கீழ்படியாமை* - Disobedience.

**கலாத்தியர் 3:1,** புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.

*நீங்கள் நன்றாய் ஆரம்பித்து பின்பு உங்களுடைய வேலையில் மூழ்கிவிடுவது.*

*ஆகவே, இப்படியே கீழ்படியாமையால் மதியீனம் அடைவது.*

### c) *தவறான காரியங்களில் விருப்பம் வைப்பது* - Desire for the wrong things.

**1 தீமோத்தேயு 6:10**, பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.

*தவறான காரியங்களில் விருப்பம் வைத்து மதியீனம் அடைவது.*

**யாக்கோபு 3:13-17,** உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். 14. உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால்,

நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். 15. இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. 16. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. 17. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

*ஒரு மதியீனன் அவிசுவாசியாயும், கீழ்படியதவனும், தவறான காரியங்களை விரும்புகிறவனாயும், தவறு செய்கிறவனுமாயிருப்பான்.*

*அநேக கிறிஸ்தவர்களை இப்படி பார்ப்பது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. இது நம்பமுடியவில்லை. ஆண்டவரை தேவனுடைய வார்த்தையின்படி ஏற்று கொள்ளாத கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த புஸ்தகத்தை விசுவாசிக்க மாட்டார்கள். விசுவாசிக்கிறோம் என்று சொல்லுவார்கள். அவர்கள் சொன்னாலும், தேவனுடைய வேத வசனத்தின்படி அவர்களுடைய வாழ்க்கையில் எந்த ஒரு செயல்முறை மாற்றமும் இருப்பதில்லை.*

*ஆண்டவரை தேவனுடைய வார்த்தையின்படி ஏற்று கொள்ளமாட்டார்கள். கீழ்படியாத கிறிஸ்தவர்கள் சிலர் உண்டு, எல்லா கிறிஸ்தவர்களும் கீழ்படிய மாட்டார்கள். இந்த உலகத்தின் காரியங்களை விரும்புகிற கிறிஸ்தவர்களும் உண்டு. சில கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் ஞானம் வெளிப்படுவதில்லை, இதில் எந்த அர்த்தமும் இல்லை என்று பவுல் சொல்லுகிறார்.*

***கிறிஸ்தவர்களாகிய நாம், நமக்கு ஞானம் இருக்கும்போது ஏன் குருடராகவும், அறியாமையிலும், மதியீனமான ஜனங்களாக வாழ வேண்டும்?***

**யோவான் 7:17**, அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.

*உங்களுக்கு நிஜமாகவே தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும் என்றிருந்தால், உங்களுக்கு சந்தேகம் வராது.*

*உங்களுக்கு நிஜமாகவே தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டும் என்றிருந்தால், உங்களுக்கு சந்தேகம் வராது.*

**ரோமர் 16:19**, உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

# *9. ஞானமாய் நடப்போம் - 02*

**எபேசியர் 5:15-21,** ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, 16. நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். 17. ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், **கர்த்தருடைய** சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். 18. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; 19. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் **கர்த்தரைப்** பாடிக் கீர்த்தனம்பண்ணி, 20. நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,

**V 16**, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்



*வேதத்தில் ஒரு அற்புதமான விந்தை என்னவெனில், பரிசுத்த ஆவியானவர் ஞானத்தை குறித்து போதிக்கும் எல்லா இடங்களிலும் தீர்க்கமான வார்த்தைகளை கொண்டு போதிக்கிறார்.*

*கர்த்தர் எல்லா காலங்களுக்கும் அப்பாற்பட்டு ஆளுகை செய்கிறவர். எல்லா காலங்களையும் தீர்க்கமாய் நிர்ணயித்திருக்கிறார்.*

1 **பேதுரு** 1:17 அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.

*நாம் இங்கு பரதேசிகளாய் சஞ்சரிக்கும் காலமளவும் என்று, கர்த்தர் நமக்கு தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி நிர்ணயித்திருக்கிறார் காலத்தை பேதுரு கூறுகிறார்.*

**யோபு 14:14**, மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.

நாம் வாழும் காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் யோபுவிற்கு இருந்தது.

**அப்போஸ்தலர் 20:24**, ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

இந்த காலத்தை தேவனே தீர்மானிக்கிறார்.
தேவன் நமக்கு நாட்களை வரையறுத்து தருகிறார். அந்த நாட்களில் ஓடவேண்டிய ஓட்டத்தையும் குறித்து வைத்திருக்கிறார்.

- குறித்த நேரம்.
- குறித்த ஓட்டம்.
- குறித்த ஊழியம்.

**எபிரெயர் 12:1**, ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

நாம் ஓட வேண்டிய ஓட்டம் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.
இதற்கு துவக்கமும் உண்டு முடிவும் உண்டு.
இதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையும் உண்டு.
பவுல் தமது வாழ்வின் இறுதியில் இவ்வாறு கூறுகிறார்.

**2 தீமோத்தேயு 4:7**, நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

கர்த்தர் நம் வாழ்வின் காலத்தை தார்மீகமாக நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்.
அவருக்கு அதின் தொடக்கமும் தெரியும். முடிவும் தெரியும்.
அவரே இரண்டையும் தீர்மானித்திருக்கிறார்.

**சங்கீதம் 89:46-47,** எதுவரைக்கும், **கர்த்தாவே**! நீர் என்றைக்கும் மறைந்திருப்பீரோ? உமது கோபம் அக்கினியைப்போல எரியுமோ? 47. என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்; மனுபுத்திரர் யாவரையும் வீணாகச் சிருஷ்டிக்கவேண்டியதென்ன?

*காலத்தின் அத்தியாவசியத்தையும், அது நிர்பந்தமானது என்றும் தாவீது அறிந்திருக்கிறார்.*

*அவருடைய நெருக்கத்திலும் இடுக்கத்திலும் வேதனையிலும், தனக்கு நிர்ணயிக்கப்படதை செய்ய தவறுவதாக உணர்ந்தார், அவற்றிலிருந்து தன் கவனம் சிதறுவதை அறிந்திருந்தார்.*

**1 கொரிந்தியர் 7:29**, மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள்போலவும்,

**சங்கீதம் 39:4-5, கர்த்தாவே**, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். 5. இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். (சேலா.)

*கர்த்தாவே என் நாட்களின் அளவு என்னவென்று எனக்கு உணர்த்தும். நான் எவ்வளவு நிலையற்ற பெலவீனன் என்று அறிந்து என் நாட்களை பிரயோஜனப்படுத்துவேன்.*

*15ஆம் வசனத்தில் உள்ள ஞானம், 16ஆம் வசனத்தில் நம்முடைய நாட்களின் அளவை எண்ணுவதற்கு தூண்டுகிறது.*

***ஏன்?***

*நம்முடைய ஞானம் வீணாய்ப்போவதற்கு பிரதான காரணம், நாம் காலத்தை சரியாய் பிரயோஜனப்படுத்தாதது தான்.*

*நாம் பாத்திரவான்களாய் நடப்பது எப்படி என்று தியானிக்கிறோம்.*
*நடத்தல் என்றால் இங்கிருந்து அங்கு நடப்பது அல்ல. நடத்தல் என்பது வாழ்க்கை முறையை குறிக்கும்.*

- *தாழ்மையோடு நடத்தல்*
- *ஒற்றுமையாக நடத்தல்*
- *அன்போடு நடத்தல்*
- *வெளிச்சத்திலே நடத்தல்*
- *ஞானத்தோடு நடத்தல்.*

*காலத்தை பிரயோஜனப்படுத்துவதே அல்லாமல் ஞானத்தில் நடப்பது என்றால் என்னவாக இருக்க முடியும்?*

ஏனெனில், நேரத்தை வீணடிப்பதிலேயே நம்முடைய முழு பெலனும் சக்தியும் கரைந்து விடுகிறது.

கிறிஸ்துவின் நிமித்தம் உங்களை வேண்டுகிறேன்.
நீங்கள் யார் என்பதை உணர்ந்து, காலத்தை ஞானமாய் பயன்படுத்துங்கள்.
ஞானமாய் நடக்கும் கிறிஸ்தவர்கள் மூன்று நிதர்சனங்களை உணர்ந்திருக்கிறார்கள்.

- வாழ்வின் கோட்பாடுகள் - Life principles.
- குறைந்த உரிமைகள்- Limited privileges.
- தேவனுடைய நோக்கங்கள் - Lord's purposes

இவை மிக சாதாரண வாக்கியங்களாக இருந்தாலும். ஆழமான அற்புதமானவை.

## குறைந்தபட்ச உரிமைகள்

கிறிஸ்தவர்களுக்கு உரிமைகள் குறைவா?

ஆம்.

உங்கள் உரிமைகள் குறைவு. ஏனெனில் நாட்கள் பொல்லாதவைகள்.

**V 16**, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்

நம்முடைய உரிமைகளும், நம்முடைய ஜனங்களுக்கென ஒரு எல்லையும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது நாம் ஞானத்தோடு நடக்கவில்லையென்றால், நமக்கு நடப்பதற்கு வேறு நாட்களும் இல்லை. நமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு இப்போதுதான்.

இந்த நொடியை நாம் பிரயோசனப்படுத்த வில்லையென்றால், நாம் இந்த நேரத்தை திரும்பப்பெற முடியாது.

நேரத்தை பிரயோஜனப்படுத்துங்கள்.

நமக்கு கொடுக்கபட்டிருகிற வாய்ப்புகளை (opportunity) பற்றி இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார்.

கிரேக்கத்தில் நேரத்தை குறிப்பிடுவதற்கு இரண்டு வார்த்தைகள் உண்டு.

**Chronos** – க்ரோனோஸ்

**Karios** – கைரோஸ்

இந்த இரண்டு வார்த்தைகளும் இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1 தெசலோனிக்கேயர் 5:1**, சகோதரரே, இவைகள் நடக்குங்காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.


Chronology – கால வரிசை என்னும் வார்த்தை – Chronos க்ரோனோஸ் என்னும் வார்த்தையிலிருந்து வந்தது. வரலாற்றில் நிகழ்ந்தவற்றை வரிசைப்படுத்துவது

Kairos என்றால் சகாப்தம், காலகட்டம், தெய்வீக வாய்ப்பு. தெய்வீகமாக நிர்ணயிக்கப்பட்ட காலகட்டம்.

Chronos என்பது கடிகாரத்தைப்போல நிமிடத்தையும் மணிநேரத்தையும் அளக்கும் அளவு.

ஆனால் இங்கு Kairos பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வாய்ப்புகள் ஏற்படும் வேளையில் அதை ஞானத்தோடு கர்த்தருடைய மகிமைக்கென்று சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்று புரிந்துகொள்ளலாம்.

கிரேக்கர்கள், வாய்ப்பு என்று ஒரு சிலை செய்தார்கள். அதை பண்டைய கிரேக்க நகரம் ஒன்றின் நடுவில் நிறுத்தினர். அந்த சிலை செய்தவர் **Lysippos, Greek sculpture 4 BC** (லிசிப்போஸ் 4 கிமு). அந்த சிலையின் கால்களில் சிறகுகள் இருந்தன. அதன் தலை சுருள் சுருளாக இருந்தது. அதன் முதுகு வழுவழுப்பாய் இருந்தது. அந்த சிலைக்கு கீழ் பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.



**உன்னை வடித்தது யார்?**
லிசிப்போஸ் என்பவர் வடித்தார்.

**உன் பெயர் என்ன?**
என் பெயர் வாய்ப்பு.

**உன் காலில் ஏன் சிறகுகள் வைத்திருக்கிறாய்?**
நான் வேகமாக பறப்பதற்காக.

**ஏன் உன் தலையில் சுருள் சுருளாக வைத்திருக்கிறாய்?**
நான் வரும்போது என்னை பிடித்துக்கொள்வதற்காக.

**ஏன் உன் முதுகு வழுவழுப்பாய் இருக்கிறது?**
நான் சென்ற பின் என்னை யாரும் பிடிக்க முடியாது என்பதற்காக.

**வாய்ப்புகள்.**

ஞானமாய் நடக்கிற விசுவாசி எப்படி இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிந்திருக்கிறான்.

ஞானமாய் நடங்கள் என்று பவுல் 15வது வசனத்தில் கூறுகிறார்.

உடனே அடுத்த வசனத்தில், வாய்ப்புகளை சுதந்தரித்துக்கொள்ளும்படி கூறுகிறார்.

இந்த இரண்டையும் ஏன் பவுல் இணைக்கிறார்?

காலத்தையும் வாய்ப்பைக் காட்டிலும் மனிதன் வேறு எதையும் இவ்வளவு மதியீனமாய் வீணடிப்பது கிடையாது. வாய்ப்பையும் காலத்தையும் வீணடிப்பதுதான் மதியீனத்தில் தலை சிறந்தவை.

விசுவாசிகளின் இதயத்தில் இதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று நம்புகிறேன்.

**சங்கீதம் 90:12**, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

ஞானமே நாட்களை எண்ணும்.

ஞானமே குறைந்த காலத்தை அறியும்.

ஞானமே வாய்ப்பை உருவாக்கும்.

ஞானம் நெருக்கமான பாதையில் நடந்து பாவம் செய்யும் வாய்ப்பை கண்டு, அது மதிகேடு என்று உணர்ந்து அதிலிருந்து விலகும்.

ஞானம் நல்வாய்ப்புகளை கண்டறிந்து அது தேவன் அருளியது என்று உணர்ந்து அவற்றை சுதந்தரித்துக்கொள்ளும்.

**V 16,** நாட்கள் பொல்லாதவைகளானதால்

இவை பொல்லாத காலம், இந்த பொல்லாத காலத்தில் எதையாகிலும் செய்யவேண்டுமானால், வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொதுவாகவே நாம் வாழும் இந்த காலம் பொல்லாதது. நீதிமான்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் மிக சொற்பம். நற்குணங்களை வெளிப்படுத்த

*வாய்ப்புகளும் குறைவு. இந்த பொல்லாத உலகில் அப்படிப்பட்ட வாய்ப்புகள் வரும்போது அதை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.*

*கர்த்தர் தமது நாமத்தை மகிமைப்படுத்தும் ஒரு வாய்ப்பை உங்களுக்கு கொடுத்தால், உடனே அதைபிடித்துக் கொள்ளுங்கள். அந்த வாய்ப்பின் மூலமாய் கிடைக்கப்பெறும் ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருங்கள்.*

*இவ்வளவு ஒரு அருமையான உலகத்தை நமக்கென்று படைத்து, அது எல்லாம் நல்லது என்று கண்ட தேவன், இப்படி இந்த உலகம் சீர் கெட்டிருப்பதைப் பார்த்து எவ்வளவாய் வருந்துவார். ஆதாம் விழுந்ததிலிருந்து, இந்த சீர்கேடு கூடிக்கொண்டே தான் செல்கிறது.*

*அக்கிரமம் நிறைந்த உலகை பார்க்கும்போது அவருக்கு என்ன தோன்றும் என்று நம்மால் கற்பனை செய்ய முடிகிறதா?*

*ஒரு கிறிஸ்தவனுக்கு மிகச்சிறந்த ஒரு வாய்ப்பை கொடுத்து, அதை அவன் தவற விடும்போது எவ்வளவு வேதனையாக இருக்கும்.*

*இந்த பொல்லாத காலத்திலும் பிரயோஜனமானதை செய்யும்படி கர்த்தர் நமக்கு வாய்ப்புகளை கொடுக்கிறார். ஒவ்வொரு நாளும் பிரயோசனமானவற்றை ஒரு சில நிமிடம், ஒரு சில மணி நேரமாவது நாம் செய்யலாமே!*

***கர்த்தருடைய இருதயம் இந்த அக்கரம உலகை கண்டு நொறுங்கிப்போய் இருக்கிறதை காண்கிறீர்களா?***

***இந்த பொல்லாத காலத்தில், கர்த்தர் ஒரு சிறிய வாய்ப்பை கொடுத்தாலும், அவரை கனப்படுத்த மகிமைப்படுத்த அந்த வாய்ப்பை நான் தவறவிடுகிறதில்லை.***

*பொல்லாத நாட்களில் நன்மையை காண்பது அரிதாய் இருக்கிறது. நம்முடைய வாழ்விலும் பொல்லாதவை போர் தொடுப்பதைப்போல இருக்கிறது. ஆனாலும் ஒரேயொரு நன்மையின் வாய்ப்பு வந்தால் அதை விட்டுக்கொடுக்காமல் பிடித்துக்கொள்ள வேண்டும்.*

*இன்றைய கிறிஸ்தவர்களுக்கு நேரடியான ஒரு வார்த்தை. எபேசு பட்டணம் பொல்லாங்கினால் சூழப்பட்டிருந்தபோது எழுதப்பட்ட வார்த்தை.*

**எபேசியர் 4:14** நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

*மாறுபாடான பிரசங்கங்கள் எபேசுவில் உலாவிக்கொண்டிருந்தன. வஞ்சகத்தால் தேவ ஜனங்களை கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தார்கள்.*

*சாத்தான் தனக்கென்று போலி பிரசங்கிமார்களை வைத்திருக்கிறான்.*

*அக்கிரமம் செய்வதில் கெட்டிக்காரர்களை சாத்தான் வைத்திருக்கிறான்.*

*மத போதகம் செய்வதென்று கூறி தங்கள் பொய்களையும் புரட்டுகளையும் கூறி ஜனங்களை கேட்டிற்கு அனுப்புகிறார்கள்.*

**எபேசியர் 4:19,** உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

**எபேசியர் 4:25,** அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.

**எபேசியர் 4:27,** பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

*இது களவானிகளின் நாட்கள்.*

*பொய்யை பிரசங்கித்து பிரஸ்தாபப்படுத்தும் நாட்கள்.*

**எபேசியர் 5:3-4,** மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. 4. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.

*அந்த காலத்தில் பொல்லாங்கான உலகில் இருப்பவர்களுக்கு, காலத்தை பிரயோஜனப்படுத்தும்படி பவுல் அறைகூவல் விடுக்கிறார்.*

*ஒடுக்கமும் துக்கமும் வரவிருக்கும் காலம்.*

*இந்த வார்த்தை எழுதப்பட்ட 100 ஆண்டுகளுக்குள் கிறிஸ்தவர்கள் கம்பங்களில் கட்டிவைக்கப்பட்டு எரிக்கப்பட்டார்கள். சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டார்கள். தங்கள் இஷ்டப்படி கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினார்கள்.*

*இது நடப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன் முதலாம் நூற்றாண்டின் இறுதியில், எபேசு சபைக்கு "ஆதி அன்பை விட்டாய்" என்று யோவான் எழுதினார்.*

மனமாற்றம் நிகழவில்லையெனில் விளக்கு எடுத்துப்போடப்படும். எபேசு பட்டணத்தில் சபையே இல்லாத நிலை வரும்.

## என்ன நடந்தது என்று தெரியுமா?

அவர்கள் மாறவில்லை. அவர்கள் விளக்குத்தண்டு எடுத்துப்போடப்பட்டது. அந்த நகரத்தில் வேறொரு சபை எழும்பவில்லை.

எபேசு சபையினர் நினைத்ததை விட அவர்களுக்கு குறிக்கப்பட்ட காலம் குறைவாய் இருந்தது. அந்த சபை பொல்லாங்கின் பிடியில் வீழ்ந்ததினால் அவர்கள் இல்லாமற்போனார்கள்.

இன்றைக்கு நீங்கள் எபேசுவிற்கு சென்றால் அங்கு ஒன்றையும் காண முடியாது. அங்கு ஒன்றும் இல்லை.

காலம் குறுகியிருந்தது.

நாட்கள் பொல்லாதவையாக இருந்தன.

தாங்கள் வாழ்ந்த காலத்திற்கு சிறையாகிப் போனார்கள்.

துன்பங்கள் வருமென்று அறிந்திருந்தார்கள்.

தம்முடைய நாமத்திற்காக துன்பப்படுவார்கள் என்று இயேசு சொன்னதை அறிந்திருந்தார்கள்.



## அவசரம் அவசியம்!

## *Urgency is necessary!*

இந்த உலகில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு என்ன நடக்குமோ அறியேன்.

சோதனைகள் வந்தாலொழிய நாம் கர்த்தரை இறுகப் பிடிக்க மாட்டோம் என்றால், சோதனைகள் வரட்டும்.

என்ன நடக்கும் என்று நாம் அறியோம்.

பொல்லாங்கான நாட்கள் எதை கொண்டு வரும் என்று நமக்கு தெரியாது.

- ஒருவேளை பொல்லாங்கான நாட்கள் நம்முடைய குறிக்கோள்களை சிதறடிக்கும் மிக மகிழ்ச்சியான நாட்களாககூட தோன்றலாம்.

- *ஒருவேளை இடியமின் சோதனையில் சபை போகிறது போலக்கூட அந்த காலங்கள் வரலாம்.*

*இரத்த சாட்சியாக மரித்தவர்களின் இரத்தமே சபையின் விதையாக இருந்ததை வரலாறு முழுக்க நாம் காண முடியும்.*

*நாம் இந்த உலகத்தால் உறிஞ்சப்பட்டு நன்மை தீமை வேறுபாட்டின் அடையாளங்கள் கூட மங்கிப்போயிருக்கும் காலத்தில் வாழ்கிறோம்.*

*என் இதயத்தில் இதன் அவசரம் பெருகுகிறது.*

*எனக்கு எத்தனை நாள் தேவன் கொடுத்திருக்கிறார் என்பது தெரியாது. அவர் கொடுத்த காலம் முழுவதையும் அவருக்கு கொடுப்பேன்.*

*இயேசு எப்போது வருவார் என்பதை அறியோம். ஒரு நாள் வானங்களை கிழித்து இறங்குவார். தம்முடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார்.*

*அந்த நாள் வர காத்திருக்கிறேன். ஆனாலும் அந்த நாள் வரும்வரை ஒரு அவசரம் நம் உள்ளத்தை பட்சிக்கட்டும்.*

*இந்த உலகம் முன்னேறவில்லை அழிந்துகொண்டிருக்கிறது.*

**2 தீமோத்தேயு 3:13**, பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.

*தங்கள் மனம்போல் பாவ இச்சைக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் என்று* ***ரோமர் 1****ல் கூறுகிறார்.*

*காலத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்.*

Redeem *எனும் வார்த்தை கிரேக்க மொழியில் "உங்களுக்கென பற்றிக்கொள்ளுதல்" என்று பொருள்.*

*காலத்தை உங்கள் நலனுக்கு பயன்படுத்துங்கள்.*

*உங்களுக்கென சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.*

*காலத்தை பிரயோஜனப்படுத்தும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.*

- *குறுகலான பாதையில் நடப்போம்*
- *ஆராய்ந்து நடப்போம்.*
- *சரியாக நடப்போம்.*

- நேரத்தையும் வாய்ப்பையும் முற்றிலும் பயன்படுத்துவோம்.
- கர்த்தர் ஆசீர்வாதங்களை அனுப்புவார்.

தேவனுக்கு மகிமையுண்டாக நேரத்தை பயன்படுத்துங்கள். ஒவ்வொரு நாளும் தீமையை விட்டு விலகவும், நீதியை செய்யவும் கர்த்தர் வாய்ப்புகள் கொடுக்கிறார்.

நாம் சுதந்தரித்துக்கொள்ளும்படி ஒரு பதக்கத்தை கர்த்தர் நம்முன் வைத்திருக்கிறார். சிலர் ஜெபிப்பார்கள், வேதம் வாசிப்பார்கள். ஆனால் தங்கள் அருகில் உள்ளவர்களிடத்தில் இயேசுவை குறித்து சொல்ல மாட்டார்கள். பலனில்லாமல் வாய்ப்பை தவறவிடுபவன் தலை சிறந்த மூடன் எனலாம்.

**கலாத்தியர் 6:10**, ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்.

வாய்ப்பு இருக்கும்போது அதை பற்றிக்கொள்ள வேண்டும்.

அப்படியானால் நமக்கு தனிப்பட்ட நேரம் வேண்டாமா?

எத்தனை வருடமாக கர்த்தரிடத்தில் நேரம் செலவழிப்பேன் என முடிவு செய்தீர்கள்.

என்றாவது அப்படி நடந்ததுண்டா?

இல்லாவிட்டால், வாய்ப்புகளுக்கு அடுத்து வாய்ப்புகளை தவறவிட்டீர்களா?

குடும்பத்தோடு நேரம் செலவழிக்க வேண்டாமா?

நீங்கள் தேவனுக்காக செலுத்த வேண்டிய நேரத்தை உங்கள் கணவனுக்கோ மனைவிக்கோ எப்படி கொடுக்க முடியும்?




பிள்ளைகளோடு நேரம் செலவழிக்க வேண்டாமா?

பிள்ளைகள் வளர்ந்து அவரவர் வேலைக்கு சென்றுவிடுவார்கள்.

தேவ ராஜ்ஜியத்திற்கு நம் பங்கு என்ன?

என்ன செய்திருக்கிறோம்?

என்ன கொடுத்திருக்கிறோம்?

காலம் இதைக்குறித்து என்ன சொல்லும்?

உங்கள் ஊழியங்கள் என்னவாயிற்று?

தேவனுக்காக பயன்படுத்த வேண்டும் என்று வைத்திருந்த ஆவியின் வரங்கள் என்னவாயிற்று?

கொழுத்த இந்த சமுதாயம் நம்மை உறங்க வைத்துக்கொண்டிருக்கிறது.

எப்படி காலம் நித்தியத்துக்கடுத்ததோ அப்படியே வாய்ப்பு காலத்துக்கடுத்தது.

நம் கைகளில் பெறக்கூடிய நித்தியம் இந்த நிமிடம்தான்.

நீங்கள் கடந்த காலத்தில் வாழ முடியாது

எதிர்காலத்தில் வாழ முடியாது.

இந்த நிமிடம் மட்டுமே அவ்வளவுதான்.

நம் கரங்களில் வாய்ப்பு இருக்கிறது. இதுவே நம் கரங்களில் பெறக்கூடிய நித்தியமாகும்.

நான் இந்த நேரத்தை சரியாக பயன்படுத்தும்போது, நித்தியம் என் கைகளில் கொடுக்கப்படுகிறது.

"There is a tide in the affairs of men, which taken at its ebb, leads on to fortune. Omitted, all the voyage of their life is drown in the shallows and miseries of life." **Shakespeare**

"There is in the midst of every great battle a ten-to-fifteen-minute time period that is the crucial point. Take that period and you win the battle. Loose it and you will be defeated." **Napoleon**.

ஒவ்வொரு போரின் மத்தியிலும் மிக முக்கியமான பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் இருக்கும். அந்த நிமிடங்களை நீங்கள் சரியாக பயன்படுத்தினால், வெற்றி உங்களுடையதே. அதை இழந்தால் உங்களுக்கு தோல்வி நிச்சயமே - **மாவீரன் நெப்போலியன் போனபார்ட்**.

அனேக வேத வசனங்கள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள குறுகிய உரிமைகளையும் காலத்தையும் குறித்து எச்சரிக்கின்றன.

**நோவாவும்** அவன் குடும்பமும் பேழைக்குள் சென்றபோது **கதவு அடைக்கப்பட்டது**. **தேவன் கதவை அடைத்தார்**. வாய்ப்பு கடந்துவிட்டது.

விளக்குக்கு எண்ணெய் கொண்டுவராத **கன்னிகைகள்** வருவற்குள் கதவு அடைக்கப்பட்டது. தாமதம். திருமண விருந்து இந்த கன்னிகைகள் இல்லாமலேயே நடக்கத்தான் செய்தது. இயேசு கிறிஸ்துவின் வார்த்தை "ஒருவனும் ஊழியம் செய்யக்கூடாத காரிருள் வருகிறது".

நம் ஆண்டவர் இந்த ஜனங்களை பார்த்து சொல்கிறார், "உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது" என்கிறார்.

இந்த காலத்து சபைகளுக்கு கர்த்தர் சொல்லுகிறார், "உங்கள் விளக்குத்தண்டை எடுத்துப்போடுவேன்".

எகிப்திலிருந்து மோசேயின் மூலமாய் வரவழைத்து, ஏசாயா வரை அநேக தீர்க்கதரிசிகளை கொண்டு, **இஸ்ரவேல்** தேசத்தை வருடா வருடம், நாளுக்கு நாள், காலத்துக்கு காலம், அவர்கள் தங்கள் முதுகை தேவனுக்கு காட்டும்வரை அவர்களை அழைத்தார். ஆனால் அவர்களோ வணங்கா கழுத்துள்ளவர்களாய் கடின இருதயமுள்ளவர்களாய் தேவனுக்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தருடைய இருதயம் நொறுங்கினது. ஆகவே இயேசு எருசலேமை கண்டு "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று." என்று கண்ணீர் வடிக்கிறார்.

**யூதாசை** போல் வாய்ப்பை தவற விட்டவர்களை நாம் பார்க்க முடியாது. மூன்றரை ஆண்டுகள் நீதியின் சூரியன், மகிமையின் தேவன், பிதாவின் ஒரே சுதனான இயேசுவோடு இருந்தும் தன் வாழ்வை மாய்த்துக்கொண்டார். என்ன ஒரு அவலம், எவ்வளவு அருமையான வாய்ப்பை தவறவிட்டார்.

பழைய ஏற்பாடு

**1 இராஜாக்கள் 20:38-40**, 38. அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி போய், தன் முகத்தின்மேல் சாம்பலைப்போட்டு, வேஷமாறினவனாய் வழியிலே ராஜாவுக்காகக் காத்திருந்தான். 39. ராஜா அவ்வழியாய் வருகிறபோது, இவன் ராஜாவைப்பார்த்துக் கூப்பிட்டு: உமது அடியான் யுத்தத்தில் நின்றபோது, ஒருவன் விலகி, என்னிடத்தில் ஒருவனைக் கொண்டுவந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாயிருக்கும்,

அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் என்றான். 40. ஆனாலும் உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான் என்றான். இஸ்ரவேலின் ராஜா அவனைப் பார்த்து: நீ சொன்ன தீர்ப்பின்படியே ஆகும் என்றான்.

*ஒரு ராஜா கைதி ஒருவனை மற்றவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு செல்கிறான். கைதியை பாதுகாக்க வேண்டியவன் அங்கும் இங்கும் வேலையை இருந்தபோது, கைதியோ தப்பி ஓடி விட்டான். தம்பித்த கைதிக்கு பதிலாக தப்பிக்க விட்டவன் தன் ஜீவனை கொடுக்க வேண்டும்.*

*அங்கும் இங்கும் வேலையாய் இருந்தபோது?*

*அது என்ன அங்கும் இங்கும் வேலை?*

*இது எவ்வளவு பெரிய மூடத்தனம், எப்படி ஒருவனை இப்படி தப்பிக்க விட முடியும்?*

***எப்பொழுது தான் வேதம் வாசிக்க தொடங்குவீர்கள்?***

***எப்பொழுது தான் பிரசங்கிக்க தொடங்குவீர்கள்?***

***எப்பொழுதுதான் ஜெபிக்க தொடங்குவீர்கள்?***

***எப்பொழுதுதான் கிறிஸ்துவை அறிவிப்பீர்கள்?***

***எப்பொழுதுதான் உங்கள் வரங்களை செயல்படுத்துவீர்கள்?***

*எனக்கு கொடுத்த எல்லாவற்றையும் கர்த்தருடைய மகிமைக்காக பயன்படுத்த வாஞ்சிக்கிறேன்.*

*எனக்கு அவர் கொடுத்த ஒவ்வொரு நொடியையும் அவருக்கென்று செலவழிக்க விரும்புகிறேன். ஏனெனில் ஒவ்வொரு நொடியும் அவருடைய கிருபையினால் அவர் கொடுத்தார்.*

*கர்த்தர் என்னை பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்கும் அழைத்தால் எனக்கு அவர் கொடுக்கிற எல்லா தருணங்களையும் அதற்கென்று பயன்படுத்துவேன்.*

**ரோமர் 13:11**, நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது.

*நாம் கர்த்தருடைய வருகைக்கு மிக சமீபமாக நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.*

### நமக்கு குறைந்தபட்ச காலமே இருக்கிறது என்று உணருகிறீர்களா?

தேவனுடைய கோட்பாடுகளின்படி நமக்கு இருக்கிற குறைந்த காலத்தில் வாழ வேண்டும்.

விலை உயர்ந்த பொன் ஆபரணங்களை குப்பையில் எறிகிறவன் மூடன்.

பணத்தை வீணடிப்பவன் மூடன்.

நேரத்தை வீணடிப்பவன் பெரிய மூடன்.

நாம் ஜெயிப்பதற்கென்று ஒரு உலகமே இருக்கிறது.

நாம் கட்டுவதற்கென்று ஒரு சபை இருக்கிறது.

நாம் மகிமைப்படுத்த ஒரு தேவன் இருக்கிறார்.

வீணான காரியங்களுக்கு நமக்கு நேரம் இல்லை.

**Philip Melanchthon** என்ற மகா மனிதர், தான் வீணடித்த நேரங்களை ஒரு குறிப்பில் எழுதிக்கொண்டே வருவாராம். ஒவ்வொரு நாளும் தான் வீணடித்த நேரத்திற்காக தேவனிடம் மனம்வருந்தி மன்னிப்பு கேட்பாராம். ஆகவே தான் தேவன் அவரை மேன்மையாக உபயோகித்தார்.

ஆகவே ஞானத்தில் நடக்கிற விசுவாசி, தனக்கன்று உள்ள கோட்பாட்டையும் தனக்கு உள்ள குறைந்த காலத்தையும் அறிந்திருக்கிறான்.

### தேவனுடைய நோக்கங்கள் / திட்டங்கள் – *Lord's Purposes*

**V 17,** ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

நீங்கள் காலத்தை பிரயோஜனப்படுத்த வேண்டும்.

ஞானத்தோடு நடக்க வேண்டும்.

காலம் பொல்லாதவைகளாக இருக்கிறது.

ஆகவே மதியற்றவர்களாய் இராதிருங்கள்.

மதியற்றவன் பதறுவான்.

ஞானவான் தேவ திட்டம் என்ன என்பதை அறிந்துகொள்வான்.

*உங்கள் இருதயத்தில் ஒரு அவசரம் இருந்தாலும், அந்த அவசர எண்ணத்தை தேவன் மூலமாக உணர வேண்டும்.*

*அவசரத்தில் எதையாகிலும் செய்துவிட கூடாது.*

*வாழ்க்கை கோட்பாடுகள், கொடுக்கப்பட்ட குறைந்த காலம் ஆகியவற்றை தேவ திட்டத்தோடு இணைத்து செயல்பட வேண்டும்.*

*நல்லவையாக தோன்றினாலும், அர்த்தமில்லாத காரியங்களை செய்ய வேண்டியதில்லை.*

*தேவ வார்த்தையை போதித்து கர்த்தருக்காக ஜனங்களை ஜெயிக்க வேண்டும்.*

*அவசரத்தில் செய்கிறவர்கள் எதையும் சாதிப்பதில்லை. ஆனால் தெளிந்த புத்தியோடும் திட்டத்தோடும் கர்த்தருடைய சித்தத்தை செயல்படுத்துபவர்கள் அதிக காரியங்களை சாதிக்கிறார்கள்.*

*புத்தியில்லாதவர்களாய் இராதீர்கள்.*

*மதியீனராய் இராதீர்கள்.*

*மதியீனன் தேவ திட்டத்திற்கு வெளியே செயல்படுகிறான்.*

*ஆகவே தேவ திட்டம் என்ன என்பதை அறிந்துகொள்ளுங்கள்.*

### *தேவ திட்டத்தை எப்படி அறிவது?*

*தேவன் உங்களுக்கு ஒரு திட்டத்தை வைத்திருந்தால், அதை நிச்சயமாக தெரிவிப்பார்.*

*நீங்கள் புரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக தெரிவிப்பார்.*

**1 தீமோத்தேயு 2:4**, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

God wants me to be saved.
*நான் இரட்சிக்கப்படும்படி தேவன் வாஞ்சிக்கிறார்.*

**V 17-18,** 17. ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், **கர்த்தருடைய** சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். 18. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து;

*நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவன் வாஞ்சிக்கிறார்.*

*நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரம்பியிருக்கும்படி அவர் விரும்புகிறார்.*

**1 தெசலோனிக்கேயர் 4:3**, நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,

- *இரட்சிக்கப்படவேண்டும்* - Saved
- *ஆவியில் நிரம்பவேண்டும்* - Spirit filled,
- *பரிசுத்தப்படவேண்டும்* - Sanctified.

**1 பேதுரு 2:13-17**, நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் **கர்த்தர்**நிமித்தம் கீழ்ப்படியுங்கள். 14. மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். 15. நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது 16. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். 17. எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.

*ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை வாழுங்கள்*

**1 பேதுரு 4:19,** ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

*கர்த்தருடைய திட்டத்தின்படி பாடனுபவியுங்கள்.*

உங்களுக்கு தேவனுடைய திட்டம் என்ன?

- *இரட்சிக்கப்படவேண்டும்* - Saved
- *ஆவியில் நிரம்பவேண்டும்* - Spirit filled,
- *பரிசுத்தப்படவேண்டும்* – Sanctified
- *ஒப்புக்கொடுக்க வேண்டும்*
- *பாடநுபவிக்க வேண்டும்*

**1 தெசலோனிக்கேயர் 5:18**, எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

- இரட்சிக்கப்படவேண்டும் - Saved
- ஆவியில் நிரம்பவேண்டும் - Spirit filled,
- பரிசுத்தப்படவேண்டும் – Sanctified
- ஒப்புக்கொடுக்க வேண்டும்
- பாடநுபவிக்க வேண்டும்
- எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ்செலுத்த வேண்டும்

இப்படிப்பட்ட வாழ்க்கை வாழும்போது, வேதம் என்ன வாக்குத்தத்தம் கூறுகிறது?

"**கர்த்தரிடத்தில்** மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்."

இந்த ஆறு காரியங்களையும் நீங்கள் செய்து அவரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இருக்கும்போது, தேவன் உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை அருள்செய்வார்.

தேவ திட்டத்தை அறிந்திருக்கும்போது, காலத்தையும் வாய்ப்பையும் கருத்தில் கொண்டு அவருடைய கோட்பாடுகளின்படி கீழ்ப்படிய வேண்டும். அப்படி வாழும்போது உங்கள் வாழ்க்கை நிச்சயமாக பெரிய வித்தியாசத்தை உண்டுபண்ணும்.

**இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு யார் தெரியுமா?**

இயேசு கிறிஸ்து தான்.

இயேசு கிறிஸ்து எப்போதுமே தெய்வீக கோட்பாடுகளின்படி தன வாழ்க்கையை வாழ்ந்தார்.

**யோவான் 5:19**, அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.

தனக்கு கொடுக்கப்பட்ட குறைந்தபட்ச உரிமைகளை கொண்டு இவ்வுலகில் எல்லாவற்றையும் செய்தார்.

*அநேக முறை, "என் வேளை இன்னும் வரவில்லை" என்று கூறினார்.*

*எப்போதுமே தேவ திட்டத்தின்படி செய்தார்.*

*அவருடைய கோட்பாடு என்ன?*

*நீதியின் பாதை.*

*காலத்தை குறித்து எப்படி காரியமாய் இருந்தார்?*

*தமது பாதையை அறிந்திருந்தார். தமக்கு கொடுக்கப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொண்டார். ஆனாலும் அவர் அவசரப்பட்டதாக நாம் காண முடியாது.*

*தீர்மானமான வாழ்க்கை வாழ்ந்தார், ஆனாலும் ஏற்ற வேளையில் தேவையில் உள்ளவர்களை சந்தித்தார்.*

*இயேசுவே நமக்கு சிறந்த முன் உதாரணம். ஞானமாக நடக்கவேண்டுமானால் அவரைப்போல நடக்க வேண்டும்.*

# *10. கிறிஸ்தவ குடும்பம் – Christian Home*

# 10. கிறிஸ்தவ குடும்பம்

# 10. கிறிஸ்தவ குடும்பம்

# 10. கிறிஸ்தவ குடும்பம்

# 11. புதிய செயல்திட்டம் - New Priorities

**2 கொரிந்தியர் 5:18-21,** இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். 20. ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். 21. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

சபையிலும் ஊழியத்திலும் நாம் அநேக பொறுப்புகளை ஏற்கிறோம். வித்தியாசமான வெவ்வேறு பொறுப்புகள் நம்மை நோக்கி வருகின்றன.

இவைகளில் நாம் எந்த காரியத்திற்கு முதன்மை அளிக்க வேண்டும் என்பதில் குழப்பமடைகிறோம்.

பாவிகள் தேவனிடத்தில் ஒப்புரவாக முடியும் என்று நாம் அறிவிக்கிறோம்.

இதை அறிவிப்பதற்காகவே நாம் இந்த உலகில் இருக்கிறோம். மற்றவை எல்லாம், பரலோகில் இன்னும் மேன்மையாக நமக்கு கிடைக்கும்.

பரலோகில் இன்னும் பரிசுத்தமான ஐக்கியம் நமக்கு உண்டு, இன்னும் பரிசுத்த ஆராதனை உண்டு, இன்னும் பரிசுத்தமான வாழ்க்கை நமக்கு உண்டு, இங்கு இருப்பதில் எல்லாவற்றிலும் மேன்மையானவை பரலோகில் உண்டு. இந்த உலகில் நாம் இருப்பதற்கு ஒரே காரணம், நமக்கு கொடுக்கப்பட்ட இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியம் தான்.

இந்த மண்ணில் பிறந்த அனைவருமே பாவிகள் என்றே வேதம் கூறுகிறது. குணத்தின் அடிப்படையிலும் சரி, செய்கைகளின் அடிப்படையிலும் சரி பாவிகள் தான். ஆகவே ஜனங்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிறார்கள்.

பாவம் கொண்டு வந்த இந்த பிரிவினை, தேவனோடு ஜனங்கள் ஐக்கியமாய் வாழ்வதற்கு தடையாக இருக்கிறது. ஏனெனில், தேவன் மிகவும் பரிசுத்தராய் இருக்கிறார், பாவிகள் யாரும் சேரக்கூடாத பரிசுத்தராய் இருக்கிறார். இந்த பரிசுத்த தேவன் பாவிகளை தண்டிக்கவும் நியாயந்தீர்க்கவும் தான் முடியும்.

ஆகவே உலகில் உள்ள வைரஸ்களில் மிக கொடிய வைரஸ் கொரோனா வைரஸோ அல்லது HIV வைரஸோ அல்ல, **பாவம்** எனும் மாபெரும் வைரஸ் தான்.

HIV வைரஸ் போல இந்த பாவம் நித்தியத்திற்கு எல்லாவற்றையும் அழித்துவிடும்.

இந்த கொடிய பாவ வைரஸிற்கு ஒரு மருந்து உண்டு.

தேவன் தாமே அந்த கொடிய பாவ நோய்க்கொள்ளியை நமக்காக ஏற்படுத்தி, நாம் தம்மோடு ஒப்புரவாக வழிவகை செய்திருக்கிறார்.

நற்செய்தி என்னவெனில், தேவனோடு ஒப்புரவாகுதலினால், அவருடைய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து நித்தியத்திற்கும் விடுவிக்கப்பட்டுவிட்டோம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறுகிய வேத பகுதியில் மாத்திரம் "ஒப்புரவாகுதல்" என்கிற வார்த்தை ஐந்துமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்புரவாகுதல் என்றால், மனிதனும் கடவுளும் இணைந்து இருப்பது.

இந்த நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கவும், அறிவிப்பதற்கு கற்றுக்கொடுக்கவும் தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

இதை செய்வதற்கே இந்த உலகத்திற்குள் நாம் செல்கிறோம்.

இதையே எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்கிறோம்.

இதுவே அன்பின் கட்டளையின் சாராம்சம்.

சத்துரு எதையாகிலும் கெடுக்க நினைத்தால், மிக முக்கியமாக முதலாவதாக, சபையின் இந்த புரிதலைத்தான் குறிவைத்து தாக்குகிறான்.

இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார் என்று தெரிந்தவர்களுக்கு, அவர் மரணம் நமக்கு என்னென்ன கொடுத்தது என்று அறியாமலிருக்கிறார்கள்.

நமது கடமை, குறிக்கோள் மனிதர்களை தேவனிடத்தில் ஒப்புரவாக்குவது.

இதையே நாம் ஒப்புரவாக்குதலின் ஊழியமாக ஒப்புரவாகுதலின் வார்த்தையை கொண்டு பிரசங்கிக்கிறோம்.

### ஒப்புரவாகுதலின் வார்த்தை என்ன?

இது நமது வேலை.

நமது பணி.

நமது கடமை.

நாம் சத்தியத்தை அறிந்திருக்கிறோம். இந்த உலகில் நாம் வாழ்வதற்கு ஒரே காரணம், தேவனோடு பாவிகள் ஒப்புரவாகக் கூடும் என்று அறிவிப்பதற்கு. நம்பிக்கையற்ற அக்கிரமக்காரருக்கும் பரிசுத்த தேவனுக்கும் உள்ள பகையை நீக்க முடியும். இதுவே நமது செய்தி.

வீழ்ந்துபோன மனிதனுடைய பார்வையில், சீர்கெட்டு சேற்றிலிருக்கும் மனிதன் இப்படி ஒரு பரிசுத்த தேவனிடம் ஒப்புரவாகவே முடியாது என்றே தோன்றும்.

இந்த ஒப்புரவாகுதல் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டது. ஏனெனில், வீழ்ந்துபோன பொது ஒப்புரவாகுதலுக்கான அறிகுறியே இல்லாமல் இருந்தது.

இந்த ஒப்புரவாகுதல் எந்த அளவுக்கு கிரகிக்க முடியாததோ, அதினும் கிரகிக்க முடியாதது என்னவென்றால், எப்படி ஒருவரும் சேரக்கூடாத பரிசுத்த தேவன் பாவிகளாகிய நம்மோடு ஐக்கியமாய் இருந்து, தம்முடைய பரிசுத்தத்தை குறைத்துக் கொள்ளாமல் இருக்க முடியும் என்பதே. இதுவே சத்தியம், இதுவே நாம் பிரசங்கிக்கும் ஒப்புரவாகுதலின் வார்த்தை.

தேவனோடு ஒப்புரவாகுவதற்கு வழி உண்டு.

அந்த வழியை பிரகடனப்படுத்தும் பணியை கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். சபை முக்கியமாக உணர்ந்துகொள்ள வேண்டிய செய்தி, இந்த ஒப்புரவாகுதலின் செய்தி தான்.

கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் நேரடியாக நமக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியம், இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியம் தான்.

### எப்படி பாவிகள் தேவனோடு ஒப்புரவாக முடியும்?

#### 1. தேவனுடைய சித்தத்தின்படி ஒப்புரவாகுதல்

**V 18,** "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி."

**V 19,** "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி."

**V 20,** "தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல"




இவை யாவும் இந்த ஒப்புறவாகுதல் தேவனாலே உண்டாயிருக்கிறது என்று நமக்கு அறிவிக்கிறது.

**V 17**, இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

நம்மீது கர்த்தர் கொண்ட அன்பே கிறிஸ்துவை சிலுவையில் நமக்காக பலியாக ஒப்புக்கொடுத்தது.

**V 14-15**, கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; 15. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

இந்த திட்டம் தேவனிடத்திலிருந்து வந்தது.

ஒப்புரவாகுதல் தேவனுடைய ஒரு குணாதிசயம். நம் கர்த்தர் ஒப்புரவாக்கும் கர்த்தர்.

கொரிந்து பட்டணத்தார் பற்பல தெய்வங்களை வணங்கி வந்தனர். இந்த தெய்வங்கள் ஒவ்வொன்றையும் பிரியப்படுத்துவதற்கு குளிர்விப்பதற்கு ஜனங்கள்

*எதையாகிலும் செய்ய வேண்டியிருந்தது. மோலேக்கு என்னும் தெய்வத்திற்கு ஜனங்களை அக்கினியில் கடக்க செய்தனர். அந்த தெய்வத்திற்கு விருப்பப்பட்ட பலி கொடுக்கவில்லை என்றால், அந்த தெய்வம் கோபித்துக்கொள்ளும்.*

*எலியா தீர்க்கதரிசி பாகல்களின் தீர்க்கதரிசிகளை பார்த்து உங்கள் தெய்வம் தூங்குகிறதா, இல்லை விடுமுறைக்கு சென்றுவிட்டதா என்று கேலி செய்தார்.*

*இந்த தெய்வங்கள் யாவும் நயங்காட்டும் ஆவியினால் வஞ்சகத்தில் விழச் செய்கிறவை; அவை மாறுபாட்டின் தெய்வங்கள்.*

*இப்படிப்பட்ட மாறுபட்ட வஞ்சக தெய்வங்களுக்கு மத்தியில், நம்முடைய கர்த்தராகிய ஆண்டவரோ ஜனங்களை நேசித்து காப்பாற்றுகிற ஆண்டவராய் இருக்கிறார். இந்த குணாதிசயம், இயேசு கிறிஸ்துவில் பரிபூரணமாய் விளங்கினது.*

*கர்த்தர்* **ஆதியாகமம் 3:8-9** *ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும் ஏவாளையும் தேடி "எங்கே இருக்கிறாய்?" என்று கேட்ட நாள் தொடங்கி பாவிகளை காப்பாற்றும்படி கர்த்தர் அவர்களை தேடிக்கொண்டே இருக்கிறார்.*

*கர்த்தர் ஒப்புரவாகும்படி தேடுகிறார்.*

*ஒப்புரவாகுவதற்கு அவர் தயங்குவதில்லை.*

*ஒப்புரவாகுவதற்கு அவர் எதிரானவர் அல்ல.*

*மீட்பதும் காப்பாற்றுவதும் அவருடைய பண்பு.*

**எசேக்கியல் 34:16**, "நான் காணாமற்போனதைத்தேடி துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்; நியாயத்துக்குத்தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன்."

*மீட்பது அவர் குணம்.*

*கர்த்தர் மீட்பதற்கு தயங்குகிறவர் அல்ல, யாரும் அவரிடத்தில் வந்து கேட்க வேண்டியதும் அல்ல, இயற்கையாகவே அவருடைய குணம் ஜனங்களை மீட்பதுதான்.*

*நிச்சயமாக கொஞ்சம்கூட நம் கர்த்தர் ஒப்புரவாகுவதர்கு தயங்குவதில்லை. நம் கர்த்தருடைய இயற்கை குணமே மீட்பராக இருப்பது தான்.*

**2 நாளாகமம் 36:15-16**, அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத்

தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கனெவே அனுப்பினார். 16. ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று.

*கர்த்தர் கெஞ்சி கெஞ்சி கேட்கிறார், நாம் நிராகரிக்கும்போதும் இறுதிமட்டும் கேட்கிறார்.*

*புதிய ஏற்பாட்டிற்கு வரும்போது, லூக்காவும் இதே குணத்தை வெளிப்படுத்துகிறார். பிதாவாகிய தேவனின் பரிபூரண தற்சொரூபமாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் கர்த்தருடைய மீட்கும் குணத்தை வெளிப்படுத்துகிறார்.*

**லூக்கா 19:1-5,** அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில், 2. ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், 3. இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், 4. அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். 5. இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.

*இந்த குணத்தை, தம்மை தேடி வந்த சகேயுவினிடத்தில் கர்த்தர் வெளிப்படுத்து-கிறார். சகேயு தம்மால் கூடுமானதில் சிறந்ததை செய்தார். ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவை தேடினார்.*

*அந்நேரமே, இயேசு சகேயுவை தேடினார். சகேயு சீக்கிரமாய் இறங்கி வந்து இயேசுவை தம்முடைய வீட்டிற்குள் ஏற்றுக்கொண்டார்.*

*ஜனங்கள் முறுமுறுக்கத் தொடங்கினர்.*

**லூக்கா 19:7-10,** அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள். 8. சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். 9.

இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. 10. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்."

*கர்த்தருடைய குணம் இங்கு வெளிப்படுவதை நாம் காண முடியும்.*

*இரட்சிப்பு வெளிப்படும்படியாக கர்த்தர் தோன்றினார்.*

*கர்த்தருடைய குணமே ஜனங்களை தேடி ரட்சிப்பதுதான்.*

*லூக்கா **15**ல் மூன்று உவமைகளை நாம் பார்க்கிறோம்.*

- *காணாமல் போன ஆட்டின் உவமை*
- *காணாமல் போன காசு*
- *காணாமல் போன இரண்டு குமாரர்.*

*நாம் வழக்கமாக காணாமல் போன ஒரு குமாரனை குறித்தே தியானிப்போம். ஆனால் அங்கு காணாமல் போனது இரண்டு குமாரரும் தான்.*

***காணாமல் போன ஆடு***

**லூக்கா 15:3-7**, அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது: 4. உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ? 5. கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு, 6. வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா? 7. அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

*பாவிகள் மனந்திரும்பும்போது பரலோகம் மகிழ்ந்திருக்கும்.*

*ஆடு கண்டுபிடிக்கப்பட்டபோது மிகுந்த சந்தோசம் உண்டாயிற்று.*

**காணாமல் போன காசு.**

**லூக்கா 15:8-10** அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? 9. கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து: காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? 10. அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

*காணாமல் போன காசு கண்டுபிடிக்கப்பட்டது.*




**V10**, அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

*ஒரு பாவி மனந்திரும்பும்போது ஏற்படுகிற மகிழ்ச்சியைவிட பரலோகத்தில் வேறே பெரிய மகிழ்ச்சி இல்லை. ஏனெனில், மனந்திரும்புதல் தேவனுக்கு பிரியமானது என்று தூதர்கள் யாவரும் அறிந்திருக்கிறார்கள். தூதர்களும் அந்த மகிழ்ச்சியில் பங்கெடுக்கிறார்கள்.*

**காணாமல் போன இரண்டு குமாரர்.**

**லூக்கா** 15:11-32.

*பாவ நடவடிக்கைகளால் கறைபட்டு, தகப்பனின் சுவிசேஷத்தை அசட்டை பண்ணி துன்மார்க்கமாய் வாழ்ந்த ஒரு குமாரன் மனந்திரும்பி வந்தபோது, தன் தகப்பனால் எற்றுக்கொள்ளப்பட்டான்.*

*மீண்டும் பரலோகில் ஏற்படும் மகிழ்ச்சியை நாம் பார்க்கிறோம்.*

*மற்றொருபுறம் பரிசேயரைப்போல் உள்ளான மனதில் பாவமுள்ள மற்றொரு குமாரன். இவன் சுயநீதியை நம்பின குமாரன். மனந்திரும்பவில்லை ஆகவே அந்த மகிழ்ச்சியில் அவனால் கலந்துகொள்ள முடியவில்லை.*

*இந்த அதிகாரத்திற்கு ஒரு தலைப்பு கொடுக்கவேண்டுமானால், "மந்திரும்பும் பாவியினிமித்தம் பரலோகில் ஏற்படும் சந்தோஷம்" என்று கூறலாம்.*

*தொலைந்துபோன குமாரன் மனந்திரும்பி தகப்பனிடத்தில் வரும்போது, தகப்பன் அந்த குமாரனை நோக்கி ஓடுகிறார்.*

*அவனை கட்டி அணைத்து இறுக முத்தஞ்செய்கிறார். இதிலிருந்தே தகப்பனின் தேடுதலும் ஏக்கமும் வெளிப்படுகிறது.*

**1 தீமோத்தேயு 1:1**, நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்,

**1 தீமோத்தேயு 2:3-4**, நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. 4. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

*தேவன் மீட்கும் தேவனாக இல்லையெனில், ஏன் தமக்கும் மனிதருக்கும் இடையில் இயேசு கிறிஸ்து எனும் ஒரு மத்தியஸ்தரை பலியாக ஒப்புக்கொடுத்தார்?*

*நம் கர்த்தர் மீட்கும் கர்த்தர். நாம் இரட்சிக்கப்ப்படும்படி தேவனிடத்தில் மன்றாட வேண்டுவதில்லை. மாறாக அவருடைய ரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும்படி பாவிகளிடத்தில் மன்றாட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.*

**1 தீமோத்தேயு 4:10**, இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

கர்த்தருடைய குணமே ரட்சகர் தான்.

இந்த பார்வையை நாம் இழந்துவிடக்கூடாது. இந்த நற்செய்தியை அறிவித்து ஒப்புரவாக்குவதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

**தீத்து 1:4,** தேவனுடைய ஊழியக்காரனும், இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது

**தீத்து 2:13,** மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்,

**தீத்து 3:**7, அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

இந்த வசனங்களில் வழக்கமான வணக்கத்திற்கு பின்னர், கர்த்தரும் கிறிஸ்துவும் மும்மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒவ்வொருமுறையும் அவர்களுடைய இரட்சிக்கும் குணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவனே ஒப்புரவாக்குதலின் முதல் புள்ளியாய் இருக்கிறார். இது அவருடைய குணம், விருப்பம், சித்தம் மற்றும் திட்டம்.

கர்த்தருடைய ஆக்கினை நீங்கி பாவிகள் ஒப்புரவாகுதல் ஒரு தெய்வீக ஈவு.

இது நாம் அவரை நிராகரிப்பதால் அல்ல, நம்மை அவர் நிராகரிப்பதை நிறுத்தியதால் ஏற்பட்ட ஈவு.

ஆகவே, அவரே ஒப்புரவாகுதலின் அடித்தளமாய் இருக்கிறார்.

### 2. கர்த்தருடைய மன்னிப்பின் விளைவாக ஒப்புரவாகுதல்

பாவங்கள் மன்னிக்கபடுவதால் உண்டானது.

பாவமான்னிப்பில்லாமல் ஒப்புரவாகுதல் இல்லை.

**V 19,** அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

***அவரால் இதை எப்படி செய்ய முடிந்தது?***




ஒரே ஒரு வழி தான். அவர்களுடைய அக்கிரமங்களை நினையாமல் இருப்பதன் மூலமாய் மாத்திரமே.

ஒப்புரவாகுவதற்கு தடையாய் இருக்கிற பாவம் நீங்கினது.

பாவிகளை தம்மோடு ஒப்புரவாக்குவதற்கு ஒரே வழி அவர்களுடைய பாவத்தை அவர்கள்மேல் எண்ணாமல் இருப்பதால்தான்.

கிறிஸ்துவுக்குள் உலகத்தாரை தமக்கு ஒப்புரவாக்கி

*உண்மையாகவே உலகத்தாரை ஒப்புரவாக்கினாரா?*

*இதன் பொருள், யாரும் நரகத்தில் இருக்க மாட்டார்கள் என்பதல்ல.*

*கிறிஸ்து சிலுவையில் எல்லா ஆத்துமாக்களின் எல்லா பாவங்களுக்கான முழு கிரயத்தையும் செலுத்தினாரா?*

*ஆம்.*

*உலகம் என்பது மனுக்குலத்தை குறிக்கும். தூதர்கள் மீது இல்லாத அன்பு, விசேஷமாக மனுக்குலத்தின் மீது அவருக்கு இருந்தது.*

*கிறிஸ்துவின் மரணம் என்னுக்கடங்கா நன்மைகளை கொண்டது ஏனெனில், கிறிஸ்து தேவ குமாரனாய் இருப்பதால். ஆகவே கிறிஸ்துவின் மரணம் உலகத்தின் சகல பாவங்களையும் நிவர்த்தி செய்ய வல்லமையுள்ளதாய் இருக்கிறது.*

*அப்படியானால், கர்த்தர் உலகத்தில் உள்ள யாவரையும் இரட்சிக்க நினைத்தால் வேறொரு பலி அவசியமில்லை.*

***சிலுவையில் உண்டான இந்த பரிகார பலி யாருக்காக?***

**யோவான் 10:11**, “நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்..”

**அப்போஸ்தலர் 20:28**, “தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை”

**எபேசியர் 5:25**, புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,”

**யோவான் 17:20**, நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

*அவருடைய பலி சகல உலகத்தின் பாவத்தை நீக்கும் வல்லமை நிறைந்ததா அல்லது குறைந்ததா என்று சிந்திக்கும்போது, அவரது பலி, அவரை விசுவாசிப்பவர்கள் மாத்திரமே சுதந்தரித்துக்கொள்ள முடியும் என்பதை மறக்கக் கூடாது.*

*இயேசு மனிதன் வாழும் இந்த உலகத்தில் பாவிகள் தேவனோடு ஒப்புரவாகும்படி வந்தார்.*

*பாவத்தை நினையாதிருப்பதன் மூலமே இதை நிறைவேற்ற முடியும்.*

**ரோமர் 4:8**, “எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.”

**சங்கீதம் 32:2**, “எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்..”

*ஆனால் பரிசுத்த தேவன் எப்படி பாவத்தை நினையாமல் இருக்க முடியும்?*

*அவர் பாவத்தை நியாயந்தீர்க்க வேண்டும்.*

*பாவம் நியாயந்தீர்க்கப்பட்ட பின், ஒப்புரவாகுதல் உண்டாகும்.*

*ஒப்புரவாகுதல் தேவ சித்தத்தின்படி தேவ மன்னிப்பினால் உண்டாகிறது.*

### *3. விசுவாசத்திற்கு கீழ்படிவதினால் ஒப்புரவாகுதல்*

*விசுவாசமில்லாமல் ஒப்புரவாகுதல் இல்லை.*

***நமக்கு வேறு எதற்காக ஒப்புரவாகுதலின் ஊழியம் கொடுக்கப்பட வேண்டும்?***

**V20**, தேவனோடே ஒப்புரவாகுங்கள்

இது முழுவதும் தேவனுடைய திட்டமாகவும், தேவனுடைய செயலாகவும் இருக்குமானால், நாம் ஏன் இந்த ஜனங்களோடு போராடி ஒப்புரவாக்க வேண்டும்?

இந்த ஒப்புரவாகுதலின் ஒரு மகத்தான பங்கு, விசுவாசத்திற்கு கீழ்படிவது.

ஆகவே, தேவன் நம் மூலமாய் பாவிகளிடத்தில் மன்றாடுகிறார்.

கர்த்தர் எல்லாவற்றையும் அறிவார், எல்லாம் அவருடைய சித்தம், அவர் ஒரு சிலரை முன்குறித்திருக்கிறார், எல்லாவற்றையும் அவர் முன்னமே தீர்மானித்துவிட்டார் என்றால், நாம் ஏன் ஒவ்வொருவரிடமும் போய் ஒப்புரவாகும்படி மன்றாடி கெஞ்ச வேண்டும்?

ஸ்தானாபதிகளாக நமக்கு கொடுக்கப்பட்ட கடமை பாவிகளிடத்தில் மன்றாடி அவர்களை தேவனிடத்தில் ஒப்புரவாக்குவது தான்.

தேவன் தம்முடைய சொந்த அதிபதிகளை அந்நிய ஜனத்திற்குள் அனுப்பி அவர்களை ஒப்புரவாக்க அழைக்கிறார்.

**அப்போ 16:31,** அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,."

**ரோமர் 10:9-10,** என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். 10. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

நாம் சென்று பாவிகளை விசுவாசிக்கும்படி பிரசங்கிக்கிறோம்.

**ரோமர் 10:11-14,** அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. 12. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். 13. ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். 14. அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத்

தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

நாமே பிரசங்கிக்கிறோம், பாவிகளை விசுவாசித்திற்கு அழைக்கிறோம்.

ஆக, ஒப்புரவாகுதல் தேவ சித்தத்தின்படி, தேவனுடைய மன்னிபினாலும், விசுவாசத்திற்கு கீழ்படிவதாலும் உண்டாகிறது.

இதில் முக்கியமான ஒன்று என்னவெனில், இதை நிராகரிப்பது முற்றிலுமாக பாவிகளின் கைகளில் தான் இருக்கிறது.

**யோவான் 8:24**, ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.."

**யோவான் 8:45**, நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.

### 4. மாற்றுபலி கொடுக்கப்பட்டதால் ஒப்புரவாகுதல்

மாற்றுபலியாக கர்த்தர் எப்படி மற்றொருவரை கொடுக்க முடியும்?

அவர் பாவத்தை எப்படி அணுகுகிறார்?

எப்படி பாவிகளை ஒப்புரவாக்குகிறார்?

அவருடைய நீதியினாலும், பரிசுத்த ஆக்கினையினாலும் பாவத்தை தண்டித்த அதே தேவன் எப்படி இரக்கமற்ற பாவிகளிடத்தில் இரக்கம் காட்ட முடியும்?

**V 21**, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

**V 18,** அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி

**V 19**, கிறிஸ்துவுக்குள் தேவன்

**V 20**, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

*கிறிஸ்துவின் மூலமே ஒப்புரவாகுதல் என்று கூறுகிறார்.*

*இதுவே மாற்றுபலியாக கொடுக்கப்படுதல்.*

*இந்த வசனங்களை வாசிக்கும்போது "அவர்" உண்டாக்கினார் என்பதிலிருந்து, இந்த ஒப்புரவாகுதலின் ஆசிரியர் கர்த்தர் என்று அறிகிறோம்.*

*அவரே அதை தீர்மானித்தார்.*

*அவரே அதை வடிவமைத்தார்.*

*ஒப்புரவாகுதலின் ஊழியத்தை உண்டாக்கின தேவன், ஒப்புரவாகுதலின் வார்த்தையை நமக்கு வெளிப்படுத்தி, நம்மை அந்த வார்த்தைக்கு ஸ்தானாபதிகளாக அனுப்புகிறார்.*

### பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்

*இயேசு கிறிஸ்து பாவமில்லாத ஒருவர்.*

*"இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன்" என்று கர்த்தர் உரைத்தார்.*

*எபிரேயராக்கியோன் கிறிஸ்துவைக்குறித்து எழுதும்போது, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறவர்" என்று கூறுகிறார்.*

**யோவான் 8:46**, என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.

*பாவமற்ற ஒருவரை தேவன் தெரிந்துகொண்டார். பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

***அப்படியென்றால் என்ன?***

*அவரை **பாவமாக்கினார்**.*

*ஒரு சிலர் சிலுவையில் இயேசு **பவியானார்** என்று கூறுவர்.*

*இயேசு பாவியான பின், அதற்கான தண்டனையை ஏற்று, நரகத்திற்கு சென்று பாடுபட்டு, பின்னர் தேவன் அவரை கல்லறையிலிருந்து எழுப்பினார் என்று விளக்கம் கூறுவார்கள்.*

இயேசு பரிசுத்தராயும் பாவமற்றவராயும் ஆதி முதல் சிலுவையிலும், அதற்கு பின்னும் அவ்வாறே இருந்தார். அவரே குற்றமற்ற மாசில்லாத கறைபடாத ஆட்டுக்குட்டி. அவர் சிலுவையில் பாவியாக இல்லை. பாவியாக மாறவுமில்லை.

கிறிஸ்து பாவியாக மாறவில்லை.

அவர் எந்த நியாயப்பிரமாணத்தையும் மீறவில்லை.

அவருடைய பரிபூரணத்திலிருந்து பரிபூரண குறைச்சலாக எதுவும் செய்யவில்லை.

எல்லா பரிசுத்த கிரியைகளையும் நியமிக்கப்பட்ட எல்லாவற்றையும் செய்து முடிப்பதற்கு அவர் தவறவில்லை.

அவர் பாவியாக இல்லாவிட்டாலும், பாவி என்று தேவனால் கருதப்பட்டார். பலி கொடுக்கும் எல்லா முறைமைகளிலும் இது தெளிவாய் விளங்கும். பலி செலுத்தப்படும் மிருகம் எந்த பாவமும் செய்யவில்லை. ஆனாலும், பாவம் செய்தவர் எந்த நிலைக்கு ஆளாக வேண்டும் என்பதை வெளிப்படுத்தும்படி, அந்த மிருகம் பாவம் செய்ததாக கருதப்பட்டது.

அதேபோல், ஏசுவும் சிலுவையில் பாவியாக தொங்கவில்லை. ஆனாலும், விசுவாசிக்கப்போகும் எல்லா மனிதர்களின் எல்லா பாவங்களையும் ஏசுவே செய்ததுபோல் கர்த்தர் அவரை பார்த்தார். இதுவே மாற்றுபலியின் முக்கிய கருத்து.

### இப்படி தேவன் அவரை நடத்தியதன் பொருள் என்ன?

இயேசு பாவமில்லாதவராக இருந்தபோதும், அந்த பாவங்களின் எல்லா ஆக்கினையையும் தம் மீது சுமந்தார்.

**V 21**, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

பாவமில்லாமல் கர்த்தருடைய பிரசன்னத்தில் தைரியமாய் நடந்து செல்வதற்கு நமக்கு என்ன உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது?

ஒரு உரிமையும் நமக்கு இல்லை.

நாம் நீதியற்றவர்கள். ஆனாலும் தேவன் நம்மை நீதிமான்களாக பார்க்கிறார்.

இதுவே மாற்றுபலியின் மற்ற பகுதி.

சிலுவையிலே பாவம் அறியாத இயேசுவை, தேவன் பாவத்திற்கு பாத்திரமாக பாவித்தார்.

அந்த சிலுவையினிமித்தம், நீதியற்ற நம்மை, தேவன் நீதிமான்களாக பாவிக்கிறார். நம்முடைய பாவங்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டன.

பாவங்கள் யாவும் தீர்க்கப்பட்டன.

பாவங்கள் யாவும் மூடப்பட்டன.

பாவங்களுக்கான நீதி வழங்கப்பட்டுவிட்டது.

பாவங்கள் மீதான ஆக்கினை தீர்ந்தது.

அவைகள் மீதான தேவ உக்கிரம் நிறைவேறியது. ஆகவே ஆக்கினைத் தீர்ப்பு இல்லை.

இதுவே மாற்றுபலி.

அவர் பாவியுமல்ல, நாம் நீதிமான்களுமல்ல.

ஆனால் தேவன் அவர் மேல் என் பாவத்தை சுமத்தி, அவரை பாவத்திற்கு பாத்திரமாக பாவித்தார்.

ஆனால் நம்மையோ, இயேசு செய்த எல்லா நீதியின் கிரியைகளையும் நம்மேல் சுமத்தி நீதிமான்களாக பாவிக்கிறார்.

இதுவே சுவிசேஷம்.

இதுவே ஒப்புரவாக்குதலின் ஊழியம்.

இந்த உலகில் உள்ளவர்களுக்கு பாவ வைரஸின் பிடியிலிருந்து குணமாவதற்கு நம்மிடம் ஒப்புரவாகுதல் உண்டு என்பதை அறிவிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆமென்!

## 11. புதிய செயல்திட்டம்

# *12. ஒற்றுமையாய் நடப்போம் - Walk in Unity*

**பிலிப்பியர் 2:1-4,** 1. ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், 2. நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். 3. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக




*பவுலின் இதயத்தில் பிலிப்பியர் சபைக்கு தனி இடம் உண்டு.*

*அவர்களுடைய கீழ்படிதலை மிகவும் பாராட்டுகிறார். கீழ்படிதலில் அவர்கள் சிறந்தவர்கள். பவுல் இருக்கும் போதும் கீழ்படிந்தார்கள், அவர்கள் தொடர்ந்து கீழ்படிய வேண்டும் என்றும் பவுல் விரும்பினார்.*

*இறையியல் கருத்துக்களில் அவர்கள் அவ்வளவு தேறினவர்கள் அல்ல.*

*ஆனாலும் அவர்களை திருத்த வேண்டிய அவசியம் இல்லை.*

*அவர்களுக்குள் அநீதியோ பாவமோ இருந்ததாக தெரியவில்லை.*

*இதுவே தேவ பக்தியோடு தேவ அறிவோடு ஒப்புக்கொடுக்கப்பட்ட உண்மையான சபை.*

*இவை எல்லாம் இருந்தும் ஒற்றுமையும் ஒருமனப்பாடும் இல்லாதபடி பிரிவினை எனும் நச்சுப்பாம்பு அவர்களுக்குள் புகுந்துவிட்டது. இது அனேக சபைகளையும் இன்று துன்பப்படுத்துகிறது.*

**பிலிப்பியர் 1:27**, நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

**பிலிப்பியர் 4:1-3**, ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே **கர்த்தருக்குள்** நிலைத்திருங்கள். 2. **கர்த்தருக்குள்** ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். 3. அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது.

*இந்த கடிதம் ஒருமனப்பாட்டிற்கான ஒரு விண்ணப்பம். இந்த கடிதத்தில் ஒருமனப்பாட்டிற்கான செயல்முறைகள் கூறப்பட்டுள்ளன. இந்த செய்தியின் தலைப்பைபோல் ஆவிக்குரிய ஒற்றுமைக்கு இதுவே அடித்தளம்.*

*பவுல் ஒவ்வொரு சபைக்கும் கடிதம் எழுதி, அந்த சபையில் உள்ள ஒருமனப்பாட்டின் குறைகளை சுட்டிக்காட்டுகிறார்.*

*ரோமர் நிருபத்தில் மூன்று முறை ஒருமனப்பாட்டை குறித்து பேசுகிறார்.*

**ரோமர் 12:10,** சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.

**ரோமர் 12:16**, ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்.

**Romans,** *அதிகாரங்கள்* **14 and 15** *இந்த அதிகாரங்களின் மைய கருத்தே ஒற்றுமையும் ஒருமனப்பாடும்தான்.*

**1 கொரிந்தியர் 1:10**, சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

**2 கொரிந்தியர் 13:11**, கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

***கலாத்தியரில்*** *அதிகாரம் 5 மற்றும் 6.*

***எபேசியரில்*** *அதிகாரம்* **4**

***கொலோசேயரில்*** *அதிகாரம் 3.*

**1 தெசலோனிக்கேயர் 4:9-10,** சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. 10. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்;

**2 தெசலோனிக்கேயர் 1:3-4**, சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது. 4. நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும்

காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறோம்.

பிலிப்பியர் சபையில் இதை ஆழமாக குறிப்பிட்டிருக்கிறார். ஏனெனில், இது கிறிஸ்துவின் சபைக்கு மிக ஆபத்தானதாக முடிய வாய்ப்பிருக்கிறது.

வேதாகமம் ஒருமனப்பாட்டை குறித்து பேசும்போது வெளிப்படையான செயல்களில் ஒருமனப்பாட்டை பேசவில்லை. உள்ளான ஒருமனப்பாட்டை குறித்து பேசுகிறது.

உள்மனதிலிருந்து ஏவப்படும் ஒற்றுமை. வெளியிலிருந்து வற்புறுத்தப்படுவது அல்ல.

அது இருதயத்தின் வாஞ்சையில் இருக்கிறது. வற்புறுத்தலில் அல்ல. வார்த்தைகளால் சொல்லப்படாவிட்டாலும், இந்த ஒருமனப்பாடு உணர்சிப்-பூர்வமானதும் ஆவிக்குரியதுமாய் இருக்கிறது. ஒரே இடத்தில் இருப்பதால் ஒருமனப்படுவதில்லை. ஒரே ஆவியின் வல்லமையினால் ஈர்க்கப்படுவதன் மூலம் ஒற்றுமை வெளிப்படுகிறது.

***ஒரு உதாரணம்:***




ஒரு ஜாடி நிறைய கூழாங்கற்கள் வைத்துப்பாருங்கள். அவைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து இடித்துக்கொண்டுதான் இருக்கும். ஆனால் அந்த கூழாங்கற்களை வெளியே கொட்டினால், அவை சிதறிப்போகும். இந்த கூழாங்கற்களின் ஒருமனப்பாடு அந்த ஜாடியினால் வந்தது.

ஆனால் ஒரு காந்தத்தையும் ஒரு சில இரும்புப் பொருட்களையும் சேர்த்து வைத்துப்பாருங்கள். அவைகள் யாவும் அந்த காந்தத்தின் ஈர்ப்பு சக்தியினால் ஒன்று கூடியிருக்கும். சபையும் காந்த சக்தியினால் இணைக்கப்பட்ட அந்த இரும்புப் பொருட்களைப்போல், எசுவினால் இணைக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சபை என்பது ஒரு ஜாடியில் சேர்த்து கொட்டப்பட்ட கூழாங்கற்கள் போல அல்ல. ஒரே விசை ஈர்ப்பினால் இயக்கப்படும் இரும்பு போல, நம்மை இயக்கும் ஒரே ஈர்ப்பு விசை இயேசு கிறிஸ்துவின் வல்லமை. இதுவே சபையின் உள்ளான ஒருமனப்பாடு.

பவுல் இப்படிப்பட்ட ஒருமனப்பாட்டைத்தான் விசுவாசிகளிடத்தில் எதிர்பார்க்கிறார். சபை இயேசுவினால் ஒன்றுபடுத்தப்பட்டு இயக்கப்பட வேண்டும்.



- ஒற்றுமையின் நோக்கம் – எதற்கு ஒற்றுமையாக இருக்க வேண்டும்?
- ஒற்றுமையின் அடையாளம்
- ஒற்றுமையை கொண்டுவரும் வழிகள்.

**ஒருமனப்பாடு ஒற்றுமை என்றால் என்ன?**

**இதை எப்படி அனுபவிப்பது.**

“ஏக சிந்தையுள்ளவர்களாய்” "Being of the same mind."

**ஏக சிந்தையாய் இருப்பது ஏன் அவசியம்?**

**ஏன் சபையில் ஏக சிந்தை வேண்டும்?**

**நமக்கு ஒரே ஆவியின் அவசியம் என்ன?**

1. ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்,

ஆவிக்குரிய ஒருமனப்பாட்டிற்கு நான்கு நோக்கங்கள் (காரணங்கள்) உண்டு.

- கிறிஸ்துவுக்குள் ஆறுதல் - encouragement in Christ
- அன்பினால் தேறுதல் - consolation of love
- ஆவியின் ஐக்கியம் - fellowship of the Spirit
- உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டு - affection and compassion

இவை அனைத்துமே ஒருமனப்பாட்டோடு இருப்பதற்கு நம்மை உற்சாகப்படுத்துகின்றன.

## *1. கிறிஸ்துவுக்குள் ஆறுதல் - encouragement in Christ*

*ஒற்றுமையாக இருப்பதற்கு நம்மை முதலாவது தூண்டும் காரணி, கிறிஸ்துவுக்குள் ஆறுதல்.*

*ஆறுதல் (**paraklsis**) என்பதன் பொருள், "பட்சமாக வந்து உதவுதல்".*

*பரிசுத்த ஆவியானவருடைய கிரியையும் இப்படியே இருக்கும். ஒருவருக்கு பட்சமாக வந்து உற்சாகப்படுத்தி ஆலோசனை கூறுவது, உதவுவது.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் இந்த உதவியை அனுபவித்திருக்கிறீர்கள். அவர் நம் பட்சத்தில் வந்தார். கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தின் ஆலோசனை, ஆறுதல், உற்சாகம், உதவி, புத்தி ஆகியவற்றை பெற்றோம்.*

*கிறிஸ்து ஒரு நாள் மாத்திரமல்ல, தொடர்ந்து நமக்கு உதவி உண்மையாய் நம்மோடு இருக்கிறார். அதேபோல நாமும் மற்றவர்களிடத்தில், அதே சிந்தையோடு இருக்க வேண்டும்.*

*இந்த அளவில்லா ஆசீர்வாதத்தை நாம் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து ஒரே மனதோடு இருக்க வேண்டும்.*

*ஏன்?*

*ஏனெனில், இதுவே கிறிஸ்துவின் மகத்தான ஜெபம்.*

**யோவான் 17:21** "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்."

**யோவான் 13:35** நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

*கிறிஸ்துவின் இருதயத்தின் வாஞ்சை தம்முடையவர்கள் ஏக சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதே.*

*இரட்சிக்கப்பட்டது முதல் தொடர்ந்து கிறிஸ்து ஆலோசனைகளை தந்து, அறிவுறுத்தி, உதவி நம்மை நடத்தினாரே. அவருடைய இருதயத்தின் வாஞ்சை நாமும் ஒருவரோடு ஒருவர் ஒரேமனதாய் இருப்பதன்மூலம் நிறைவேற்றுவது அவசியமல்லவா?*

*உங்கள் வாழ்வில் கிறிஸ்துவின் ஆதிக்கம் உங்களை கீழ்படிய வைக்கிறதா?*

*இல்லாவிட்டால் கிறிஸ்து செய்தவைகளுக்கு நன்றி மறந்து வாழப்போகிறீர்களா?*

*கிருபையால் அவர் நமக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள்தான் எந்தனை!*

*தமது சபையை குறித்த அவரது நோக்கம், சபை நன்றியறிந்து ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.*

## *2. அன்பினால் தேறுதல் - consolation of love*

*கர்த்தருடைய கனிவான அன்பை, இரட்சிக்கப்பட்ட நாம் ஒவ்வொரு நாளும் பரிசுத்தப்படுவதினால் அனுபவிக்கிறோம். ஒவ்வொரு நாளும் நம்மில் அன்பு செலுத்திநம்மை தேற்றி திடப்படுத்துகிறார் இதை அளவில்லாமல் செய்திருக்கிறார்.*

*அப்படியானால் அவருடைய விருப்பப்படி அவருடைய ஜனங்களிடத்தில் ஒற்றுமையை நாடுவது அவசியமல்லவா?*

*மென்மையான கனிவான ஆலோசனை. ஒருவருடைய பட்சத்தில் வந்து பேசுவது.*

*இது நட்பின் பேச்சுவார்த்தை.*

*நெருக்கமான அன்பின் பேச்சுவார்த்தை.*

*அகாப்பே என்பது ஒப்பற்ற நிகரில்லாத அன்பு.*

*அவர் தொடர்ந்து நம்மை தேற்றி, நம்மில் அன்பு செலுத்தி கனிவான ஆலோசனைகளை தந்து, பட்சமாக வந்து நண்பனைப்போல் பேசி எவ்வளவாய் நம்மில் அன்பு செலுத்துகிறார்.*

*ஒருமனப்பாட்டின்மை சபைக்கு விரோதமாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு அல்ல.*

*தனிப்பட்ட விசுவாசியாக நமக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவின் வெளிப்பாடு.*

*நம் மீது அளவுகடந்து நாளுக்கு நாள் அன்பு செலுத்தும் தேவனுக்கு நாம் செய்யும் மிகப்பெரிய நன்றியின் கைமாறு ஒற்றுமையாய் இருப்பது தான்.*

*கிறிஸ்துவிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு என்னிடம் எதையும் கேட்காதீர் என்று கூறுவது எப்படி ஒரு நல்ல உறவாக இருக்க முடியும்?*

*ஒற்றுமையின்மை ஒரு தனிப்பட்ட பாவம் அல்ல. தாவீது சங்கீதம் 51ல் பத்சேபாளுக்கு விரோதமாய், உரியாவுக்கு விரோதமாய், இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாய் பாவம் செய்திருந்தாலும், முதலாவது கர்த்தருடைய*

*வெளிப்படுத்தப்பட்ட கற்பனைகளுக்கு விரோதமாய் பாவம் செய்தார். இப்படிப்பட்ட சிந்தை கர்த்தருக்கு விரோதமாய் நமக்கு வேண்டும். நான் சிறிய தவறு இழைக்கவில்லை, கிறிஸ்துவுக்கும் எனக்கும் உள்ள உறவில் விரிசல் வர அனுமதித்திருக்கிறேன்.*

*பிலிப்பியருக்கு பவுல் மிகவும் கனிவான வார்த்தைகளை கொண்டு பேசினார். ஏனெனில் அவர்கள் மீது அவ்வளவு கனிவான அன்பு செலுத்தினார்.*

*கிறிஸ்துவின் அன்பை ஒரு எடுத்துக்காட்டாக வைத்து ஒற்றுமையாய் இருக்க அழைக்கிறார்.*

### *3. ஆவியின் ஐக்கியம் - fellowship of the Spirit*

*ஆவியின் யாதொரு ஐக்கியமும்*

***Koinonia** – உடன் பங்காளியாக, ஐக்கியம், பகிர்ந்து கொடுத்தல்*

*ஆவியானவரின் ஐக்கியத்தில் இருப்பீர்களேயானால்; பவுல் இப்போது ஆவியானவரை கொண்டு விளக்க விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் ஒற்றுமையை விரும்புவார் என்று நினைக்கிறீர்களா?*

*நிச்சயமாக விரும்புவார்.*

*சபையின் ஒற்றுமை பரிசுத்த ஆவியானவரின் ஒற்றுமை என்று* **1 Corinthians 12:13***ல் வாசிக்கிறோம்.*

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

*நாம் யாவரும் ஒரே ஆவியினால் உண்டாக்கப்பட்டு, ஆவியானவருடைய ஆலயமாய் இருக்கிறோம். அவருடைய வாசஸ்தலம் நாம், ஒரே ஆவியில் இருக்கிறோம்.*

*ஆவியானவர் ஒற்றுமையை விரும்புகிறார். அவரே ஒற்றுமைக்கு ஆதாரமாக இருக்கிறார். ஒற்றுமை அவர் மூலமாய் வருகிறது.*

*நாம் ஆவியானவரோடு ஐக்கியத்தில் இருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். அப்படியென்றால் என்ன?*

- ✓ *பரிசுத்த ஆவியானவர் அருளக்கூடிய ஐக்கியத்தில் இருக்கிறோம்.*
- ✓ *ஆவியானவர் நமக்குள் வாசம்பன்னுகிறார்.*

- ✓ நாமே ஆவியானவருடைய ஆலயம்.
- ✓ அவருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டோம்.
- ✓ ஆவியானவரின் அச்சாரம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
- ✓ நமது நித்திய சுதந்திரத்தின் அச்சாரம் அவரே.
- ✓ ஆவியானவரால் நிரப்பப்படுகிறோம்.
- ✓ ஆண்டவரை சேவிப்பதற்கு ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்படுகிறோம்.
- ✓ ஆவியின் வரங்கள் நமக்கு அருளப்படுகின்றன.
- ✓ ஆவியானவரால் பரிசுத்தப்படுத்தப்படுகிறோம்.

இடைவிடாமல் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளால் ஆவியானவர் நமக்காக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அந்த பெருமூச்சுகள் தேவ பாஷையில் இருப்பதால் நம்மால் புரிந்துகொள்ள முடியாதவை. ஆகவே தான் நாம் இன்னவிதமாய் ஜெபிக்க வேண்டும் என்று அறியாதிருக்கும்போது ஆவியானவர் நமக்கு உதவுகிறார்.

- ➢ ஆவியானவர் நமக்காக யாவையும் செய்திருக்கிறார்.
- ➢ நம்மை மறுபடியும் பிறக்க செய்தவர் அவரே.
- ➢ அவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார்.
- ➢ நித்திய மகிமையின் அச்சாரமாய் இருக்கிறார்.
- ➢ இடைவிடாமல் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளால் நமக்காக பரிந்து பேசுகிறார்.
- ➢ வரங்களை கொடுத்து, நிரப்பி, கனி கொடுக்க உதவுகிறார்.
- ➢ நமக்கு உபதேசிக்கிறார். கற்றுக்கொடுக்கிறார்.
- ➢ சோதனைகள் இச்சைகளை மேற்கொள்ள பெலன் தருகிறார்.
- ➢ வார்த்தயாகிய வசனத்தை நமக்கு கொடுத்திருக்கிறார்
- ➢ பரிசுத்த உணர்வுகளால் நிரப்பியிருக்கிறார்.
- ➢ ஜீவனுக்கும் தேவ பக்திக்குமான யாவற்றையும் கொடுத்திருக்கிறார்.

இவ்வளவு நமக்கு கொடுத்தவருக்கு, அவருடைய மன விருப்பத்திற்கு விரோதமாய் சபையின் ஒற்றுமை குலைக்கப்படலாமா?

- ➢ அப்படி குலைச்சலை கொண்டுவருவது ஆவியானவருடன் உள்ள உறவை சீர்குலைக்கிறது.
- ➢ இதுவே பரிசுத்த ஆவியானவரை அவித்துப்போடுவதாகும்
- ➢ கிருபையின் ஆவியானவருக்கு துரோகம் இளைப்பதுபோன்றதாகும்

ஆவியானவர் கொடுக்கும் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு எதையும் திரும்ப தர மாட்டேன் என்று நீங்கள் கூறுவது போல் இருக்கும்.

“Sin in the life of a Christian in its simplest definition is a tragic act of ingratitude and a violation of a relationship.”
கிறிஸ்தவ வாழ்வில் பாவம் நன்றியற்ற துரோகமான காரியம்.

இது கிறிஸ்துவுக்கும் ஆவியானவருக்கும் விரோதமான செயலாகும். நாம் தேவனை மகிமைப்படுத்தும் செயல்கள் யாவும் ஆவியானவரின் வெளிப்பாடேயாகும். அவரே நமக்கு கனிவையும், அன்பையும், பொறுமையையும், தாழ்மையையும் அளிக்கிறார்.

சபைக்கு வந்து சபையின் ஒற்றுமையை குலைப்பது கிறிஸ்துவுக்கும் சபையை நேசிக்கும் ஆவியானவருக்கும் இழைக்கும் துரோகமாக இருக்கிறது.

பவுல் பிலிப்பியர் சபையை வேறொரு கோணத்தில் அணுகுகிறார். கொரிந்தியருக்கு எழுதினதுபோல் எந்த ஒரு கண்டிப்பும் பயமுறுத்தலும் இல்லை. மிகவும் கனிவான வார்த்தைகள். இது எப்படி இருக்கிறது என்றால்:

ஒரு தந்தை தன் மகனிடம் அமர்ந்து.

- மகனே, நம் குடும்பத்தில் உன்னை நேசிக்கிறோமா? நானும் உன் தாயும் உன்னை உண்மையாய் நேசிக்கிறோமா?
- நீ வருத்தப்பட்டு பாரமாய் இருந்தபோது உனக்கு அருகில் வந்து உன்னை தேற்றினோமா?
- நீ பசியாய் இருந்தபோது உணவு கொடுத்தோமா?
- உடை கொடுத்தோமா?
- சிறு வயது முதல் உன்னை பராமரித்து வந்தோமா?
- உனக்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தோமா?
- உன்னை நல்ல மனமகிழ்ச்சியாய் பார்த்துக்கொண்டோமா?
- உனக்கு படுக்கை அளித்தோமா?
- வீடு வசதி செய்து கொடுத்தோமா?
- மிகுந்த அன்பு செலுத்தினோமா?
- கீழ்படியாமல் நீ முரட்டாட்டம் பண்ணின போதும் உன்னை கிருபையாய் தயவு பாராட்டினோமா?
- கரிசனை காட்டினோமா?
- இரக்கம் பாராட்டினோமா??
- பொறுமையாய் உனக்கு கற்றுக்கொடுத்தோமா?

- நங்கள் உன்மீது காட்டின நன்மையையும் இரக்கத்தையும் மனதுருக்கத்தையும் நீ அனுபவித்தாயா?

மகனே இவ்வளவும் உண்மையாய் இருக்க, எங்களுக்கு மனமகிழ்ச்சி அளிக்கும்படி நீ நடந்துகொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்ப்பது தவறா?

**V 2,** இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

கிறிஸ்துவோடும் ஆவியானவரோடும் நெருக்கமான உறவில் இல்லாதபோது, அவர்களின் விருப்பத்தை நாம் நிறைவேற்றுகிறதில்லை.

குறைந்தபட்சம் பவுலாகிய எனக்ககவாவது ஒற்றுமையாய் இருங்கள் என்று இந்த வசனத்தின்மூலம் மன்றாடுகிறார்.

பவுல் ஒரு போதகராக அவர்களிடத்தில் பேசுகிறார்.

என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்

**எபிரெயர் 13:17,** உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

உங்கள் மேல் கர்த்தர் வைத்த தலைவர்களை சந்தோஷப்படுத்துங்கள்.

பவுல் இந்த வாக்கியங்களை உருக்கமாய் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுதுகிறார்.

பிலிப்பியர் பவுலை அறிந்திருந்தனர். அவர்கள் அவரை நேசித்தனர். அவரும் அவர்களை நேசித்தார்.

இது ஒரு அற்புதமான உறவு.

## ஒற்றுமை / ஒருமனப்பாட்டின் அடையாளம் - *The marks of unity*

2. நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

இவைகளே ஆவிக்குரிய ஒருமனபாட்டின் அடையாளங்கள். இவைகளை நீங்கள் தனித்தனியே நன்றாய் புரிந்துகொள்ளவும், மொத்தமான தொகையாக புரிந்துகொள்ளவும் நான் விரும்புகிறேன். ஆகவே நன்றாய் கவனியுங்கள்.

### *a) ஏக சிந்தையுள்ளவர்களாய்*

*இந்த வார்த்தையின் கிரேக்க பதம்* **phrone** *என்பதாகும். இதற்கு ஒரேமாதிரியாக சிந்திப்பது என்று அர்த்தம்.*

*ஒற்றுமையாய் இருப்பதற்கு முக்கிய அடித்தளம் ஒரே சிந்தனை. ஒரே சிந்தனை ஆவிக்குரிய ஒற்றுமைக்கு அஸ்திபாரமான ஒன்று.*

*ஒரே சிந்தனை இல்லாத இடத்தில் சச்சரவுகள் இருப்பதை நாம் காணலாம்.*

*உங்கள் இறையியல் கருத்துக்களில் ஒரே மாதிரி சிந்தியுங்கள் என்று தேவ ஆவியானவர் சொல்லவில்லை.*

*உங்கள் பழக்கவழக்க நெறிமுறைகளில் சரியாக இருங்கள் என்று சொல்லவில்லை.*

*இவை இரண்டிலும் அவர்களுக்கு குறைவில்லை.*

*பிலிப்பியர் சபையில் பெருத்த பாவம் என்று எதுவும் இல்லை.*

*பிரச்சனை என்னவென்றால் அவர்களுடைய மனப்பான்மை / attitude.*

*நாம் ஒரே சிந்தையுள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால். நம் மனப்பான்மை ஒன்றாக இருக்க வேண்டும்.*

***நாம் எப்படி நம் மனப்பான்மையை ஒன்றுபடுத்த முடியும்?***

**ரோமர் 8:4**, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

*இங்கு மாம்சத்திற்கும் ஆவிக்கும் உள்ள வேறுபாட்டை வெளிச்சத்தில் கொண்டுவருகிறார்.*

**ரோமர் 8:5**, அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். 6. மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

*இதே வார்த்தைகளை பிலிப்பியர் 2லும் நாம் காண்கிறோம்.*
*இரண்டு சாத்தியங்கள் உண்டு.*

ஒன்று ஆவியினால் சிந்திப்பது, மற்றொன்று மாம்சத்தினால் சிந்திப்பது.

நாம் ஒரே சிந்தையுள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால், நம்முடைய சிந்தை ஆவியானவருடைய சிந்தையோடு இணைந்திருக்க வேண்டும்.

அப்படியானால், முதலாவது கோட்பாடு என்ன? தேவ ஆவியானவருடைய சித்தனை நமது சிந்தனையாக இருக்க வேண்டும்.

ஆவிக்குரிய சிந்தனைகள் நமக்கு வேண்டும்.

நம்முடைய இந்த ஞானத்தை மீறி, நமது விருப்பங்களை மீறி, நமது மாம்சத்தை மீறி, பாவ சிந்தனைகளை மீறி ஆவியானவருடைய சிந்தனைக்குள் நாம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

We must realize that the conflict is between the Spirit and the flesh never the Spirit and the Spirit.

நன்றாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய காரியம் என்னவெனில், எப்போதும் மாம்சத்திற்கும் ஆவிக்கும்தான் வேறுபாடுகள் உண்டு. ஆவியும் ஆவியும் வேறுபாட்டில் இருப்பதில்லை.

ஆவிக்குரிய சிந்தனை கொண்ட இருவர் ஒருவருக்கொருவர் வேறுபடுவதில்லை. வேறுபாடுகள் இருக்குமானால், அதில் உள்ள ஒருவரோ அல்லது இருவருமோ ஆவிக்குரியபடி சிந்திக்கவில்லை என்று பொருள்.

ஆகவே, ஆவிக்குரிய சிந்தனை நமக்கு வேண்டுமானால், ஆவியானவருடைய சிந்தனையோடு நாம் இணைய வேண்டும்.

**ரோமர்** 12:3, அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

இரண்டாவது கோட்பாடு. தெளிந்த தெய்வீக எண்ணத்தோடு நிதானிக்க வேண்டும். இது ஒரு பாரபட்சமற்ற பொதுவான எண்ணமாக இருக்க வேண்டும். தன்னைக்குறித்து மாத்திரமே இருக்ககூடாது. அப்படி தன்னைக்குறித்ததாக மாத்திரம் இருந்தால் நாம் சிக்கலில் சிக்கிக்கொள்வோம். இது ஆவியானவரின் சிந்தனை அல்ல.

தெளிந்த எண்ணம் பாரபட்சமற்றது, பொதுவானது. தன்னைக்குறித்து மாத்திரம் சிந்திப்பது தெளிந்த எண்ணமல்ல.

- எனக்கென்று ஒரு குறிக்கோள்
- எனக்கென்று சில முன்னுரிமைகள்
- என் சிறிய ஸ்தலம்
- என் தனிப்பட்ட ஆசைகள்
- என் தனிப்பட்ட குறுகிய வட்டம் – நான் பாதுகாத்து பராமரிக்கும் வட்டம்
- நம்முடைய பெருமை நம்மை எந்த எல்லைக்கும் தள்ளிவிடும்
- இவற்றில் பாரபட்சமற்ற பொதுவான சிந்தனை இல்லை. இது தனிப்பட்ட சிந்தனை.

**ரோமர் 15:5,** நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு,

ஏக சிந்தையில் கிறிஸ்து முக்கிய பங்கு வகிக்கிறார்.

நாம் ஆவியானவருடைய சிந்தனைகளை சிந்திக்கிறோம்.

தேவ சிந்தையோடு, தெளிந்த என்னமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

பிரச்சனைகள் யாவும் பாவ மனப்பான்மையால் வருகின்றவை. தேவ ஆவியானவருடைய சிந்தையும், கிறிஸ்துவினுடைய சிந்தையும் நமது மாம்ச சிந்தையோடு மோதிக்கொள்ளும்போது பிரச்சனைகள் வரும். நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்க வேண்டும்.

**1 கொரிந்தியர் 2:16**, **கர்த்தருக்குப்** போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.

- உங்களுக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டு
- கிறிஸ்துவைப்போல் நீங்கள் சிந்திக்க முடியும்
- கிறிஸ்துவின் மனப்பான்மையை நாமும் பெற்றுக்கொள்ளலாம்
- கிறிஸ்துவின் சித்தத்தையும், தேவ சித்தத்தையும், ஆவியானவரின் சித்தத்தையும் அறிந்துகொள்ளலாம்.
- ஆவிக்குரிய காரியங்களை சிந்திக்கலாம்’

**1 கொரிந்தியர் 3:1-3**, மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று.

2. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. 3. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

இதன் பொருள் என்ன?

மாம்ச சிந்தை மாத்திரமே இருக்கிறது.

தேவ சிந்தையோ, கிறிஸ்துவின் சிந்தையோ, ஆவியானவரின் சிந்தையோ இல்லை என்பதே இந்த வசனத்தின் பொருள்.

முற்றிலும் மாம்ச சிந்தை.

**2 கொரிந்தியர் 13:11**, கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

ஆனாலும் இது நற்சீர்பொருந்தும் பாதையில் ஒன்று. சீர்பொருந்தி ஏக சிந்தையாயிருங்கள் என்று பவுல் கூறுகிறார்.

ஆவிக்குரிய முதிர்ச்சியின் பாதையில் இதுவும் கடந்துபோகும் ஒரு பாதை. மாம்சப்பிரகாரமாய் ஆவியில் முதிர்ச்சியடையாமல் இருக்கும்போது, திரித்துவ தேவனுடைய சிந்தையோடு நாம் போராடுகிறவர்களாக இருக்கிறோம்.

**கொலோசெயர் 3:2**, பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்..

ஆவியானவரின் எண்ணங்களை சிந்தியுங்கள். பிதாவின் சிந்தனைகள் நம்முடையதாகட்டும். குமாரனின் விருப்பம் நமதாகட்டும். நற்சீர் பொருந்தி முதிர்ச்சியாய் சிந்தியுங்கள், ஆவிக்குரியபடி சிந்தியுங்கள், பரலோக சிந்தனைகளை சிந்தியுங்கள்.

நாம் எப்படி ஆவிக்குரிய சிந்தனை சிந்திப்பது?

பிதவைப்போல், குமாரனைப்போல், ஆவியானவரைபோல் எப்படி தெளிந்த எண்ணத்தோடு சிந்திக்க முடியும்?

நம் மாம்சத்திற்கு எப்படி தப்பி சிந்திக்க முடியும்.

**கொலோசெயர் 3:12-16,** 12. ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;
13. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.
14. இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.
15. தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.
16. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே **கர்த்தரை**ப் பக்தியுடன் பாடி;

வசனத்தை அறிந்துகொள்ளுங்கள் என்று சொல்லவில்லை.

மாறாக வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக என்று கூறுகிறார்.

கர்த்தருடைய வசனம் சகல ஞானத்தோடும் பரிபூரணமாய் நம் இருதயத்தில் வாசம் செய்யுமானால், ஆவியானவருடைய எண்ணங்களின்படி நாமும் சிந்திக்க முடியும். கிறிஸ்துவின் சிந்தையை நம் வாழ்வில் வெளிப்படுத்த முடியும். தேவ ஞானத்தோடு தெளிந்த எண்ணங்கள் மூலம் நிதானிக்க முடியும், பரலோக சிந்தனையினால் நிரம்ப முடியும்.

உங்கள் உணர்வுகள் ஆவிக்குரிய உணர்வுகள். உணர்வுகள் ஆவிக்குரியவையாக இருக்கும்போது, இயல்பாக நம்முடைய செயல்களும் அப்படியே அமைந்துவிடும்.

உங்கள் இருதயத்தில் கிறிஸ்துவின் வார்த்தை பலமாய் தங்கி, இருதயத்தை ஆளும்போது, அதுவே உங்கள் வாழ்வை வழிநடத்தும் வல்லமையாக மாறுகிறது.

சபையில் பிரச்சனைகள் வருவது, இறையியல் கருத்துக்களாலோ கோட்பாடுகளாலோ வருவத்தில்லை, மாறாக மனப்பான்மையின் போராட்டங்களே பிரச்சனைகளாக வருகின்றன.

திரியேக தெய்வத்திடம் பிரச்சனைகள் இல்லையே.

*கர்த்தர் கிறிஸ்துவுடனோ, கிறிஸ்து ஆவியானவருடனோ, ஆவியானவர் தேவனுடனோ வேறுபட்ட கருத்துக்களில் இல்லையே.*

*அவர்கள் ஒரே சித்தத்தில் இயங்குகிறார்கள்.*

*நாம் அப்படிப்பட்ட தெய்வீக என்னத்தோடு சிந்திப்பதில்லை.*

*நம்முடைய செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன தெரியுமா? உடனே பேசு, கொஞ்சம் பொறுத்து சிந்தி, அதிலும் பொறுத்து ஜெபி, அதிலும் பொறுத்து தியானி, அதிலும் பொறுத்து தேவ இருதயத்தை நாடு.*

### *b) ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து*

*நாம் ஏக சிந்தையுள்ளவர்களாய் இருக்கும்போது, ஏக அன்புள்ளவர்களாயும் இருப்போம்.*
*யாவரையும் ஒரே மாதிரியாய் நேசிக்க வேண்டும் என்பது இதன் பொருள். இது அன்பின் உணர்வை குறித்து சொல்லவில்லை, ஏனெனில், நம் உணர்வுகள் எல்லோரிடமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.*

**ரோமர் 12:10**, சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.

**யோவான் 15:13,** ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

**1 யோவான் 3:16**, அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

*அன்பு மற்றவர்களுடைய தேவையை முன்னிட்டு செயல்படும்.*

**யோவான் 3:16**, தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

*கிறிஸ்துவும் ஆவியானவரும் உங்கள் மூலமாய் மற்றவர்களை நேசிப்பார்கள். அதின் விளைவாக அன்பு ஒருவரிடத்திலொருவர் வெளிப்படும்.*

### *c) இசைந்த ஆத்துமாக்களாய்*

2. நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

இது வாஞ்சையையும் குறிக்கோளையும் குறிக்கும் வாசகம்.

நம் அனைவருக்கும் ஒரே வாஞ்சை பாரம் இருக்குமானால், நாம் இசைந்த ஆத்துமாக்களாய் இருப்போம்.

ஒருவருக்கு இணைந்த கிறிஸ்துவின் சபையை காணும்படி வாஞ்சை இருந்து மற்றவர் அப்படிப்பட்ட கருத்தை பாரமாக எண்ணினால், குழப்பமே வரும். குழப்பத்திற்கு காரணம் கேட்டாலும் சொல்ல முடியாதபடி இருப்பார்கள்.

இதற்கு காரணம் மாம்சத்திற்கு இடம் கொடுப்பதே. மாம்சம் வஞ்சிக்கும்.

இந்த எண்ணம், இருதயத்தை நடைமுறைக்கு புறம்பான யோசனைகளால் நிறையச் செய்து, இருதயத்தை கசப்பக்கி, சபையின் ஒற்றுமையை குலைத்துவிடும்.

சபையின் மகிமையே முதல் எண்ணமாக இருந்தால், அந்த எண்ணம், சபையையும் ஒற்றுமையாக்கும்.

கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே நம் ஒரே எண்ணமாக இருந்தால், அந்த எண்ணம் ஒருமனப்பாட்டை விளைவிக்கும்.

ஆவியின் ஐக்கியம் நம் வாஞ்சையாக இருந்தால், ஒற்றுமையாக செயல்படுவது சாத்தியம்.

தேவனை மகிமைப்படுத்துவதே ஒரே நோக்கமாக இருந்தால், ஒற்றுமை நிச்சயம் சாத்தியம்.

சுய இச்சையினாலும், பெருமையினாலும், பொறாமை, வெற்று கர்வத்தினாலும், வேறே சிந்தனைகளாலும் நிறைந்திருக்கும்போது, இந்த ஒற்றுமை ஒருமனப்பாடு சாத்தியமல்ல.

ஒரே வாஞ்சை இருக்கும்போது, ஒரே நோக்கமும் இருக்கும்.

***உங்கள் நோக்கம் என்ன?***

முறையிடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கும்.

ஒரே சிந்தையில் தொடங்கும்போது, ஒரே மனமும், ஒரே அன்பும் வெளியாகும்.

அந்த ஒரே அன்பு, ஒரே நோக்கம் என்னும் அற்புத வாஞ்சையால் நிரம்பும். தனிப்பட்ட நோக்கங்கள் இல்லாமல் ஏக சிந்தையும் ஒரே திவ்விய நோக்கமுமாய் இருக்கிற பெரும் கூட்டத்தை எழுப்பும்.

அந்த திவ்விய நோக்கம், தேவனை மகிமைப்படுத்தி, தேவ ராஜ்ஜியத்தை பிரஸ்தாபப்படுத்துவதுதான்.

### ஒற்றுமையை கொண்டுவரும் வழிகள்

அப்படிப்பட்ட ஒற்றுமையை அடைவதற்கு வழிகள் என்ன?

**V3-4,** ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். 4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

ஐந்து நடைமுறை வழிகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

இவை ஒன்றோடொன்று நெருக்கமாக இணைக்கப்பட்ட காரியங்கள்.

மூன்று செய்யக்கூடாதவை. இரண்டு செய்ய வேண்டியவை.

எப்போதுமே செய்யக் கூடாதவையும் செய்ய வேண்டியவையும் கலந்ததுதான் கீழ்படிதல்.

#### *a) ஒன்றையும் வாதினாலாவது செய்யாமல் - Do nothing from selfishness*

வாது அல்லது சுயம் வந்துவிட்டாலே மற்ற எல்லோரிடமும் பிரச்சனையில்தான் அது முடியும்.

சுய விருப்பம் வாக்குவாதத்திலும், சண்டையிலும் சென்று முடியும்.

**கலாத்தியர் 5:20**, விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,

இது ஆவியானவரின் கிரியை அல்ல. இது மாம்சத்தின் கிரியை.

இது சுய பெருமை (Egotism), தன்னை தான் எப்போதுமே அது முன்னிறுத்தும். சுய பெருமை சுய விருப்பத்தோடு இனைந்தால் பெரும் பாதகமாக முடியும்.

*ஆகவே, முதலாவது சுயநலம் எனும் அரக்கனை வீழ்த்தி, நம்மை ஆட்கொள்ளும் சுய பெருமையை விடுத்து, தன் விருப்பப்படி நம்மை நடத்தும் மாம்சத்தை விட்டொழிய வேண்டும்.*

**1 கொரிந்தியர் 1:10-12**, சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 11. ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. 12. உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன்.

*அவர்கள் தங்களை சிறிய குழுக்களாக பிரித்துக்கொண்டனர்.*

*பவுலை சார்ந்தவன்.*

*பேதுருவை சார்ந்தவன்.*

*அப்பொல்லோவை சார்ந்தவன்.*

*கிறிஸ்துவை சார்ந்தவன்.*

*ஏன் அவர்கள் இப்படி பிரிந்தார்கள் என்று நமக்கு தெரியாது.*

*சுயம், சுயநலனை விளையச்செய்யும்.*

*பவுலிடமோ, பேதுருவிடமோ, அப்போல்லோவிடமோ, கிரிஸ்துவிடமோ பிரச்சனை இல்லை. ஆனால் சுயநலம் மேற்கொள்ளும்போது, பொறாமையும், பொறாமையின் விளைவாய் பிரச்சனையும், பிரச்சனையின் மூலம் பிரிவினையும், பிரிவினையின் விளைவாய் ஒற்றுமையின்மையும் வரும்.*

*ஆகவே சுயநலனையும், சுய குறிக்கோள்களையும் நாம் விட்டு ஒழிய வேண்டும்.*

### *b) வீண்பெருமையினாலாவது செய்யாமல் - Not according to vain glory*

*வீண் பெருமை என்பது தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு மகிமை சேர்க்கும் மனதின் கிரியையாகும்.*

குறிக்கோள் தனிப்பட்ட மனிதனின் மகிமையை முன்னிறுத்துகிறது. உண்மையாகவே தவறான எண்ணம் கொண்ட ஒருவன், தான் சொல்வதுதான் சரி என்று சொல்வதுதான் இதன் வெளிப்பாடு.

முதலாவது, அவன் தன்னைக்குறித்தே சரியாய் நிதானிக்கவில்லை.

தெளிவாய் திறம்பட சிந்திக்காமல், கண்மூடித்தனமாக சிந்திப்பது.

தனக்கு இதில் என்ன மகிமை உண்டு என்று அதையே நாடுவது. இப்படிப்பட்டவர்கள், தாங்கள் செய்ததுதான் சரி என்று சொல்வார்கள், தாங்கள் தான் சரியானவர்கள் என்று சொல்வார்கள். இந்த எண்ணம் எப்போதுமே ஒரு மாயையில் கொண்டு சேர்த்துவிடும்.

### c) மனத்தாழ்மையினாலே - Humility of Mind

மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

சுய குறிக்கோள்களோடு, சுய நலத்தோடு செயல்படாமல். மனத்தாழ்மையோடு செயல்படும்போது, அங்கு ஒருமனப்பாடு பிறக்கிறது.

---

## ஒற்றுமையும் ஒருமனப்பாடும் தாழ்மையில் பிறக்கிறது.

---

நான் எப்படி மற்றவர்களை என்னை விட உயர்வானவர்களாக பார்க்க முடியும்?

நாம் மற்றவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க அவசியமில்லை.

நம்முடைய இருதயத்தின் பாவம், மற்றவர்களை விட நமக்கே நன்றாக தெரியும். இப்போது உங்களை நீங்களே ஒரு கேள்வி கேளுங்கள், “நீங்கள் சந்தித்த மிகப்பெரிய பாவி யார்?”

நேர்மையாக பதிலளித்தால், எல்லா மனிதனுக்கும் தெரியும் அது அவன் தான் என்று.

நம்மைகுறித்து தாழ்வாக எண்ணுவதற்கு நமக்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன.

*ஆகவே மற்றவர்களை உயர்வாக எண்ணுவதில் எனக்கு எந்த பிரச்சனையும் இருக்கக்கூடாது.*

*பவுல் தன்னைக்குறித்து சொல்லும்போது, "அப்போஸ்தலர்களிலே சிறியவனாய் இருக்கிறேன்" என்று தன்னை கூறுகிறார்.*

*இது மாயையான பணிவா?*

*இல்லை, பவுலை குறித்து பவுலுக்கு தான் நன்றாக தெரியும்.*

**1 தீமோத்தேயு 1:15**, பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்.

**V 4,** *"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக."*

*நாம் வாழ்கிற இந்த உலகம், தன்னை தவிர யாரைக்குறித்தும் கவலைப்படாத உலகம்.*

*நம்முடைய வாழ்கையை குறித்து நாம் சிந்திக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அது மாத்திரமே முக்கியமானதாக இருக்கக்கூடாது.*

*உங்கள் சொந்த ராஜ்ஜியத்தை குறித்து மாத்திரம் சிந்திக்கிறவர்களாய் இருக்காதீர்கள்.*

*கிறிஸ்துவின் சபையில், நாம் ஒரு சிறிய பகுதி மாத்திரமே. முழுமையான சபையை காண கற்றுக்கொள்ளுங்கள்.*

*இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் மிகவும் கவலைக்கிடமானதாக இருக்கிறது.*

*சுய நலத்தை விடுத்து, சுய குறிக்கோள்களை விடுத்து, சுய ராஜ்ஜியத்தை விடுத்து, வெறுமையை விடுத்து, சுய பெயர் பெருமையை விடுத்து, மற்றவர்களை விட பெரியவன் என்கிற என்னத்தை விடுத்து, கர்த்தரை ஒற்றுமையாய் சேவிப்போம்.*

*உங்கள் ஜீவனை உங்களை குறித்து சிந்திப்பதிலே மாத்திரம் செலவிட்டு விடாதீர்கள். மற்றவர்களுடைய நலனையும் கருத்தில் கொள்ளுங்கள். அவர்கள் உங்கள் எண்ணங்களிலும், உங்கள் ஜெபத்திலும் இருப்பதற்கு தகுதியானவர்கள் தான்.*

இது மிகவும் உயரிய சிந்தனை. ஆனாலும், நாம் இதை மற்றவர்களிடத்தில் எதிர்பார்ப்போம் அல்லவா? இவற்றை நம்மால் செய்ய முடிந்தால், போட்டி பொறாமைகளை கிறிஸ்துவின் சபையிலிருந்து முற்றிலுமாக நீக்கலாம்.

கிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

கிறிஸ்து எதையுமே சுயநலத்தில் செய்யவில்லை.

அவர் செய்த எல்லாமே பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக செய்யப்பட்டவை, நாம் இரட்சிக்கப்படுவத்தின் நிமித்தமே அவர் எல்லாவற்றையும் செய்தார். எந்த செயலுமே வெற்று கர்வத்தினால் கிறிஸ்து செய்யவில்லை.

**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com